KALKI 25.8.91
ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

கல்கி



வரலக்ஷ்மி வருவாள் வரமெல்லாம் தருவாள்



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கி-யுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த சீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016.


எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்

நெஸ்டம்

பரிதாபப் பிரதமர்

அகஸ்தியர் கமண்டலத்துக்குள் அடக்கப் பார்த்த இந்த நதியை, பங்காரப்பா கர்நாடகத்துள் அடைக்கப் பார்க்கிறார். பிள்ளையார்க்காகம் போன்ற தந்திரத்துடன் செயல்பட வேண்டிய பிரதமர், அரசியல் நிர்ப்பந்தங்களுள் கட்டுண்டு பரிதாபமாய் விழிக்கிறார்.

உ.பி, பீஹார் மற்றும் ஹிந்திவளைய



கிடுகிடுத்தது நாடாளுமன்றம்!

மாநிலங்களின் உறுப்பினர்கள் கோலோச்சிய நாடாளுமன்றம் இன்று வாயில் நுழையாத (வாழப்பாடி என்று எந்த வட இந்தியரையாவது சொல்லச் சொல்லி சிரிக்காமலிருக்க முயன்று பாருங்கள்) பெயர்களையுடைய, மீசை வைத்த, நிறம் மங்கிய, தென்னிந்தியர்களின் சச்சரவால் கிடுகிடுப்பதில் இங்கத்தவர்களுக்கு ரொம்ப வருத்தம்தான். 226 காங்கிரஸ் எம்பிக்களில் மூன்றிலொரு பங்குக்கு மேல், அதாவது 90 பேர், விந்தியம் தாண்டி இங்கு வந்தவர். கொடிதினும் கொடிது பெரும்பான்மையில்லா அரசு!

அட்டைகத்தி பங்காரப்பா

பங்காரப்பாவுக்கு அட்டைக்கத்தி சுழற்ற இது நல்ல வாய்ப்பு.

கைச்சுத்தமில்லையென்று குற்றம் சாட்டப்பட்டு லோகாயுக்தா விசாரணையிலிருக்கும் அதிகாரிகளைத் தமது அரசின் முக்கியப்பதவிகளில் நியமித்ததாகவும், அசௌகரியமான மந்திரிகளைப் பயனற்ற இலாக்காக்களுக்கு மாற்றியதாகவும், கையூட்டு விவகாரங்கள் பெருகிவிட்டதாகவும் பதினெட்டு கர்நாடக எம்பிக்கள் நரசிம்மரிடம் புகார் செய்துள்ளனர். மாநிலத்தின் 180 காங்கிரஸ் எம் எல் ஏக்களில் 66 பேர் இவருக்கு எதிரென்றும் ஒரு கணிப்பு. இது அதிகமாகலாம். இந்தச் சமயத்தில் பத்திரிகையாளர், மாற்றுக்கட்சியினர் மற்றும் முக்கியஸ்தரின் தொலைபேசிகளை அவரது அரசு ஒட்டுக் கேட்பதாகப் புதியதொரு குற்றச்சாட்டும் முளைத்திருக்கிறது.

காலையில் எழுந்ததும் காங்கிரஸ் எம்.பிக்களின் பற்று, வரவு, ரொக்கக் கையிருப்புக் கணக்குப் பார்க்க வேண்டிய நிலையிலுள்ள பிரதமர் திடீரென்று நரசிம்மாவதாரம் எடுத்து யார் நெஞ்சையும் கிழித்துவிட முடியாது.

அதனால்தான் காவேரி டிரிப்யூனலுக்கும் பங்காரப்பா 'பெப்பே' என்றபோது பார்க்காத மாதிரி இருக்க வேண்டியதாகிவிட்டது.

இந்தப் பிரச்னையில் முன்னாள் முதல்வர் ராமகிருஷ்ண ஹெக்டே, 'சண்டே அப்சர்வர்' பத்திரிகைக்கு வெண்டைக்காயை நறுக்கி விளக்கெண்ணெயில் வதக்கிய பதத்தில் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். ''நான் சொல்லப்போகும் கருத்தால் எனக்கு அரசியல் நஷ்டம் ஏற்படுமென்றாலும்....'' என்ற தீரமான பீடிகையுடன் தொடங்கி, திடீரென்று குரலையிறக்கி ''கர்நாடக தமிழ்நாடு







மாநில விவசாயிகளெல்லாரும் நலமாயிருக்க வேண்டும்'' என்ற பலஸ்ருதி சொல்லி முடித்துவிட்டார்!

ராஜா சாஹப்

கையில் பொம்மையை வைத்துக் கொண்டு வி.பி. சிங் ஆட்டிப் படைப்பதை எதிர்த்து அஜீத்சிங் போர்க்கொடி உயர்த்தி இருக்கிறார். ''பிற்பட்ட வகுப்பினருக்குக் கட்சிப் பதவிகளில் இடம் ஒதுக்குவது ஒன்றும் புதிதல்ல, என் தந்தை சரண்சிங் அந்தக் காலத்திலேயே செய்ததுதான்'' என்கி றார் அஜீத். அதுமட்டுமல்ல 'கொள்கை யெல்லாம் வாயளவுதான். கட்சியில் பிற் பட்டவருக்குப் போதிய வாய்ப்புக்கள் அளிக்கப்படவில்லை' என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார். வி.பி. சிங் பதவி துறக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி காட்டமான கடிதம் எழுதியிருக்கிறார்.

ராஜா சாஹப்பாவது, பதவி துறப்ப தாவது. அடுத்தவர் தோளில் துப்பாக்கியை வைத்துச் சுடுவதில் மிக வல்லவராயிற்றே!

அஜீத்சிங் மீண்டும் அமெரிக்காவுக்குப் போய்விடுவது நல்லது!

ஊருக்குத்தான் உபதேசம்

ஜூலை 1990 முதல் செப்டம்பர் வரையிலான மூன்று மாத காலத்தில் வி.பி. சிங் அரசு வெளியே சொல்லாமல் IMF இடமிருந்து 1173 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி வாங்கிச் செலவழித்தது. இது நாட்டின் தங்கக் கையிருப்புக்கு எதிராகக் கிடைப்பது.

இந்தச் சமயத்தில் குவைத் போர் வந்து ஏற்றுமதி ஸ்தம்பித்ததும், எண்ணெய் விலை ஏறிப்போனதும் அதனால் அந்நியச் செலாவணி இருப்பு மூச்சுமுட்டிப் போனதும் நிஜம்தான்.

ஆனால் பொதுமக்களுக்கோ, ஏன், பாராளுமன்றத்துக்கோ கூடத் தெரியாமல் மறைத்துவைக்க இவருக்கு ஏது அதிகாரம்?

பணமதிப்புக் குறைப்பை முன்கூட்டிச் சொல்லாமல் அறிவித்தது குற்றம் என்கிறார் இவர். சர்வகட்சிக் கூட்டம் கூட்டிச் சம்மதம் கேட்டிருக்க வேண்டுமாம்.

அப்படி ஒரு சம்மதம் எந்தச் சமாசாரத்திற்காவது கிடைத்ததாகச் சரித்திரம் சொல்கிறதோ?!

– இமய வரம்பன்



சொன்னார்கள்..!

★ இந்த நாட்டை ஆளுபவர் யார்? ஆணா? பெண்ணா?

– இந்திரஜித் குப்தா, சோனியா மறுத்த தால் நூறு கோடி நிதியுதவியை வாபஸ் பெற்றது குறித்து.

★ ராஜீவ் என்ற சக்தி எங்களைக் கட்டுப் பாடாய் வைத்திருந்தது. இனி தலைக்குத் தலை நாட்டாண்மைதான்!

– வாழப்பாடி ராமமூர்த்தி.

★ தமிழக மக்கள் அவர்களை (ப. சிதம்பரம், அருணாசலம்) ஒருபோதும் மன் னிக்க மாட்டார்கள்!

– ஜெயலலிதா.

★ தினக்கூலிக்கு வேலை பார்க்கிற நிலைமையில்தான் இருக்கிறது மத்திய அரசு.

– எல். கே. அத்வானி.

★ காஷ்மீர் பிரச்னைக்கு எங்களிடம் தீர்வு இருக்கிறது; ஆனால் அதை இப்போது வெளியிட மாட்டோம்!

– முரளி மனோகர் ஜோஷி.

★ கோவிலுக்கு அவசரமில்லை; கோவில் கட்டா விட்டால், மக்கள் மாண்டு போய் விட மாட்டார்கள்.

– ராமாயண ராவணன் புகழ் அரவிந் திரிவேதி (பா. ஜ. க. எம்.பி.)

தொகுப்பு : ஜூலி.—



**ஒரு வழக்கில்
கடவுளே கட்சிக்காரரானது
இதுவே முதல் தடவை!**

கடவுளே கட்சிக்காரரானார்!

"மை லார்ட்... இந்த வழக்கில், நடராஜர் சிலை தங்கள் நாட்டைச் சேர்ந்த தென்றும், அதைத் தங்களிடம் திருப்பித் தர வேண்டும் என்றும், இந்திய அரசும், அதன் கீழுள்ள மாநில அரசான தமிழக அரசும், பத்தூர் விஸ்வநாத சுவாமி கோயிலின் அறங்காவலரும், கோரியுள்ளனர். ஒரு பொருள் தொலைந்து விட்டாலோ அல்லது திருடப்பட்டு விட்டாலோ, அதன் உரிமை யாளர்தான் வழக்குத் தொடர முடியும். இந்திய அரசும், தமிழக அரசும் கடத்தி வரப்பட்ட நடராஜர் சிலையின் உரிமை யாளர்களா? இல்லையே? ஆகையால் நடராஜர் சிலையைத் திரும்பக் கோரும் உரிமை இல்லாதவர்கள் தொடர்ந்த வழக்கு இது. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்"

கனடா நாட்டு எண்ணெய்க் கம்பெனி யான பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்ப ரேஷனின் சார்பாக வழக்கறிஞர்கள் இவ்வாறு கூறியதும், லண்டனிலுள்ள



♦ ராஜதேவன்

ராயல் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸ் என்ற நீதி மன்றத்தில், நீதிபதி கென்னடி, இந்திய அரசுக்காக வாதிட்ட வழக்கறிஞர்களைத் திரும்பிப் பார்த்தார்.

கொஞ்சம் தடுமாறிப் போன இந்திய அரசின் வழக்கறிஞர்களான ஹேமில்டன், லாரன்ஸ் கிரஹாம், பாஸ்கர் கோபர்டே ஆகியோர், வழக்கை ஒத்திப் போடும் படியும், அடுத்த முறை கோர்ட் கூடும் போது தக்க பதிலளிப்பதாகவும் வேண்டிக் கொண் டார்கள்.

என்ன செய்வது? யோசித்தார்கள் வழக்கறிஞர்கள். தமிழகத்துக்குச் செய்தி பறந்தது. தொல்பொருள் வல்லுனர் டாக்டர் நாகசாமியும், சிலைப் பிரிவு போலீஸ் அதி காரிகளும் தலையை உடைத்துக் கொண் டார்கள். பல பண்டிதர்கள் கலந்தாலோ சிக்கப்பட்டனர். கடைசியில் ஓர் ஒளிக்கீற்று தோன்றியது. நடராஜர், ஒவ்வொரு சிவத் தலத்திலும் லிங்க வடிவில் மூலவராக உள்ள சிவபெருமானின் பிரதிநிதியாக இருக்கும் உற்சவர். ஆகவே நடராஜர் சிலைக்கு உரி யவர் சிவபெருமான். மேலும் விஸ்வநாத சுவாமி கோயில் பாழடைந்து பூஜை, புனஸ்காரங்கள் நடக்காமல் இருந்தாலும், அங்கே லிங்கம் இருந்தது. ஆகவே சிவபெருமானையும், வழக்கில் ஒரு கட்சிக் காரராகச் சேர்த்து, சிலையைக் கோருவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி கோர்ட்டில் மனு தாக்கல் செய்து வழக்கு விசாரணை வேகமாக நடந்தது! கடைசி யில்...

சிலையைத் திருப்பி இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிபதி கென்னடி தீர்ப்புக் கொடுத்தார். அவர் தீர்ப்பு வெளியானது சிவராத்திரி அன்று!

''ஒரு வழக்கில் கடவுளையே கட்சிக் காரராகச் சேர்த்தது இதுதான் முதல் தடவை என்று நினைக்கிறேன். மேலும் இந்த வழக்கின் மூலம், இந்தத் தீர்ப்பை முன்னுதாரணம் காட்டி, ஏதென்ஸ், ரோம், போன்ற நகரங்களின் கலைப் பொக்கி ஷங்களும், எந்தவிதப் பிரச்னையுமின்றி அந்தந்த நாடுகளுக்கு எடுத்துப் போக வழி ஏற்பட்டிருக்கிறது'' என்றார் சிலைப் பிரிவு காவல் கண்காணிப்பாளரான சுப்பிர மணியம் ராஜதேவன்.

நடராஜர் சிலையைத் திரும்பிப் பெற நடந்த வழக்கில் இந்திய அரசுக்குச் செல வான தொகை இரண்டரை கோடி. இதில் அறுபது சதவீதத்தைக் கடத்தல் சிலையை வாங்கிய பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்ப ரேஷன் இந்தியாவுக்குக் கொடுத்தாக வேண்டும். வழக்கு நடக்கும் போது ஒரு கட்டத்தில் அந்த நிறுவனத்தினர் சமாதா னத்துக்கு வந்தார்கள். ஆனால் அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர்., ''நோ.. நோ.. அவர்கள் கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள். தீர்ப்பு வரட்டும். வாய்மையே வெல்லும்'' என்று சொல்லி விட்டாராம்!

முதன் முதலில், சிலையைப் பூமியி லிருந்து கண்டெடுத்த விவசாயி ராமமூர்த்தி இந்த வழக்கில் லண்டனுக்குச் சென்று சாட்சி சொன்னார். தென்னிந்திய சிலை களில் உள்ள உலோகக் கலப்பு, தோண்டி யெடுத்த இடத்தில் இருந்த மண்ணையும், சிலையிலிருந்த மண்ணையும் சோதித்துப் பார்த்துப் பரிசோதனை என்ற பலவித விஞ்ஞான சரி பார்ப்புக்களுக்குப் பின்னரே, பத்தூர் சிலை நமது சிலை என்பதை நீதி மன்றம் ஒப்புக் கொண்டது.

''கோயில் சிலையில் தங்கம் இருக்கிற தென்று பலர் திருடுகிறார்கள். தங்கத்தை எடுப்பதற்காகச் சிலையை அங்கங்கே வெட்டிப் பார்த்துச் சேதம் விளைவிக் கிறார்கள். உண்மையில் சொல்லப் போனால், பெயர்தான் ஐம்பொன் சிலையே தவிர, கடுகளவு தங்கம் கூட சிலைகளில் கிடையாது. ஆகவே மக்கள், சிலை கடத்தல் காரர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி அநீதிக்குத் துணை போகக் கூடாது. கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதில் மக்க ளுக்கும் பெரும் பங்கு இருக்கிறது'' என்றார் ராஜதேவன்.

இந்த விஷயத்தில் மக்களுக்கு அறிவு புகட்ட, தமிழக அரசு ஒரு வீடியோ படம் தயாரிக்கலாமே!

- தில்லப்பா.

இதோ, பரிசு பெற ஒரு திருப்புமுனை! பங்கு பெறுங்கள்.

"கை கொடுத்த கடன் தொகை"

கல்கி ஸ்ரீராம் சிட்ஸ் இணைந்து அளிக்கும் பரிசுப்போட்டி!

நீங்கள் பெரிய, சிறிய தொழில் அதிபராகவோ, வர்த்தகராகவோ இருக்கலாம் அல்லது சராசரி மத்தியதரக் குடும்பத்தில் உள்ளவ ராகவும் இருக்கலாம். ஒரு நெருக்கடியில் கடன் வாங்கிய கால கட்டத்தை எண்ணிப் பாருங்கள். உங்களுக்குக் கடன் கொடுத்து உதவியது தனி நபரா, வங்கியா, கூட்டுறவு அமைப்பா, சிட்டு நிறுவனமா எது? உங்கள் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அது எவ்வாறு அமைந்து முன்னேற்றத்துக்கு உதவியது?

கல்கியில் ஒரு பக்கத்துக்கு மேற்படாத அளவில் கட்டுரை எழுதுங்கள்:

உறையின் மேல் "கை கொடுத்த கடன் தொகை" என்று குறிப்பிட்டுக் கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், கல்கி,
சென்னை 600 032.

அனுப்பி வைக்கக் கடைசி தேதி:
ஆகஸ்ட் 31, 1991

பரிசு பெறும் கட்டுரை களைத் தவிர மற்ற கட்டுரை களையும் தங்கள் விருப் பப்படி உபயோகித்துக் கொள்ள ஸ்ரீராம் சிட்ஸுக்கு பூரண உரிமை உண்டு. அவ்வாறு பயன் படுத்தப் பெறும் கட்டுரைக்குச் சன்மானம் உண்டு.

ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்கு வரத்து கிடையாது. கல்கி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு, இரண்டாம் பரிசு கட்டுரைகள் கல்கியில் பிரசுரமாகும்.


1-முதல் பரிசு:
ஒரு 165லி ரெப்ரிஜிரேட்டர்


2-இரண்டாம் பரிசுகள்:
'யூரேகாவின்' வாக்கும் கிளீனர்


4-மூன்றாம் பரிசுகள்:
பிலிப்ஸ் 2-இன்-1

(அல்லது ரொக்கம்)

50-ஆறுதல் பரிசுகள்:
ஸ்ரீபெட் கிப்ட் பேக்!







மற்ற விவரங்களை 18-8-91 கல்கி இதழில் காணலாம்.

ADWAVE/SC/1426/7A



ஜுகல் பந்தி!

வாழப்பாடி : பாப் இசை

★ தட்டு நிறைய சாதம் மற்றும் ருசியான பதார்த்தங்களை வைத்து விட்டு 'சீ சாப்பிடு நாயே' என்று ஒருவன் சொல்கிறான். நீங்கள் என்ன செய்வீர்கள்? மானம் பெரிது என்றால் எழுந்து வந்து விடுவீர்களா? அல்லது சோறுதான் வேண்டும் என்று மானத்தைப் பறக்க விடுவீர்களா? நமது வாழப்பாடியார் 'பதவி' என்ற சோற்றை மானத்துக்காகத் தூக்கி எறிந்த வீரர்!

- நெடுஞ்செழியன்.



★ 'இந்தக் கூட்டத்துக்கு ஜெயலலிதா ஏன் வரவில்லை?' என்று நண்பர்கள் கேட்கலாம். பல் பொடிதான் தெருத் தெருவாக பவனி வருமே தவிர, பத்திய மருந்து வீட்டிற்குள் பத்திரமாக இருக்கும். ஜெயலலிதா பத்திய மருந்து. இன்றைய அரசியல் சூழல் அவரை அப்படி வைத்திருக்கிறது!

- கவிஞர். நா. காமராசன்.



★ ப. சிதம்பரத்தைப் பற்றிச் சொன்னால் ஜெயந்தி நடராஜனுக்கு ஏன் கோபம் வருகிறது? தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டுகிறதே!

- முன்னாள் எம். எல். ஏ. வளர்மதி.

★ அந்தக் காலத்தில் காவிரித் தண்ணீரைத் தடுக்க முயன்ற கர்நாடக அரசின் சிக்க தேவ கவுடாவை ராணி மங்கம்மாள் தட்டிக் கேட்டாள். இன்று பங்காரப்பாவைத் தட்டிக் கேட்கும் ராணி மங்கம்மாவாக நமது புரட்சித் தலைவி இருக்கிறார்!

- முனு ஆதி.

★ பல மாநிலங்களில் கருங்காலிகள் மீது கை வைக்கத் துணியாத, கையால் ஆகாத காங்கிரஸ் தலைமை!

- அமைச்சர் இந்திரகுமாரி.



★ இது கூட்டணியில் களை எடுக்கும் விழா.

- அமைச்சர் அரங்கநாயகம்.

★ மக்களுக்குத் தொண்டு செய்வதைத் தடுக்கிறார்கள் இந்த பூர்ஷ்வாக்கள். அன்று புரட்சித் தலைவர் பினாமி நில ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த போது, முட்டுக் கட்டை போட்டவர்கள் இதே பூர்ஷ்வாக்கள், நிலப் பிரபுக்கள்தான்.

- அமைச்சர் மதுசூதனன்.

★ இன்று என்னைச் சிக்கலில் மாட்டி வைத்திருக்கிறீர்கள். நாளை எத்தனை பேர் பல்லில் கடிபடப் போகிறேனோ?

- வாழப்பாடி ராமமூர்த்தி.


அடுத்த இதழில்...

OO நமது இளம் விஞ்ஞானிகள் :

ஆழ்கடல் முதல்
விண்வெளி வரை...

- கவர் ஸ்டோரி

அ. இ. அ. தி. மு. க. வினர் வாழப்பாடி ராம மூர்த்திக்கு நடத்திய பாராட்டுக் கூட்டம், எதிர்க் கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத் துக்கு மூப்பனார் கோஷ்டியினர் நடத்திய பாராட்டுக் கூட்டம் ஆகியவற்றுக்குச் சென்று வந்த நமது நிருபர், தலைவர்கள் சொன்னதைச் சொன்னபடியே இங்கு தருகிறார் :



மூப்பனார் : மெல்லிசை

★ ஒரு தலைவனைப் பலிகொடுத்து விட்டு இந்த வெற்றி யைப் பெற்றிருக்கிறோம். அதைக் கொஞ்சமும் நினைத்துப் பார்க்காமல், 'கூட்டணி அமைத்ததால்தான் வெற்றி கண்டோம்' என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது காவிரிப் பிரச்னையில் ராஜினாமா செய்ததாகப் பிரமாதப்படுத்திக் கொண்டிருக்கிறாரே, இதே நபர் 1977 முதல் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். ஒரு முறையாவது காவிரிப் பிரச்னை பற்றிப் பேசியிருப்பாரா?


- ஜெயந்தி நடராஜன்.



★ பாராளுமன்றத்தில் நமது ஜெயந்தியை விடக் காவிரி விஷயத்தைத் தீவிரமாகப் பேசியவர்கள் வேறு யாரும் கிடை யாது. இவர் தமிழ் நாட்டிற்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வாதிட்ட போது, பாண்டியன் அரசவையில், கோபக் கண்களுடன் நியாயம் கேட்ட கண்ணகி தான் ஞாபகத்துக்கு வந்தாள்! இப்போதெல்லாம் பல உறுப்பி னர்கள் ஜெயந்தி நடராஜன் என்பதற்குப் பதில் காவிரி நடராஜன் என்றே அவரை அழைக்கிறார்கள்...

★ மூப்பனார் என்ன பாவம் செய்தார்? அவரை ஏன் தாக்கு கிறீர்கள்? அவர் இமயம். கூழாங்கற்கள் அவரை ஒன்றும் செய்ய முடியாது!

- எஸ். கே. டி. ராமச்சந்திரன்.



★ ஒரு கட்சியின் விவகாரத்துக்குள் இன்னொரு கட்சியை நுழைய விடுவது சரியல்ல. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் முன்னிலையிலேயே அ. தி. மு. க. வினர், காங்கிரஸ் தலைவர்களையும் மந்திரிகளையும் தாக்கிப் பேசுவது எந்தவிதத்தில் சரியாகும்?

- திண்டிவனம் ராமமூர்த்தி.

★ ஸ்ரீபெரும்புதூரில், ராஜீவ் மலர் மாலைகளைப் பெற்றுக் கொள்ளும் போது மாநில காங்கிரஸ் தலைவர் ஏன் உடன் செல்லவில்லை? எங்கு சென்றிருந்தார்? ராஜீவ் மரணத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று வாழப்பாடி அப்போதே தமிழக காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜினாமா செய்திருக்க வேண்டும். இப்போது காவிரி விவகாரத்தில் ஸ்டண்ட் அடித்து இருக்கிறார்.

- பழனியாண்டி.



OO வாடகை வீடுகளும்

அன்றாடப் பிரச்னைகளும்...

- சிறப்புக் கட்டுரை

ரத்தம் சிந்தாமல் ஓர் அறுவைச் சிகிச்சை!

பதினோரு வயது சரிதா பள்ளிக்குப் போக மறுத்தாள். அவள் பிரச்னை இதுதான்: அவளது வலது கால் பிறவியிலேயே இடது காலைக் காட்டிலும் ஆறு அங்குலம் குட்டையாக அமைந்திருந்தது. பகுதி அளவுக்குச் செயற்கை உறுப்பு பொருத்தி, குறையை நிவர்த்தி செய்ய முயன்றார்கள். ஆனால் சரிதா வளர வளர, தன் இயலாமையை மிக ஆழமாக உணர்ந்தாள். பள்ளிக்குப் போகவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சரிதாவைச் சென்னை அப்போலோ மருத்துவமனையின் டாக்டர் ஆர். கோபாலகிருஷ்ணனிடம் அழைத்துச் சென்று காண்பித்தனர் அவளது பெற்றோர். டாக்டர் கோபாலகிருஷ்ணன் கையாண்ட புதிய அறுவைச் சிகிச்சை முறையினால் சரிதாவின் குட்டைக் கால் படிப்படியாக வளர்ந்து, நான்கு மாதங்களில் இடது காலைப் போலவே சரியான அளவினதாகி விட்டது! சரிதா இப்போது குதூகலமாய்ப் பள்ளிக்கூடம் போகிறாள்.



♦ முழங்காலுக்குக் கீழே எலும்பைத் துளைத்து...

பெங்களூரில் சுய தொழில் செய்து வரும் சுரேஷுக்குக் கோர விபத்து நேர்ந்தது. ஒன்பது அறுவைச் சிகிச்சை (இவற்றுள் நான்கு, எலும்பு ஒட்டுப் போடும் அறுவைச் சிகிச்சை)களுக்குப் பிறகும் அவரால் பழைய படி நடக்க முடியவில்லை. ஒரு கால் மற்றதைக் காட்டிலும் நான்கு அங்குலம் குட்டையாகி விட்டது. அப்போலோ மருத்துவமனைக்கு வந்து ring fixsetor முறையில் அறுவைச் சிகிச்சை செய்யப் பெற்று பழைய தோற்றத்தையும் சுறுசுறுப்பையும் திரும்பப் பெற்றார் சுரேஷ்.



♦ வளைந்து திருகிய முன்கையை நிமிர்த்தி...

சந்திரபாபுவுக்கு ஒரு கனவு - சராசரி மனிதனாய் நிமிர்ந்து நிற்க வேண்டும்; நன்னடை பயில வேண்டும். தன் மூன்றடி ஏழங்குல உயரத்தைக் குனிந்து பார்த்துச் சிரித்தவர்களின் பார்வையை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும்.... சந்திரபாபுவின் இந்தக் கனவு விரைவிலேயே நிறைவேறி விடும். அப்போலோவில் சிகிச்சைக்கு வந்த சந்திரபாபு இப்போது 5 அடி உயரத்தை எட்டியிருக்கிறார். நாளொன்றுக்கு ஒரு மில்லி மீட்டர் விகிதம், தினமும் கனவை நோக்கி உயர்ந்து வருகிறார்.



இவர்களைப் போன்ற நூற்றுக் கணக்கானவர்களின் குறைகளைப் போக்கி அவர்களை முழு மனிதர்களாக்க உதவும் சிகிச்சை முறை பற்றி டாக்டர் கோபால கிருஷ்ணனிடம் கேட்டோம்.

''டாக்டர் இலிஜரோவ் என்ற ரஷ்ய மருத்துவர் உருவாக்கிய இச் சிகிச்சை முறையினால் பெண்களின் குறுகிய இடுப்பு எலும்புகளைக் கூட விரிவடையச் செய்து பேறு காலத்தில் சிசேரியன் செய்வதைத் தவிர்க்க முடியும். இரத்தச் சேதமின்றி செய்யப்படுகிறது என்பது இம் முறையின் ஒரு சிறப்பம்சம்...'' எனக் கூறிய டாக்டர் கோபாலகிருஷ்ணன் இந்த அறுவைச் சிகிச்சை முறையை விளக்கினார்!

''இந்த ஆபரேஷனுக்குத் தேவையான கருவிகள் ஸ்க்ரூ, நட்டுகள், போல்டுகள், கம்பிகள், வளையங்கள்தான். ஆனால் இவை உயர்ந்த பிளாட்டினம் பூச்சுடைய ஸர்ஜிகல் எஃகினால் ஆனவை.

''முதலில் எக்ஸ்ரே படம் எடுத்து உறுப்பில் உள்ள குறைபாடு கவனிக்கப்படுகிறது. இந்த எக்ஸ்ரேயை வைத்துக் கொண்டுதான் ஆபரேஷனைத் துவங்குவோம். ஆபரேஷன் செய்யப்படவுள்ள நபருக்கு மயக்கம் கொடுத்து விடுவோம். ரத்த ஓட்டம், இதயத் துடிப்பு போன்றவற்றை எலக்டிரானிக் கருவிகள் கண்காணிக்கும். 'இமேஜ் இன்டன்ஸிபையர்' என்ற கருவியின் திரையில், சீரமைக்க வேண்டிய உறுப்பை டீ.வி. படம் போல் காணலாம்.

''அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய உடற்பகுதி தவிர இதர பாகங்களைத் துணியால் மூடி விட்டு, அப் பகுதியை மருந்துகளால் சுத்தமாக்குவோம். பிறகு நடப்பதை நீங்களே பாருங்கள்'' என்று நம்மை அருகில் வைத்துக் கொண்டே குழந்தை ஷீலாவுக்கு ஆபரேஷன் செய்து காட்டினார் டாக்டர் கோபாலகிருஷ்ணன்!

● டாக்டர் மாமாவுடன் குழந்தைகள் - முழு வளர்ச்சியை எட்டுகிற வரை கை கட்டைகளோடு நடக்க வேண்டும்.

ஷீலாவின் வலது கால், இடது காலை விட பத்து சென்டி மீட்டர் உயரம் குறைவு. அவளது வலது முழங்காலுக்குக் கீழே நரம்புகளில் படாமல், நீளமான எஃகுக் கம்பியைத் துளையிடும் கருவி கொண்டு பக்கவாட்டில் செலுத்தினார்கள்.

● வளையங்களோடு குறுக்குத் தண்டுகளை இணைத்தாகி விட்டது



சிக்கனமாம் சிக்கனம்! ஹும்!



சிக்கனம் சிக்கனம் என்று பிரதமரும் நிதி அமைச்சரும் கூறிக் கொண்டிருக்க நடைமுறை எப்படி என்பதற்கு ஒரு உதாரணம் :

வேலூரிலுள்ள மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரியிடமிருந்து வேறு சில அதிகாரிகளுக்கு, ஜூலை 11 ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் ஒரு கூட்டத்திற்கு வருமாறு தந்திகள் அனுப்பப்பட்டன. வேடிக்கை என்ன வெனில் மாவட்டக் கல்வி அலுவலகத்தின் பொது ஜனத் தொடர்பு அதிகாரியும், கிராம வளர்ச்சி அதிகாரியும் அதே கட்டிடத்திலும், பக்கத்துக் கட்டிடத்திலும் உள்ள அலுவலகங் களில்தான் இருந்தார்கள். அவர்களுக்கும் தந்திதான் அனுப்பப்பட்டது!

ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல் : வஸந்தா சாரி

முழங்காலுக்குக் கீழே ஆறு முனைகள் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படி ஒன்று, இரண்டு, மூன்று கம்பிகள், எலும் பைத் துளைத்துச் செலுத்தப்பட்டன.

லாடம் போன்ற வடிவத்தில் துளை களுடன் கூடிய ஒரு வளையத்தை இக் கம்பி களுடன் உறுதியாக இணைத்து, நட்டுகள், போல்டுகளால் முடுக்கினார்கள். வளையம் உடல் பகுதியோடு ஒட்டாமல் விலகியே இருந்தது. இதே முறையில் கணுக் காலையொட்டி இரண்டு எஃக்குக் கம்பிகள் செலுத்தி, ஒரு வளையத்தைப் பொருத்தி னார்கள். முழங்கால் பகுதி வளையத்தையும் கணுக்கால் பகுதி வளையத்தையும் மூன்று, நான்கு எஃகுத் தண்டுகளால் இணைத்து ஸ்க்ரு கொண்டு இறுக்கமாக முடுக்கி னார்கள். இப்போது செருகு கம்பிகளின் ஆதாரத்தில், பழுதுபார்க்கப்பட வேண்டிய காலைச் சுற்றி இந்த எஃகு வளைய ஃப்ரேம் உறுதியாக நின்றது.

இந் நிலையில் இமேஜ் இன்டென்ஸி ஃபையர் மூலமாகத் திரையில் கால் எலும் பின் படத்தைக் கவனித்து ஆபரேஷன் செய்ய வேண்டிய இடத்தில் தோலில் சிறு துளையிட்டு, அதன் வழியே சிறு உளியைச் செலுத்தி, கால் எலும்பின் வெளிப் பகுதி யைக் கத்தரித்தார்கள். எலும்பு மையத்தில் உள்ள ஜவ்வுப் (bone marrow) பகுதி அப் படியே இருக்க, ஓடு போன்ற மேல் பகுதி மட்டுமே வெட்டுண்டது. இப்போது எலும்பை, அது வெட்டுண்ட இடத்தில் பிளவை அதிகரிப்பது போல் ஒரு மில்லி மீட்டர் அளவுக்கு இலேசாக அகட்டி, அகட் டிய நிலை மாறாமல் அசையாதிருக்க வளை யங்களை இறுக்கினார்கள்.

ஆபரேஷன் முடிந்து விட்டது! விலக்கி, இழுத்துப் பிடிக்கப்பட்ட எலும்பு இயல்பாக மெள்ள வளர்ந்து, இணைய முயற்சி செய்யும். வளர வளர, ஒவ்வொரு நாளும் ஒரு மில்லி மீட்டர் வீதம் இடை வெளியை அகட்டிக் கொண்டே போவார் கள். இதற்கு ஏற்கெனவே பொருத்தப் பட்டுள்ள வளையங்களில் ஸ்குருக்களை முடுக்கினால் போதுமானது. ஒரு மாதத்தில் சுமார் 2.5 செண்டி மீட்டர் அளவுக்கு இப்படி எலும்பை வளர்க்க முடியும். நாளடைவில் ஷீலாவின் இடது கால் அளவுக்கு வலது காலும் வளர்ந்து விடும். எலும்பு வளரும் போதே தசை, நரம்பு, புறத்தோல் ஆகியவை சேர்ந்து வளர்ந்து விடுகின்றன. ஆபரேஷன் செய்து கொண்டவர், வளையங்கள் பொருத்திய நிலையில் நடமாடலாம். அப்படி நடமாடுவதாலேயே வளர்ச்சி துரித மாக ஏற்படுகிறது.

''இலிஸரோவ் ரிங் ஃபிக்ஸேடர் கருவியை எண்ணூறு விதமாகப் பயன் படுத்த முடியும் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. முதுகெலும்பு அமைப்பின் வளைவை நிமிர்த்தி 'கூனை'க்கூட நேராக்கி விடலாம். மூட்டுப் பகுதியையும் புற்று நோயால் சிதைந்த எலும்பையும்தான் இம் முறையில் சீராக்க முடியாது'' என்கிறார் டாக்டர். கோபாலகிருஷ்ணன்.


சிகிச்சை செலவுதான் அதிகம் ஆகும். (சுமார் பதினேழாயிரம் ரூபாய்).

''ரஷ்யப் பேராசிரியர் ஜி. ஏ. இலிஸ ரோவ் இச் சிகிச்சை பற்றி, பம்பா யில் நான்கு ஆண்டுகளுக்கு முன் விளக்க மாகப் பேசினார். இம் முறையில் பயிற்சி பெற நான் ரஷ்யா சென்ற போது 194 சந்தே கங்களைக் குறித்துக் கொண்டு போனேன். இலிஸரோவ் மையத்தில் பயிற்சி பெறத் தொடங்கியவுடனேயே அவ்வளவு சந்தே கங்களும் அர்த்தமற்றனவாகி விட்டன'' எனக் கூறும் டாக்டர் கோபாலகிருஷ்ணன், பதின்மூன்று மொழிகளில் சரளமாக உரை யாடுகிறார். இந்தத் திருநெல்வேலித் தமிழரைச் சுற்றிலும் ''டாக்டர் மாமா'' என்று அன்போடு உறவாடியபடி குழந் தைகள் வளைய வருவதைப் பார்க்க மனத் துக்கு இதமாக இருந்தது.

- சுப்ர.பாலன்

படங்கள் : யோகா


12 கோடி செலவில் பிரம்மாண்டமாகத் தயாராகும்
ராமானந்த சாகரின்
ஸ்ரீ கிருஷ்ணா
மற்றும்
டி.வி.யில் நீங்கள் கண்டுகளித்த
ராமானந்த சாகரின்
இராமாயணம்
ஆகிய இரு பெரும் பக்தி காவியங்களை
ஏக்நாத் வீடியோ
தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய ஒவ்வொரு மொழிகளிலும்
26 வீடியோ கேசட்டுகளாக வெளியிடுகிறது ஒவ்வொரு கேசட்டின் விலை ரூ. /பதிலாக
சலுகை விலையாக ரூ.110 க்கு கிடைக்க வேண்டுமானால்
26 கேசட்டுகளுக்கான மொத்தத் தொகை ரூ.2860 ஐ
3.9.91 தேதிக்குள் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.
பதிவு செய்து கொண்டவர்களுக்கு கிருஷ்ணர் அல்லது ராமர் உள்ள
சுவர் கடிகாரம்
இலவசம்
கேசட்டுகள் பதிவு செய்ய
D.D. அல்லது M.O. ஆக
எடுக்க வேண்டிய பெயர் :
ஏக்நாத் வீடியோ கேசட் மேகஸின்.
விவரங்களுக்கு: ஏக்நாத் வீடியோ மேகஸின், 47, பசுல்லா ரோடு, தி.நகர், சென்னை – 600 017.
Ph: 825 01 88. 86 33 23
Elegant


நாட்டில இருக்கிற பயங்கரவாதிங்க அத்தனை பேரையும் பேச்சு வார்த்தைக்கு அழைச்சிட்டு வர்றாரு...
!?!
பயங்கரவாதிகள்
துணை சபாநாயகர் தேர்தலில் கட்சிக் கொறடாவை மீறியவர்கள்
சவுக்கைச் சொடுக்கறேன், ஸ்கிப்பிங் ஆடறான்களே...?
நீதி எல்லாம் தேவையில்லே.. இதில அதுவா வந்து மாட்டிக்கும்!
?
இடைத்தேர்தல் பிரதமர் தொகுதி



ஸ்ரீ
கல்கி



1991
ஆகஸ்ட் 25
மலர் : 50
இதழ் : 4
பிரஜோத்பத்தி
ஆவணி 9

தில்லுமுல்லு தர்பார்!

பிரதம கணக்காயரின் சமீபத்திய அறிக்கை அரசுத் துறை நிறுவனங்கள் 1727 கோடி ஓராண்டில் நஷ்டமடைந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்த நஷ்டம் இல்லையெனில் பட்ஜெட்டில் நிதிஅமைச்சர், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவந்த உர மானியத்தை வாபஸ் பெறவே அவசியம் நேர்ந்திராது!

''எல்லாம் அரசு மயம்'' என்று சர்க்காரே அனைத்துக்கும் உரிமை கொண்டாடுவதால், எல்லா இலாக்காக்களிலும் ஊதாரித்தனமான செலவினங்கள் பெருகியுள்ளன. பிரதம கணக்காயர் அறிக்கை எந்த இலாக்காவையும் விட்டு வைக்கவில்லை! செய்தி - ஒலிபரப்பு, எஃகு - சுரங்கங்கள், போக்குவரத்து, ஜவுளி, நகர்ப்புற அபிவிருத்தி என்று எல்லாத் துறைகளையுமே தனித்தனியே குறிப்பிட்டு, ஒவ்வொன்றிலும் நஷ்டங்களையும் வீண் செலவுகளையும் பட்டியலிடுகிறது.

உதாரணம் தேவையெனில், ''கோல் இந்தியா லிமிட்டெட்'' என்ற அரசு நிறுவனம் 45 ஆண்டுகள் பழசான ஓர் அனல்மின் நிலையத்தை, கோடிக்கணக்கில் கொட்டிக் கொடுத்து விலைக்கு வாங்கி, பின்னர், அதனால் பயனில்லை என உணர்ந்து, நஷ்டத்துக்கு விற்றதைக் குறிப்பிடலாம்.

பாதுகாப்பு இலாக்கா என்றதுமே சீனாவும் பாகிஸ்தானும் நம் நினைவுக்கு வந்து அச்சுறுத்த, எவ்வளவு செலவானாலும் சரி, அத் துறை பலப்படுத்தப்பட வேண்டும் என்று நினைப்போம். ஆனால் பிரதம கணக்காயர் அப்படி எண்ணாமல், அங்கேயும் நூறு கோடி இருநூறு கோடி என்று தவிர்த்திருக்கக் கூடிய நஷ்டங்களையும் வீண் செலவுகளையும் பிட்டுப் பிட்டு வைக்கிறார்.

ஜவாஹர்லால் நேரு பெயரால் ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புத் திட்டம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் கால்வாசி கூட எட்டவில்லை என்பதோடு, ஏகப்பட்ட பணம் விணடிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பிரதம கணக்காயர் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

கணக்காயர் அறிக்கைக்கு அப்பாற்பட்ட சில சமீபத்திய தில்லுமுல்லுகளைப் பாருங்கள்:

மாருதி கார் தயாரிக்கும் மாருதி உத்யோக் நிறுவனம், அஜித்சிங் தொழில் அமைச்சராக இருந்த போது, 95 கார்களை ஒரு நிறுவனத்துக்குத் தவணை முறைக் கடனில் தந்திருக்கிறது. பிறகு, அந்தக் கார்களை மாருதி உத்யோக் நிறுவனமே, தனது உபயோகத்துக்கு மாத வாடகைக்குத் திரும்பப் பெற்றிருக்கிறது! கடன் தவணை மாதம் ரூ 3125 என்றால், மாத வாடகை ரூ3700! பெட்ரோல் மற்றும் பராமரிப்புச் செலவு மாருதி உத்யோக் நிறுவனத்தினுடையது! இது எப்படி இருக்கு!

பத்திரிகைக் காகிதத்தின் விலையை எக்கச்சக்கமாக ஏற்றி, பத்திரிகைகளை 'அழ'வைக்கும் அரசு வர்த்தக கார்ப்பரேஷன் பத்திரிகைக் காகிதமே தயாரிக்காத சிங்கப்பூரில் போய் பத்திரிகைக் காகிதத்துக்கு 'ஆர்டர்' கொடுப்பானேன்? சிங்கப்பூர், ருஷ்யாவிலிருந்து பத்திரிகைக் காகிதம் பெற்று, இந்தியாவுக்கு சப்ளை செய்வானேன்?

இப்படியெல்லாம் தில்லுமுல்லுகள் காரணமாகவும், நஷ்டம் காரணமாகவும், ஊதாரித்தனம் காரணமாகவும் ஏற்படும் பொருளாதார நஷ்டங்களையெல்லாம் வரி விதிப்பு என்ற பெயரில் மக்கள் தலையில் கட்டி விடும் அரசு, ''தியாகத்துக்குத் தயாராகுங்கள்; பெல்ட்டை இறுக்கிக் கட்டுங்கள்'' என்று நமக்கு அறிவுரை வழங்குவது எவ்வாறு நியாயமாகும்? எந்த மந்திரியால் பெல்ட்டை ஓர் ஓட்டை அளவுக்காவது கூடுதலாக இறுக்கிக் கட்ட முடிகிறது? என்ன தியாகத்தை, எந்த அமைச்சர் அல்லது எம்.பி. அல்லது எம்.எல்.ஏ. செய்கிறார்?

''அரசு, சமுதாய - பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவைகளை மட்டுமே கவனிக்க வேண்டும். குறைந்தபட்சமாக அரசாண்டு, அதிகபட்ச சுதந்திரத்தையும் முயற்சியையும் மக்களிடமே விட்டு, அவர்களை ஊக்குவிக்க வேண்டும்'' என்ற ராஜாஜியின் சுதந்திரா கட்சி கொள்கை, இப்போதுதான் - மெல்ல மெல்ல - சரியானது என்று உணரப்பட்டு மத்திய அரசால் ஏற்கப்பட்டும் உள்ளது. அரைக் கிணறு தாண்டுவது ஆபத்து! ராஜாஜியின் கொள்கைகளை முழுதும் புரிந்து கொண்டு முழுமனத்துடன் அமுல்படுத்த வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

எரிதழலை எதிர்த்துப் போராடுபவர்



✤ எரியும் எண்ணெய்க் கிணறுகள்



✤ அ. கிலஸ்

குவைத்தின் எண்ணெய்க் கிணறுகள் எரிவதை டீ. வி. யில் பார்த்தே கலங்கினோம். அந் நாட்டின் 1300 கிணறுகளுள் சுமார் 515 கிணறுகள் இன்னமும் எரிந்து கொண்டிருக்கின்றன! இந்தச் சில வரிகளைப் படிக்கும் வினாடிகளில் மட்டுமே ஒன்றரை மில்லியன் லிட்டர் எண்ணெய் எரிந்து கரியாகிக் கொண்டிருக்கிறது! இவ்வாறு வீணாகும் எரிபொருள், 36 நவீன அணுமின் நிலையங்களில் பெறக்கூடிய அளவுக்கு மின் சக்தியை உற்பத்தி செய்ய வல்லது. அதாவது உலகின் மின்சக்தி தேவையில் சுமார் இரண்டு சதவிகிதம், எரியும் குவைத் கிணறுகளில் பஸ்மமாகிக் கொண்டிருக்கிறது!

இவ்வாறு வீணாக எரியும் ஒவ்வொரு கிலோ எண்ணெயிலிருந்து 73 கிராம் புகை வெளிப்படுகிறது. அதில் 50 கிராம் அளவுக்குக் கரி உள்ளது. நாளொன்றுக்கு 11,000 டன் கரி வெளிப்பட்டுக் குவைத்தின் வான வெளியில் பரவுகிறது. ஆனால் எண்ணெய், கிணறுகளிலிருந்து அதிவேகமாக வெளிப்படுவதால் மிக உயரத்தில் பீச்சி அடிக்கப்படுகிறது. இதன் விளைவாக, புகையும் கரியும் பூமியிலிருந்து ஆயிரம் மீட்டர் உயரத்தில்தான் வெளிப்படுகின்றன. இதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு ஓரளவுக்கு மட்டுப்படுகிறது.

உலக வரலாறு காணாத அளவில் மிகப் பெரியதான இந்த தீ விபத்தைச் சமாளிக்க, குவைத் அரசாங்கம் ஜெர்மானிய தீயணைப்பு நிபுணர்களின் உதவியை நாடி

யது. ஜெர்மன் தீயணைப்புக் குழு, எர்ன்ஸ்ட் அகிலஸ்ஸின் தலைமையில் குவைத் சென்றது.

எரியும் எண்ணெய்க் கிணறுகளைப் பார்வையிட்ட அகிலஸ் எந்தெந்த முறைகளில் தீயை அணைக்க/ அடக்க முயற்சி செய்யலாம் என்று ஆராய்ந்து திட்டமிட்டிருக்கிறார்.

◆ எண்ணெய் சேகரிக்கும் ஜெர்மானியக் கப்பல். இதில் உள்ள சிறப்பு சாதனம் கடலின் மீதாக மிதக்கும் எண்ணெயைச் சேகரித்துக் கப்பலுக்குள் உறிஞ்சி விடுகிறது. ஒரு மணி நேரத்தில 650 கன மீட்டர் எண்ணெய் இவ்வாறு மீட்கப்படுகிறது. கடலும் அந்த அளவுக்குச் சுத்தமடைகிறது. குவைத் போரின் போது ஏகப்பட்ட எண்ணெய் கடலில் கலக்குமாறு சதாம் ஹுஸைன் செய்தது நினைவிருக்கும்.



O யுத்தத்தில் பாழாகிப் போன 'டாங்க்'குகளில் கான்கிரீட் கலவையை நிரப்பி, அந்த டாங்குகளை எண்ணெய்க் கிணறுகளின் முகத் துவாரங்களுக்கு மேலாக இழுத்துச் செல்லலாம். இதனால் துவாரங்கள் அடைபடக்கூடும் அல்லது வெளியேறும் எண்ணெயின் அளவு கட்டுப்படும்.

O லியோ 1 என்ற டாங்குகளில் தண்ணீர் பீய்ச்சும் பீரங்கிகளைப் பொருத்தி, தண்ணீருக்குப் பதில் pyroform என்ற தீயணைப்புச் சாதனத்தைப் பயன்படுத்திடலாம். இந்த பைரோஃபார்ம் என்ற தீயணைப்புப் பொருளைக் கண்டுபிடித்தவரே அகிலஸ் தான்.

O எண்ணெய்க் கிணறுகளின் முகத் துவாரங்களின் மேல் சல்லடை போன்ற அமைப்புக்களைத் தள்ளுவதன் மூலம், செங்குத்துக் கொழுந்தாக மேலெழும் தீயைப் பரவலாக்கலாம். இதனால் தீயை அணைப்பது சுலபமாக்கப்படும்.

O ஹெலிகாப்டர்களைக் கொண்டு வானிலிருந்தபடி கான்க்ரீட் கலவையைக் கொட்டி எண்ணெய்க் கிணறுகளை அடைக்கலாம். ஆனால் மீண்டும் புதிதாகக் கிணறு தோண்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

O எண்ணெய்க் கிணறின் முகத் துவாரத்தின் மேல் நீளமான 'பைப்'பைப் பொருத்தி அதன் வழியே திரவ நைட்ரஜனைச் செலுத்தலாம். இவ்வாறு செய்தால் 'பைப்'புக்குள் இருக்கும் பிராண வாயுவை திரவ நைட்ரஜன் அதிவேகமாக உறிஞ்சிக் கொள்ளும். பிராண வாயு இல்லாது போனால் எண்ணெய் எரிவது நிற்கும்.

குவைத்தில் கையாள, பல்வேறு வழிமுறைகளைத் திட்டமிட்டு வைத்துள்ள எர்ன்ஸ்ட் அகிலஸ், 26 ஆண்டுகள் தீயணைப்புப் படையின் தலைமை அதிகாரிப் பதவியை வகித்தபின் ஓய்வு பெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்னரும் உலகெங்கிலுமிருந்து அவருக்கு அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன. ரஷ்யாவில் செர்னோபில் விபத்துக்குப் பிறகும் சுவிட்ஜர்லாந்தில் சான்டோஸில் நடந்த விபத்துக்குப் பிறகும் அந் நாடுகள் அகிலஸ்ஸின் உதவியை நாடின.

இப்போது குவைத் அவரை அழைத்துள்ளது. ''குவைத் மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் எனக்கு நிறையக் கிடைக்கிறது'' என்கிறார் அகிலஸ். ''இங்கு வந்து சேர்ந்தது முதல், கடிதம் மூலமாகவும் டெலிபோன் மூலமாகவும் 120 யோசனைகளை இவ்வூரின் பல்வேறு மக்கள் எனக்குத் தெரிவித்துள்ளனர். அவற்றுள் சில உருப்படியானவை; பல உதவாதவை. ஆனால் அந்த மக்களின் ஈடுபாட்டை, ஆர்வத்தை நான் மதிக்கிறேன்'' என்கிறார் எர்ன்ஸ்ட் அகிலஸ்.

நன்றி : ஸ்காலா

O இ.வ.ன். இன் 'வடக்குவாசல்' படித்தேன். நாட்டு நடப்புகளை நையாண்டியோடு அவர் விளக்கிய விதம் அ.பு.ம். (அற்புதம் என்று அர்த்தம் கொள்க!)

சேலம் - 5, என். சுரேஷ்.

O அட்டையில் 'ராஜ்குமார் பாரதி'யின் வண்ணப்படமும், அதையொட்டிய சிறப்புக் கட்டுரையும் வெகு அற்புதமாக இருந்தன. கேஸட் என்று சாதாரணமாகச் சொல்லிவிடும் ஒரு ஒலிப்பதிவுப் பேழையில்.... அடேயப்பா... எவ்வளவு விஷயங்கள்? கலைஞன் முதல் ரசிகன் வரை என்ற தலைப்பிற்கு ஏற்றவாறு சில கலைஞர்களிடமும், சில ரசிகர்களிடமும் கேஸட் பற்றி பேட்டி கண்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

மதுராந்தகம், எம்.வி. குமார்.

O கோட்டக்கல் ஆர்யவைத்திய சாலையினைப் பற்றியும் ஆயுர்வேத வைத்தியத்தைப் பற்றியும் ரத்தினச் சுருக்கமாக வெளியிட்டு அதன் அருமை பெருமைகளை நாங்கள் நன்கு உணரும்படி செய்துவிட்டீர்கள்.

கும்பகோணம் - 1, ஆமருவியப்பன்.

O பணத்தையும், பணம் படுத்தும் பாட்டையும் அடிப்படையாகக் கொண்ட 'கூடு', 'வசதிக்குத் தக்கபடி', 'அஸ்தமிக்கிற உதயங்கள்' சிறு கதைகள் இந்த வாரக் கல்கி பணச்சிறப்பிதழோ என்று எண்ண வைத்துவிட்டன.

தஞ்சாவூர் - 1, வளர்மதி ஆசைத்தம்பி.

O ''பந்த்'' கவிதை மனத்தை நெருடியது. மருதுவின் படம் தனிக்கவிதை வாசித்தது.

மகிழஞ்சேரி, ரவி.

O உச்ச நீதி மன்றம் தனது மதிப்பைத்தானே நிச்சயம் குறைத்துக் கொள்ளாது என்று உறுதியாக நம்புகிறோம்'' எனக் குறிப்பிட்டு இருப்பது அருவருப்பானது. மறை முகமாக உச்ச நீதி மன்றத்தை influence செய்ய முயல்வதாகும்.

கோலார் தங்க வயல், எம்.எஸ். வின்சென்ட்.

O உச்ச நீதிமன்றம் தமிழக மக்களின் உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்று உறுதியாகச் சொன்ன உமக்கு எமது பாராட்டுக்கள்...!

சிதம்பரம், ப. ஜீவானந்தம்.

O வானளாவிய அதிகாரம் வழுக்கி விழுந்தது ஏன்! என்ற தலைப்பே அநியாயம். சிறு சறுக்கல் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால்... ராஜீவ் கொலை வழக்கு விஷயத்தில் சி.பி.ஐ. சிறப்பாக முன்னேறி வருகிறது.

வேலூர், கே.பி. சாரதி.

O மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு பற்றிய தராசு பதில் சரியல்ல. ''காவிரிப் பிரச்னையில் தான் கருத்து வேற்றுமையில்லையே? தேர்தல் நடத்த இடையூறு அதனால் என்ன?'' என்று கேட்கிறார். தேர்தல் என்று வந்துவிட்டால் தாயாய், பிள்ளையாய்ப் பழகுபவர்களுக்குள் கூட மோதல் வந்து விடுவதைப் பார்க்கிறோம். எனவே இப்போது காவிரிப் பிரச்னையில் கருத்து வேற்றுமை இல்லாத இந்தச் சூழல் கட்டிக் காக்கப்பட மாநகராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது சரியே.

திருக்குவளை, வெற்றிப்பேரொளி.

O 'மாநில அந்தஸ்து பெற்றுத் தருகிறோம்' என்று சொல்லியே ஓட்டுக்களை வாங்கி, முதல்வர் பதவியில் அமர்ந்துவிடுவது; பின்னர் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் முழிப்பது - இதைத்தான் பாண்டிச்சேரி மக்கள் வெகுகாலமாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்களே. 'முன்னாள் பதவி தான் முதல்வர் பதவி' என அழகாகப் பேசி விட்டால் மட்டும் போதுமா?

சென்னை - 91, எல்.ஆர். விஜயகுமார்.

O கோஷ்டிப் பூசலில் பாண்டிச்சேரி அமைச்சரவை, நீங்கள் நினைப்பது மாதிரியெல்லாம் கவிழாது. அ.இ.அ.தி.மு.க. ஆதரவுடன், மெஜாரிடியுடன் தோன்றிய அமைச்சரவை ஐந்தாண்டுகள் நீடிக்கும்.

கும்பகோணம், டி.எஸ். சீதாராமன்.

O 'ஆயிரம் காலப் பயிர்' தலையங்கம் படித்தேன். தமிழக எம். பி.க்கள் ராஜினாமா மிரட்டல், வாழப்பாடியின் ராஜினாமா - இவற்றைத் தவறு என்பது போல எழுதியது சரியில்லை. இப்படி எல்லாம் செய்தாவது (மத்திய அரசின் உதவியுடன்) காவேரி நீர் கொண்டு வர முயல்வதைப் பாராட்ட வேண்டும்.

சென்னை - 7, பேர்ணாம்பட் எம். ரஃபி.

O வாழப்பாடியார் ராஜினாமா செய்ததனால் என்ன பலன்? ''இவருக்குக் காபினெட் கிடைக்காததால்தான் ராஜினாமா செய்தார்; உண்மையாகச் செய்திருந்தால் எம்.பி. பதவியை அல்லவா செய்திருக்க வேண்டும்? இவர் ராஜினாமாவால் தமிழக இ. காங்கிரஸில், ஏற்கனவே முற்றிய பூசல், வெடித்ததுதான் லாபம். நரசிம்மராவின் எதிர் அணியான 'டெல்லி கிச்சன் காபினெட்'டுக்குத் தமிழ்நாடு சார்பாக மணிசங்கர ஐயரோடு வாழப்பாடியாரும் போகலாம். மற்றபடி சரியான கரம் மசாலா ஸ்டண்ட்தான்!

சென்னை - 88, கபில. வேங்கடேசன்.

O ''முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தேர்ந்தெடுத்துப் படுகொலை செய்திருப்பதைத் தனி நபருக்கு எதிரான சதித்திட்டமே தவிர, அரசுக்கோ பொதுமக்களுக்கோ எதிரான தீவிர வாதமாகாது'' என்று வழக்கறிஞர் துரைசாமி வாதாடுவது விதண்டாவாதமே தவிர, அறிவு பூர்வமான வாதம் என்று கூற முடியாது.

தூத்துக்குடி, எஸ். சம்பத்.

(இத்தகைய வாதத்தை எடுத்து வைத்ததற்காக யாரும் துரைசாமியைக் குறை கூற முடியாது. கட்சிக்காரருக்காக முடிந்த மட்டில் வாதாடுவது அவர் கடமை. நீதிபதியால் அவரது வாதம் ஏற்கப்படவில்லை என்பதே கவனத்துக்குரியது. -ஆர்.)

இ.வ.ன். இன் வ.வா. அ.பு.ம்!





நிதி அமைச்சர் கையில் நாட்டின் விதி!

மன்மோஹன்சிங்கின் நகைச்சுவை உணர்வு எல்லோராலும் விரும்பப்படுவது. ''தேர்தல் அறிக்கை எழுதுபவர்களுக்கு நிதி மந்திரியின் சங்கடங்கள் தெரியாது'' என்று அவர் நிருபர்களிடம் சொல்லப் போக, அவரது அரசிய ல் கட்சிக்காரர்கள், 'ஆ, ஊ'



என்று சாடினர். வாங்கிக் கட்டிக் கொண்ட மன்மோஹன், அடுத்த நிருபர் கூட்டத்தில், ''உப்பின் மீது உள்ள தீர்வையை நீக்கு வோம்'' என்று உறுதி கூறியிருந்தனர்; சந்தேகம் எதற்கு என்று அலசிப் பார்த்தால், எத்தனை தேடியும் உப்பின் மீதுள்ள தீர்வை அகப்படவேயில்லை! அப்படி ஒரு தீர்வை இருந்தாலல்லவா?'' என்று அரசியல்வாதி களின் அறியாமையை நாசூக்காகச் சுட்டிக் காட்டினார்.

பம்பாயிலிருந்து வெளிவரும் ஓர் இதழுக்காக நடந்த கருத்துக் கணிப்பின்படி, இந்த பட்ஜெட் மக்களுக்குப் பிடிக்க வில்லை; ஆனாலும், 'இதைவிட நன்றாக இப்போதைய நிலையில் எந்தக் கொம்ப னும் எதுவும் செய்து விட முடியாது' என்ப தும் பெருவாரியான மக்களின் கருத்து என்ப தும் தெரிய வருகிறது!

பிரிவினைக்கு முற்பட்ட இந்தியா வில், பஞ்சாப் மாநிலத்தில், காஹ் என்ற கிராமத்தில் பிறந்து, அனைவரது மனமும் கவர்ந்து, மன்மோஹன் என்று பெயர் பெற்றார் நமது நிதி அமைச்சர். சிறு வயதும், இளமைப் பருவமும் வறுமையில்தான் கழிந்தன என்றாலும் வகுப்பில் எப்போதும் முதலிடம். இந்தச் சிறப்பு எம்.ஏ. வரை தொடர்ந்தது.

புகழ்பெற்ற பொருளாதார வல்லுனர் எஸ். பி. ரங்கனேகர், மன்மோஹனின் திற மைகள் மேலும் வளர்க்கப்பட வேண்டும் என உணர்ந்து, பலத்த சிபாரிசு செய்ய, கடன் பெற்று கேம்பிரிட்ஜ் சென்றார்.

செயின்ட் ஜான் கல்லூரியில், பொரு ளாதார ஹானர்ஸ் பட்டத்துக்கு இணையான Economic Tripos என்ற கல்வியை, இரண்டே வருடங்களில் முடித்தார்! அதிலும் முதல் வகுப்பில் தேறிய ஒரே மாணவர் இவர்தான்! பரிசுகள் குவிய, ஆக்ஸ்ஃபோர்ட் அழைத் தது! அங்கேயும் பல பொருளாதார நிபு ணர்களின் கீழ் பயின்றார்.

அந் நாளைய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இவர் ஆற்றல் பற்றி கேள்விப்பட்டு, அரசாங்கப் பதவி தர முன் வந்தார். ஆனால் இவருடைய லண்டன் பயணத்துக்குப் பகுதி நிதி அளித்திருந்த பஞ்சாப் பல்கலைக் கழகம், முதல் உரிமை கொண்டாடியது. அங்கு மூன்று ஆண்டுகள் பேராசிரியராக இருந்தவருக்கு மறுபடி ஆக்ஸ்ஃபோர்ட் வரவேற்பு நல்கியது. ஆய்வு நடத்த உதவியது.

இதன் பிறகு இந்திய அரசுக்கும், பஞ்சாப் பல்கலைக் கழகத்துக்கும், ஐ. நா. சபையின் வர்த்தக அபிவிருத்திப் பிரிவுக்கும் இடையே நடந்த மும்முனைப் போட்டி களில் இந்திய அரசு தோற்றது. மன் மோஹன்சிங்கின் சேவை, பல்கலைக் கழ கத்துக்கும் ஐ. நா. சபைக்குமே கிடைத்தது!

இதற்குக் காரணம், 'அரசுப் பணியில் சுதந்திர சிந்தனைக்கும் செயல்பாடுக்கும் வாய்ப்பிராது' என்று மன்மோகன் சிங்

கருதியதாக இருக்கலாம். இதை உறுதிப் படுத்துவதே போல ஒரு நிகழ்ச்சி. புதிதாகத் தொடங்கப்பட்ட டில்லி பொருளாதாரக் கல்வியகத்தில் பேராசிரியராகப் பணி யாற்றியவரை, இந்திரா காந்தி வற்புறுத்தி, வெளிநாட்டு வர்த்தக அமைச்சரகத்தில் பொருளாதார ஆலோசகராக நியமித்தார். ஆனால் வெகு சீக்கிரமே மேலதிகாரி களுடன் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகள் காரணமாகப் பதவி துறந்தார் மன்மோஹன்!

வர்த்தகத் துறை அமைச்சகத்தின் நஷ்டம், நிதித் துறை அமைச்சகத்தின் லாப மாக முடிந்தது. 1977-ல் ஜனதா கட்சி ஆட்சி அமைக்கும் வரை இவர் நிதி அமைச்சகத்தில் பொருளாதார ஆலோசகர் - காரியதரிசி யாகப் பணிபுரிந்தார். 80-ல் மீண்டும் இந்திரா பதவிக்கு வர, இவர் திட்டக் குழுவில் உறுப்பினர் - காரியதரிசியாக நியமனமா னார். 1982 முதல் 85 வரை ரிஸர்வ் வங்கியின் கவர்னராகவும் விளங்கினார்.

பிரபல இசை அமைப்பாளர் கல்யாண்ஜி ஆரம்ப நாட்களில் பலருக்கு இசைப்பயிற்சி அளித்தார். ஒரு பெண்மணிக்கு ஹார்மோனி யம் கற்றுக் கொடுத்தபோது ஒரு நாள் அவள் கணவர் வந்து 'ஹார்மோனியத்துக்கு பதிலாக இவளுக்குப் புல்லாங்குழல் சொல் லிக் கொடுங்கள்!'' என்றார்.

''இப்பொழுதுதான் ஹார்மோனியத்திலே கை பிடிபட்டிருக்கிறது. ஏன் மாற்றச் சொல் கிறீர்கள்''? என்று கேட்டார் கல்யாண்ஜி.

''புல்லாங்குழல் வாசிக்கும் பொழுது இவள் வாய்விட்டுப் பாட முடியாது. பாருங் கள்! அதற்காகத்தான்!'' என்றார் அவள் கணவர்.

- குறும்பன்

ராஜீவ் பதவி ஏற்ற போது மறுபடி மன்மோஹன் சிங்கின் சுதந்திர சிந்தனை ஆட்சியாளருக்கு இடைஞ்சலாகக் காணப் பட்டது. 'திட்டக் கமிஷன் போன்ற தேசிய அமைப்புக்களுக்குள் கட்சி வாத அரசியல் புகக் கூடாது' என்று கூறி, பதவி துறந்தார் மன்மோகன்.

வி. பி. சிங் ஆட்சி, இவரைப் பொரு ளாதார ஆலோசகராக விளங்குமாறு கேட்டுக் கொண்டது. இவர் யோசித்து



முடிவு செய்வதற்குள் ஆட்சியே கவிழ்ந்து விட்டது! அடுத்து வந்த சந்திரசேகர், இவரை ஏற்றதில் ராஜீவுக்குக் கடுப்புத்தான்!

மன்மோஹன்சிங் இடதுசாரி மனப் போக்கு உடையவர். 'சர்வதேச நிதி நிறு வனம், உலக வங்கி போன்றவை மூலமாக வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளை அடிமை கொள்ளப் பார்க்கின்றன' எனக் கருதி, அவர் கண்டித்திருக்கிறார்.

இன்று அவரே நிதி அமைச்சராக இருந்து, சர்வதேச நிதி நிறுவனத்தின் (IMF) விருப்பத்துக்கு இணங்க, ரூபாயின் மதிப்பைக் குறைத்தார். அயல்நாடுகளின் முதலீட்டுக்கும் போட்டா போட்டிக்கும் நமது பொருளாதாரக் கதவுகளைத் திறந்து விடல் போன்ற காரியங்களைச் செய்திருக் கிறார்.

கொள்கை மாறுபட்டு, இத்தகைய நிர்ப் பந்தங்களுக்கு அவர் உள்ளாகியிருந்த போதி லும் அவருடைய தேசபக்தியையோ, நாண யத்தையோ சந்தேகிப்பவர் யாருமில்லை.

- சு. கணபதி.

4

மகாபலேஷ்வர் போகாததில் மாமியாருக்கு ரொம்ப வருத்தம்.


அவர்களும் வருவதாக இருந்தது. ''என்ன ஆபீஸ் இது. மாப்பிள்ளை இந்தக் கணம் வேலையை விட்டு விடுவதுதான் நல்லது'' என்றாள்.

''அதெப்படி'' என்று மாமனார் சொல்வதற்குள் மனோஜ் தீர்மானமாக ''என் வேலை ராஜினாமா இதையெல்லாம் பற்றி நான் கவலைப்பட்டுக் கொள்கிறேன்'' என்றான்.


மாமியார் கோபப்படாமல் ''இப்போது என் பெண்ணின் எதிர்காலமும் சம்பந்தப்பட்டிருக்கிறதல்லவா? அதனால் நாங்கள் உங்கள் நல்லதுக்காகச் சொல்வதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்'' என்றாள்.

ப்ரமீளா வாக்மன் மாட்டிக் கொண்டு, இதையெல்லாம் கேட்காமல்

கம்ப்யூட்டர் கிராமம்



ஜேனட் ஜாக்ஸனுக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் ஆடைகள் சரியாக இல்லாதது இவனுக்குச் சங்கோஜமாக இருந்தது. "ப்ரமிளா வேர் ஸம்திங் டீஸண்ட்" என்று இவன் சொன்னது அவள் காதில் விழவில்லை. புன்னகைத்துக் கண்ணடித்தாள்.



"குடும்பமே நட்டு" என்று ஷண்பேகரிடம் சொன்னான்.

"இப்போது சொல்லிப் பிரயோசனமில்லை. என் கவலையெல்லாம் இந்தப் பெண்ணை நீ பின்குறிப்புப் போல அழைத்து வரப் போகிறாயா அல்லது வெட்டப் போகிறாயா?"

"ஒவ்வொரு நாள் ஒவ்வொன்று சொல்கிறார்கள். எனக்குக் குழப்பமாக இருக்கிறது..."

"நாலு நாள் திகட்டுகிற வரை காதல் பண்ணு. ஆனால் கிராமத்துக்குத் தனியாக வா. என்னால் கண்களில் காதல் மையிட்ட அரை இன்ஜினியருடன் ஸாஃப்ட் வேர் 'கான்ஃபிகர்' பண்ண முடியாது!"

"ஏதும் என் பொறுப்பில் இருப்பதாகத் தெரியவில்லை. எதற்குத்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டேனோ" என்றான்.

"கின்னஸ் ரிக்கார்டில் போட வேண்டும். கல்யாணமான இரண்டாம் நாள் விரக்தியடைந்த முதல் மதராஸி கணவன் நீதான்!"

"ஷண்! கேலியை விட்டு விட்டு உருப்படியாக ஒரு யோசனை சொல் நண்பனே."

"சொல்கிறேன். கோபப்படாமல், குறுக்கிடாமல் கேள். பெண்ணை அழைத்து எப்படியாவது முதல் பத்து மிஞ்சிப் போனால் இரு வாரம் வைத்திருந்து விட்டு அனுப்பி விடு. அதற்கு மேல் அவளுக்குத் தாங்காது. பம்பாயிலிருந்தவர்கள் ஒரு வாரத்துக்கு மேல் கிராமத்தில் இருக்க முடியாது என்று ஒரு சர்வே சொல்கிறது."

"பார்க்கலாம்" என்றான்.

வெள்ளிக் கிழமை, மொத்தம் எட்டு பெட்டிகளுடன் தாதரில் சென்னைக்கு ரயில் ஏறினார்கள். ரயில் புறப்படும் வரை அம்மாவும் பெண்ணும் மூக்கைச் சிந்திக் கொண்டு, சன்னல் மூலம் பேசிக் கொண்டிருந்தார்கள். "நீயும் போய் விட்டு வாயேன்" என்று அம்மாவிடம் ராமச்சந்திரன் யோசனை சொல்லிப் பார்க்க, அவரைக் கடுமையாக முறைத்துப் பார்த்தாள். ப்ரமிளாவுக்கு அத்தனை சினிமாப் பத்திரிகைகளையும் வாங்கிக் கொடுத்திருந்தாள். இடையே டிம்பிள் ஸன்னி தேல் என்று பேச்சு அடிபட்டது. ஷண்பேகர் எதிர் ஸீட்டில் "நியோ ஃபிலியா" என்று ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான். மனோஜ் மாமனாருடன் பொது விஷயங்கள் பேசினான். "மாப்பிள்ளை ஒவ்வொரு ஜங்ஷனிலும் 'டோட்டு'வை ஒருமுறை போய்ப் பார்த்துக் கொண்டு வந்து விடுங்கள்.

சுஜாதா



டோட்டு இல்லையேல் ப்ராணனை விட்டு விடுவாள்.''

''டோட்டு யார்?'' என்றான் ஷண்பேகர்.

''என் நாய்'' என்றாள் ப்ரமிளா.

''டோட்டு இப்போது நம்முடன் வரு கிறதா?''

''ஆம் மூஞ்சியைக் கூடை கட்டி, வேனில் வருகிறது.''

''கடவுளே!'' என்றான்

''ஏன்?''

''ஒன்றுமில்லை. தி மோர் தி மெர்ரியர்! கம் ஒன், கம் ஆல், ஒரே ஒரு சிக்கல். கிராமத்தில் நம் மாப்பிள்ளை மற்ற வேலைகள் எதையும் பார்த்துக் கொள்ள முடியாது.''

''அதற்குத்தான் நீ இருக்கிறாயே!'' என்று அவள் சொன்னதை ஷண்பேகர் நிச்சயமாக ரசிக்கவில்லை!

மனோஜை முறைத்துப் பார்த்தான்.

ஒன்றரை நாள் பிரயாணத்தில் ப்ரமிளா மூன்று அல்லது நான்கு முறை சன்னலுக்கு வெளியே பார்த்திருப்பாள். மற்ற நேரங் களில் சினிமாப் பத்திரிகைகள் படித்தாள். அல்லது மனோஜைக் கண்கொட்டாமல் பார்த்தாள்.

ஷண்பேகருக்கும் ப்ரமிளாவுக்கும் சம்பாஷணை இவ்வாறு இருந்தது :''ஷண் உனக்கு ஆக்டர்ஸ் யார் பிடிக்கும்?''

''ஜேம்ஸ் டீன்.''

''எனக்குக் கோவிந்தாதான் பிடிக்கும். மனு கூட கோவிந்தா மாதிரி இல்லை? நீங்க 'புல் பனே' அங்காரே பாத்திங்களா?''

''இல்லை நான் அதிகம் சினிமா பார்க்கறதில்லை.''

''நான் ஒரு நாளைக்குக் குறைந்தது ரெண்டு வீடியோ பார்ப்பேன்.''

''வி.ஸி.ஆர். கொண்டு வந்திருக்கிங் களா?'' என்றான் கவலையுடன்.

''இல்லாம? வி.ஸி.ஆர். இல்லாம எப்படிப் பொழுது போகிறதாம்?''

''மனோஜ்!'' என்று அதட்டினான்.

மனோஜ், ''இது என் தீர்மான மில்லை!'' என்றான்.

''அது என்ன புத்தகம்?''

''உனக்குப் புரியாது!''

''அதோ பார் மலை மேல ஆட்டுக் குட்டி.''

''இண்டரஸ்டிங்.''

ஷண்பேகர் பாத்ரூம் போயிருக்கிற போது, ''நீ அவனிடத்தில் ஆட்டுக்குட்டி இந்தி சினிமா எல்லாம் பேசாதே'என்றான் மனோஜ்.

''ஏன்?''

''அவன் ஒரு மாதிரி...''

''பைத்தியமா?''

''இல்லை, ரொம்ப படித்தவன்; கம்ப் யூட்டர் விற்பன்னன். அவனுக்குப் பிடிக்கிற விஷயங்கள் நமக்குப் பிடிக்கிறதில்லை. . . . . . . நமக்குப் பிடிக்கிற விஷயங்கள் அவ னுக்குப் பிடிக்காது.''

''அவன் கூட பேச வேண்டாமா?''

''அப்படியில்லை.''

''பேசலை.''

ஷண்பேகர் திரும்பி வந்ததும் ப்ரமிளா மௌனமாக இருந்தாள். முதன் முதலாக அந்தப் பெண் அப்படியொன்றும் எளிதானவள் அல்ல என்று அறிந்து கொண் டான்.

சென்ட்ரல் ஸ்டேஷனில், பி.ஆர். டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து வாசுதேவன் நாயர் வந்திருந்தார். ப்ரமிளாவைப் பார்த்து, ''இவங்களும் உண்டா?'' என்றார்.

''ஆமாம் கூட வரப் போறாங்க.''

''ஒரு ரூம்தானே இருக்கு...''

''லெட்ஸ் ஸீ...''

வாசுதேவன் மிகுந்த கவலையுடன், ''அங்க வேற எதும் கிடையாது ஸார்...'' என்றார் அழாக்குறையாக.

''ஆரம்பாக்கத்திலே?''

''ஆரம்பாக்கத்திலதான் தங்கப் போறீங்க.''

''எதுவாவது வீடு கீடு வாடகைக்கு எடுக்கலாம் வாசுதேவன் கவலைப் படாதீங்க. அண்டென்னாவைப் பற்றிக் கவலைப்படுங்க. எக்விப்மெண்ட் போச்சா?''

''போயிண்டு இருக்கிறதாக்கும் பதுக்க! ஸ்டேட் ஹைவே வளர மோசமாக்கும். மழை வந்து குண்டும் குழியுமாக இருக்கு. வளர டைவர்ஷன். அண்டென்னா ட்ரெய் லர்தான் கவலையா இருக்கு. ஒண்ணு ரெண்டு பாலம் ரொம்ப மோசம். ஸப்காண்ட்ராக்ட் விட்டிருக்கேன். இன்ஷூ ரன்ஸ்காரங்க வரலை இன்னும். அவங் களும் எஸ்கார்ட் பண்ணணும்ங்கறாங்க.''

''மற்ற பெட்டிகள் எல்லாம்?''

''போய்ச் சேர்ந்திருக்கு.''

''கம்ப்யூட்டர் பாக்ஸ் போயிருக்கில்லை?''

''போயாச்சு. நீங்க துவங்கலாம். ஆண்டெனாதான் சிரமப்படும். முதல்ல சைட்டைக் கிளியர் பண்ணணும். அதில் ஒரு சிக்கல் உண்டு...''

''என்ன?''

''நீங்க முதல்ல போய் செட்டில் ஆகட்டும். இன்னைக்கே எல்லா துக்க செய்தியையும் சொல்லிட விரும்பலை.''

ஷண்பேகரும் மனோஜும் பார்த்துக் கொண்டார்கள்.

''மனு, டோட்டுவை எடுத்துட்டு வரணும்'' என்றாள் ப்ரமீளா.

''டொட்டுன்னா?''

''நாய், நாயர்.''

''இது என்ன? பிக்னிக்கா வந்திருக்கீங்க?'' என்று பொட்டியெல்லாம் பார்த்தார்.

கடைசி வண்டிக்குப் போய், டோட்டுவை விடுவித்து, அதைக் கன்னத்தில் வைத்துத் தேய்க்க, அது இரண்டு நாள் தனிமையை அவளிடம் சொல்லி 'என்னை இப்படி விட்டு விட்டுப் போய் விட்டாயே!' என்று புகார் செய்வது போல் அழுதது. மனோஜ் அதை வாங்கிக் கொள்ள முயற்சி செய்த போது உறுமியது. ஷண்பேகரையும் அதற்குப் பிடிக்கவில்லை.

மாருதி ஜீப்பில் பின்பக்கத்தில் பெரும்பாலும் ப்ரமீளாவின் பெட்டிகளே ஆக்கிரமிக்க, வாசுதேவன் பாவம், ரொம்ப ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ஸ்டேஷனிலேயே காலை உணவு முடித்து விட்டு, ஆரம்பாக்கம் நோக்கிப் புறப்பட்டார்கள். வெயில் இப்போதே கடுமையாகிக் கொண்டிருக்க, மழையற்ற பூமி பல இடங்களில் பிளந்திருந்தது. அங்கங்கே பம்ப் செட் முயற்சிகளால், ஸ்டாம்பு ஒட்டினாற் போல பசுமை தெரிந்தது. க்யுமுலஸ் மேகங்கள் காற்றோடு சீண்டிக் கொண்டிருந்தன. முன்னும் பின்னும் லவுட் ஸ்பீக்கரமைத்த வண்டிகள் சினிமாவையோ அரசியலையோ பிரகடனித்துக் கொண்டு அடிக்கடி கடந்தன. லாரிகளில் முன்பகுதியில் பிரயாணிகள் குந்தி உட்கார்ந்திருக்க, புழுதி பரப்பி அலறிக் கொண்டு ஒவ்வொரு முறையும் கடந்த போதும் தார் ரோடை விட்டு இறங்க வேண்டியிருந்தது. டிரைவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த ப்ரமீளா அடிக்கடி டிரைவர் மேல் சாய வேண்டியிருந்தது.

''கான்வாய் போற வழியில பார்க்கலாம்'' என்றார் நாயர்.

புத்தூர் என்கிற சுமாரான டவுனின் அருகில் அண்டெனா கான்வாய் மூன்று வண்டிகள் நீண்ட ட்ரெய்லரில் காத்திருந்தது. சிவப்புக் கொடியும் எச்சரிக்கை விளக்குமாக.

''என்னப்பா?''

''கல்வர்ட் கனம் தாங்காதுங்க. பெட்டிங்களை இறக்கித் தனித்தனியாத்தான் கடத்திக்கிட்டு மறுபடியும் லோடு பண்ணிட்டுப் போகணுங்க.''

''எத்தனை நாளாகும்?''

''இதுக்கே மூணு நாள் ஆயிடும்.''

''இம்மாதிரி எத்தனை கல்வர்ட்டு இருக்கு?''

''பத்தோ பன்னண்டோ சொல்றாங்க இன்ஜுரன்ஸ்காரங்க...''


''நாசமாப் போச்சு!''

ஷண்பேகர் ''என்ன சமாசாரம்? என்றான். மொழிபெயர்த்துச் சொல்ல, ''ஸுப்பர்!'' என் புத்தகங்கள் எல்லாம் ஒன்பது நாளிலே தீர்ந்து போய் ப்ரமீளாவின் சினிமா புத்தகங்கள்தான் பாக்கியிருக்கும்,'' என்றான்.

அவன் கேலி அசந்தர்ப்பமாக இருந்தது. ப்ரமீளா ஆலமரத்தடியில் உட்கார்ந்திருந்தாள். டிரைவர் அவளிடம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தான். அதன் காரணத்தை அறியாமல் அவனுடன் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தாள். மனோஜுக்கு எரிச்சலாக வந்தது.

ஆரம்பாக்கத்தை வந்தடைந்த போது ஊரே இருட்டாக இருந்தது.

(தொடரும்)



- குடந்தை எம். சாம்பிரபு

பிரணவ மந்திரம்

ரமா அறிமுக எழுத்தாளர்

''சித்ரா.... சித்ரா....''

கவனம் சிதற, புத்தகம் கீழே விழுந்தது. காரணம் அம்மாவின் குரல் வித்தியாசம். குரலில் ஏதோ மாற்ற மிருப்பதை உணர முடிந்தது. விழுந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது மணி பன்னிரண்டைத் தொட்டுக் கொண்டிருந்தது.

கீழே இறங்கியபோது டைனிங் ஹால் சாப்பாட்டிற்குத் தயாராக இருந்தது. பெரியண்ணன் பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தான். அண்ணி குழந்தைக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

''அண்ணி, அம்மா எங்கே?''

''கிச்சன்ல இருக்காங்க, சித்ரா.''

சமையலறைக்குள் நுழைந்தபோது அடுப்பில் ஏதோ காரியமாகயிருந்தாள்.

''என்னம்மா, எதுக்குக் கூப்பிட்டீங்க?''

குரல் கேட்டுத் திரும்பினாள் அம்மா.

''உங்கிட்ட ஏதோ பேசணுமாம். அப்பா உன்னை வரச் சொன்னாங்கம்மா.''

அம்மாவின் குரல் வித்தியாசத்துக்குக்காரணம் புரிந்தது. இந்த இருபது வருஷத்தில் அப்பாவோடு பத்து வார்த்தைகள்தான் நான் பேசியிருப்பேன்.

என்ன விஷயமாகயிருக்கும். ஒரு வேளை மாப்பிள்ளை பார்த்திருப்பாரோ? சம்மதம் கேட்கக் கூப்பிடுகிறாரோ? என்னவாகயிருக்கும், மனம் தவித்தது. என்னிடம், என்ன பேசப் போகிறார்.

இது அப்பா, மகள் சந்திப்பு என்பதைவிட ஒரு இண்டெர்வியூ போலிருந்ததால், அப்பாவின் அறையை நெருங்கியபோது ''மே ஐ கம்மின்?'' என்று நுனிநாக்கு வரை வந்துவிட்ட வார்த்தைகளை அடக்கச் சிரமமாகயிருந்தது. தைரியமாக அறைக் கதவைத் திறந்த போது, அப்பா யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்து இலேசாகச் சிரிப்பது போல் தெரிந்தது. ஸ்னேகமான சிரிப்புத்தான். இருந்தாலும் எப்படி, என்னைப் பார்த்துச் சிரிக்க முடிந்தது! ஏ. சி. கும்மென்று முகத்தைத் தாக்கியது.

அறை நுணுக்கமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த இருபது வருஷத்தில் அப்பாவின் அறைக்குள் நுழைந்தது இதுவே முதல் தடவை. அறைக்குள்ளிருந்த புத்தக அலமாரி கவனத்தை ஈர்த்தது.

அப்பா அதிகம் படிக்காதவர். சதா பிஸ்னஸ். அவரா இத்தனை புஸ்தகம் வாசிக்கிறார்? புக்மார்க்குடன் வைக்கப்பட்டிருந்த புத்தகத்தை எடுத்தபோது அது ஜே. கிருஷ்ணமூர்த்தியினுடையது என்று தெரிந்தது. தலையே சுற்றியது. அப்பா ஜே.கே. வாசிக்கிறாரா? ஆச்சரியமாக இருந்தது. திரும்பி அப்பாவைப் பார்த்த போது, அப்பாவும் நேராகப் பார்த்துக் கொண்டிருந்தார். போன் பேசி முடித்துவிட்டார் போலும். புத்தகத்தை அலமாரியில் வைத்துவிட்டு, அவரெதிரில் சுவாதீனத்தோடு உட்கார்ந்த போது சங்கடமாயிருந்தது.

சிறிது நேரம் நிலவிய மௌனம் சித்திரவதையாக இருந்தது. அப்பா தான் ஆரம்பித்தார்.

''என்னம்மா, பரீட்சையெல்லாம் முடிஞ்சு போச்சா?''

''இல்லப்பா, அடுத்தமாசம் தான் ஆரம்பம்.''

''இப்ப லீவாம்மா?''

''ஆமாம்பா.''

''நேத்து உன்ன "Land Mark" பக்கத்தில் பாத்தேனே.''

நேற்று குருவோடு புத்தகம் வாங்கப் போனது பளிச்சென்று ஞாபகம் வந்தது. அப்பா நேரடியாக விஷயத்திற்கு வந்தது பிடித்திருந்தது.

''ஆமாம்பா, புக்ஸ் வாங்கப் போயிருந்தேன்.''

''அது யாருமா, கூட ஸ்கூட்டர்ல?''

''அது குருமூர்த்தி. ஹவ்சர்ஜன்சி பண்றான்.''

''உங்க ரிலேஷன்ஷிப் எப்படி?... ஜஸ்ட் நட்பா இல்ல.....''

இப்படித் தயங்கித் தயங்கிச் சொல்லுவதற்குக் காதல் அவ்வளவு அசிங்கமான விஷயமா? புரியவில்லை. முற்றிலும் ஒரு வெளி மனிதரிடம் எப்படி பர்ஸனல் விஷயங்களைப் பகிர்ந்து



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - '91
ரூ. 500/- மூன்றாவது பரிசு பெறும் கதை - 2




கொள்வது. 'அப்பா', 'மகள்' என்று சொல்லளவில் நெருங்கிய உறவு. நான் சொல்லியே ஆகவேண்டும். என் நல்லது, கெட்டது இவரைப் பாதிக் கும்.

''வெறும் நட்பு இல்லப்பா.'' - அதிர்ந்து விட்டாரோ? அவர் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. மெதுவாக எழுந்து நடந்தார். அப்பா கண்டிப்பானவர். அவர் சொல்லை மீறி வீட்டில் எதுவும் நடந்ததில்லை.

''ஏம்மா, எப்படி அவ்வளவு தீர்மான மாச் சொல்றே?''

''இதில் என்ன தீர்மானம், தைரியம் வேண்டியிருக்கு. நட்புனா நட்புனு சொல் றேன். இல்லைனா இல்லைனு சொல்றேன். இதுல வெட்கப்படவோ, அசிங்கப்படவோ ஒண்ணுமில்லை.''

''காதலுக்கும், நட்பிற்கும் என்ன வித்தி



யாசம்னு நினைக்கிறே?'' .

அப்பா சீரியஸாகவா கேட்கிறார் என்று திரும்பிப் பார்க்க, அவர் நிதானமாகச் சுவரில் சாய்ந்து கொண்டு பதிலை எதிர் பார்ப்பவர் போல் நின்றார். ஆச்சரியமாக யிருந்தது.

''அந்த வித்தியாசத்தை உணர முடியுமே தவிர, சொல்ல முடியாதுப்பா.''

எதிரே வந்து நின்றார்.

''ஏம்மா, பையன் ப்ராமின் போல் தெரியுது.''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. ஆமாம். உங்களுக்கு எப்படித் தெரியும்?''



- கவிட் ரவி

''அதான் நேத்து பாத்தேனே ஸ்கூட்டர்ல...''

இரண்டு செகண்ட் பார்த்திருப்பாரா? பெண் பின்னாடி ஏறிப் போகிறாளே என்ற ஒரு காரணம். இல்லாவிட்டால் உரசிக் கொண்டு போனாலும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

''ஏம்மா, பையன் நம்மை விடப் பணக்காரனோ?''

கேள்வி அசிங்கமாகவிருந்தது. அவர் போக்குப் புரியவில்லை.

''அப்பா, அவன் பணக்காரனா, ப்ராமி னான்னு பார்த்துக்காதலிக்கலை. நல்லவன், புத்திசாலி. அவ்வளவுதான் எனக்கு வேணும்.''

அப்பா இலேசாகச் சிரித்தார்.

''ஏம்மா, பணத்திற்காகக் காதலிக்கறது அசிங்கம்னா, புத்திக்காகக் காதலிக்கறது ரொம்ப உசத்தின்னு நெனக்கிறயா? அது மகா அசிங்கம்!''

அப்பா சொல்வது நிஜம். ஆனால் புத்தியை அசிங்கமாப் பார்க்கறது கஷ்டம்.

''ஆல்ரைட். அது போகட்டும். ஏம்மா கல்யாணம் பண்ணிக்கறாப்புல ஐடியா யிருக்கா இரண்டு பேருக்கும்... இல்ல....'' - சீண்டுகிறாரோ. ஆத்திரமாக வந்தது.

''இப்போதைக்கு இல்லை. இன்னும் இரண்டு மூணு வருஷம் கழிச்சுத்தான்.''

''ஏன்? ஒரு வேளை ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்ள இன்னும் மூணு வருஷம் தேவைப்படுதா?''

''மூணு வருஷம், என்ன முப்பது வருஷம் ஆனாலும் ஒரு மனுஷனைப் புரிஞ்சுக்கறது அவ்வளவு சுலபமில்லை. வேற ஒண்ணுமில்லை. நான் ரிசர்ச் பண்ண ணும்னு இருக்கேன். குரு, M.D. பண்ண ணும்னு சொல்றான். ஸோ, இப்ப கல்யா ணத்திற்கு அவசரமில்லை.''

சற்று யோசனையாக இருந்தவர் -

''ஏம்மா, சித்ரா அந்தப் பையனை உனக்கு நல்லாத் தெரியுமா?'' என்றார்.

''ஓரளவுக்குத் தெரியும். தெரிஞ்ச வரைக்கும் நல்லவன்.''

''எப்படிம்மா, ஓரளவுக்குத் தெரிஞ்ச வனைக் கல்யாணம் பண்ணிக்கிறேனு சொல்றே? அப்ப, நான் பார்த்துப் பண்ணி வைக்கறதுக்கும், இதுக்கும் என்ன வித்தி யாசம்?''

''நீங்க பாக்கிறவன் எனக்கு அன்னியன். அன்னியனோடு குடும்பம் நடத்த முடி யாது.''

அப்பா வெகு யோசனையோடு உட்கார்ந்திருந்தார்.

''நாளைக்கே உங்க ரெண்டு பேருக் குள்ளே கருத்து வேறுபாடு ஏற்பட்டால்?''

''ஒத்துப் போகிற விஷயமாயிருந்தால் ப்ராப்ளமில்லை. முடியலைன்னா விலகி நண்பர்களாத் தொடருவோம்.''

அப்பாவின் இந்தக் கேள்வியை இது நாள் வரை யோசித்ததில்லை. ஆனால் இது தான் விடை என்று தெரிந்தது.

''விலகி நிற்கிறதுக்கா இத்தனை ஆர்ப்பாட்டம். ஆழம் தெரியாமல் காலை விடறயோன்னு தோணுது....''

''வாஸ்தவம். ஆழம் தெரியலைதான். ஆழம் தெரிய ஆரம்பித்து விட்டால் அப்புறம் நீச்சல் ரொம்ப கஷ்டம். ஆழம்

நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்ததனால் இங்கிலீஷ் கிராமர் என்றால் எனக்கு கொஞ்சம் அலர்ஜி.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைக்குத் தேவையான இங்கிலீஷ் சம்மரிகளைப் படித்து, மனப்பாடம் செய்து, பரீட்சைகளில் எப்படியோ பாஸ் செய்து விட்டேன். ஆனால்...



படிப்பை முடித்து விட்டு, வேலைக்குச் சென்றபோதுதான் ஆங்கிலத்தின் அவசியத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

எங்களது ஹெட் ஆபீஸிலிருந்து வரும் அதிகாரிகள் ஆங்கிலத்தில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் பேச முடியவில்லையே என்று பல சமயங்களில் வேதனைப்பட்டதுண்டு.

மேலும் அலுவலகத் தொடர்பான கடிதங்கள் எழுத அடுத்தவர்களது உதவியை நாடும் போது, இத்தனை வருஷம் சர்வீஸ் ஆகிறது இது கூடத் தெரியவில்லையே" என்று அவர்கள் ஏளனமாகப் பேசுவதைக் கேட்கும் போது, எனக்கு அழுகையே வந்துவிடும்.

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாக விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

இது என்னை நாடி வந்துள்ள நல்ல வாய்ப்பு என்ற நம்பிக்கையுடன் விவேகானந்தா கல்வி நிலையம் நடத்தும் தபால் முறைப் பயிற்சியில் சேர்ந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. ஆம்...

ஆங்கில இலக்கணத்தை அனைவருக்கும் புரியும் வகையில் அறிமுகப்படுத்தி, வாக்கியங்களை அமைக்கும் முறை பற்றி எளிய முறையில் சொல்லிக் கொடுத்து, தவறாகப் பேசி விடுவேமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச பல பயிற்சிகளைத் தொகுத்து வழங்கி, ஓர் ஆசிரியர் நம்மிடம் நேரில் உரையாடுவதைப் போல பயிற்சி முறை மிகவும் எளிய முறையில் அமைக்கபபட்டுள்ளது.

ஆர்வமுடன் இப்பயிற்சியை மேற்கொண்டதன் பலனாய் இப்பொழுது

நாடி வந்த நல் வாய்ப்பு!..

என்னால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடிகிறது. இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் எழுத முடிகிறது.

மிகக் குறுகிய காலத்தில் என்னை ஆங்கில மொழியில் புலமை பெறச் செய்த விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

Mrs. S. விசாலாட்சி

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலப் பயிற்சி பெறலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் உடனே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA



''வழக்கமாக் கொடுக்கிற லஞ்சம் தான் கொடுத்துட்டேனே! மேலே எதுக்குப் பத்து ருபாய் கேட்கறீங்க?''

''அது தூக்கத்திலிருந்த என்னை எழுப்பினத்துக்கு அபராதம்!''

-வேதபுரி எஸ். இரமேஷ்

தான் வாழ்க்கைப்பா.''

''என்னவோ, சங்கடமாயிருக்குமா மனத்திற்கு.''

''என்ன சங்கடம்பா? ஏம்பா, பிரசவ வலி தெரியாதவங்களே கிடையாது. ஆனா அந்த வலிக்குப் பயந்து யாராவது குழந்தை பெத்துக்காம இருக்காங்களோ, இல்ல கல்யாணம்தான் பண்ணிக்காம இருக்காங் களோ?''

ரொம்பப் பேசிவிட்டோமோ என்ற பயம் எழுந்தது. அப்பாவே சிறிது நேர மௌனத்திற்குப் பின் மெதுவாகக் கேட்டார்.

''இப்ப நானே ஒரு முரடனாகவோ, மூர்க்கனாகவோ இருந்தா என்ன பண்ணுவ?''

''நீங்க முரடன் இல்லப்பா.''

''எப்படி அவ்வளவு தீர்மானமாச் சொல்றே.''

''நீங்க முரடன் இல்லை. முரடன் நட்பிற்கும், காதலுக்கும் விளக்கம் கேட்க மாட்டான். பணம் போதைனா, புத்தியும் போதைன்னு அட்வைஸ் பண்ண மாட் டான்.

''ஓ. கே. அப்படியே நீங்க முரடனா யிருந்திருந்தால் நான் உங்க கண்ணுல படும் படி குருவோட ஸ்கூட்டர்ல போயிருக்க மாட்டேன். கமுக்கமாயிருந்து, படிச்சு, ஒரு வேலை வாங்கிட்டு, மாலையும் கழுத்துமா உங்க கால்ல விழுந்திருப்பேன்.''

இமைக்காமல் பார்த்துக் கொண்டி ருந்தவர் மெதுவாகச் சிரித்தார். சிரிப்பு இதமாகயிருந்தது.

''சித்ரா, இப்ப அவனை மறக்க முடிய லைன்னா, வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னால், நீ என்ன பண்ணுவதா உத்தேசம்?''

அப்பாவின் முகம் சிவந்திருந்தது. ஒருவேளை இவ்வளவு நேரம் அவர் பேசி யது எல்லாம் பொய்யோ? இதுதான் நிஜமோ? தலையே சுற்றியது. இதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்....

''நீங்க வெளியே போகச் சொன்னதும், நான் வெளியே போயிட்டா, இந்த இருபது வருஷத்திற்கு இல்லாத அர்த்தம், அந்த அரைமணிக்குத் தான் இருக்குனு ஆயி டும்..... அதுக்கும் மேல, 'நான் வேணும்னா, அவனை மற. அவன் வேணும்னா என்னை மற'னு சொல்றது உயிரோடு ஒரு ஜீவனுக்குச் சமாதி கட்டு வதற்குச் சமம். அது பலி கேட்கிறதுக்குச் சமானம். பலி கொடுத்துட்டு நிம்மதியா இருக்க முடியுமா? ரொம்பக் கொடூரம்பா!'' - குரல் உடைந்தது, என்னை அறியாமல்.

மெதுவாகத் தோள் மீது கைப்பட, நிமிர்ந்த போது அப்பா இதமாகத் தட்டிக் கொடுத்தார்.

''ரொம்பத் தெளிவாயிருக்கேமா. நான் உன்னைக் குழப்பிடலையே?''

''தெளிவாயிருக்கிறவங்களைக் குழப்ப முடியாதுப்பா.''

கடுமையான மௌனம் நிலவியது. கடுமை இதமாகயிருந்தது. கையைத் திருப்பி மணி பார்த்தபோதுதான் நினைவிற்கு வந்தது.

''அப்பா, ஒரு போன் பண்ணிக்க லாமா?''

''தாராளமாப் பண்ணிக்கோ. ஆமாம் யாருக்கு? எங்கேயாவது வெளிய போக ணுமா?''

''ஆமாம்பா. குருக்குத்தான் போன் பண்ணனும். ஒன்றரைக்கு லைப்ரரிக்கு வரேன்னு சொல்லியிருந்தேன். மணி ஒண்ணாயிடுத்து. நாளைக்கு வரேன்னு சொல்லிட்டா வெய்ட் பண்ண மாட்டான்.''

திரும்ப யத்தனித்தவளை அவர் கேள்வி நிறுத்தியது.

''ஏம்மா, எங்க போகணும்?''

''பாரீஸ் போயிட்டு, லைப்ரரி போக ணும். அவன் வீடு பாரீஸ்லயிருக்கு.''

''ஓ. கே. நான் வந்து ட்ராப் பண்றேன்.''

''அப்பா.....!''

''சித்ரா ஒனக்கு என்ன தெரியும்? நீ குழந்தைதானே. காத்திருந்து ஏமாந்து போறது இருக்கே, அது ரொம்ப பயங்க ரம்மா. நீ போய்ச் சாப்பிட்டுத் தயாராயிரு. நான் வரேன்.''

கார் சாவியை எடுக்கத் திரும்பியவர் கண்ணில் ஆணியின் மேல் மாட்டியிருந்த முருகன் படம் பட்டது. எப்போதும் இருக் கும் படம்தான். ஆனால் இன்று புதிதாக அதைப் பார்த்தார். இது நாள் வரைச் சொல்லாத விஷயம் இன்று சொல்வது போலிருந்தது அந்தக் குழந்தை முகம். புரிந்து கொண்டார்.

செல்லமாக முருகன் கன்னத்தில் தட்டி விட்டுச் சாவியை எடுத்துக் கொண்டு கிளம் பினார்.



'எலிமெண்ட்டரி ஸ்கூல் பையன் பரீட்சைக்குப் படிக்கிற தொனியில் படித்துப் பார்க்க வேண்டிய விமர்சனம்....

முன்னொரு காலத்தில் ஒரு தீயவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் மனைவியை, தன் மனைவியை, பற்பல கொடுமைகள் செய்து துன்புறுத்தினான்.

எனவே மனைவி ஆவேசமுற்று அவனிடம், அவனிடம், அவன் குழந்தையை வளர்த்து, ஆளாக்கி அவனையே ஜெயிப்பதாக வீராவேசத்துடன், வீராவேசத்துடன் கூறி விலகுகிறாள். ஆண்டுகள் செல்ல...

இப்போது அந்தப் பெண் கல்லூரியில் படிக்கிறாள். ஆடல், பாடல். பரிசுகள். ஐ.ஏ.எஸ். அதிகாரியாகிறாள். நேர்மையாக உழைத்து மக்களிடம் நற்பெயர் பெறுகிறாள். அப்போது மந்திரியாக இருக்கும் தன் தந்தையிடமே மோதி ஜெயிக்கிறாள். தந்தை தன் தவறுகளைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு திருந்துகிறார்.

பயிற்சி வினாக்கள்

'தாய் ஸ்ரீவித்யா தன் மகளிடம் கடுமையாக நடந்து கொள்ளக் காரணம் யாது?

தாய் ஸ்ரீவித்யா உண்மையில் மிக நல்லவர். மகளிடம் அன்பு நிறைந்தவர். ஒருபுறம் மிகக் கண்டிப்புக் காட்டிக் கொண்டு, மறுபுறம் பாசத்தை அடக்கிக் கொண்டு தத்தளிப்பவர். தன் மகள் தன் சவாலை நிறைவேற்றும் அளவுக்கு வாழ்வில் உயர வேண்டும் என்பதே அவரின் உண்மை விருப்பம்.

'பாடல்கள், நடிப்பு, இயக்கம் பற்றி...'

எஸ். ஏ. ராஜ்குமாருக்கு இது இறங்கு முகமோ, இறங்குமுகமோ எனச் சந்தேகம் வருகிறது. சிதாராவின் கனவுகள் சரியும் காலமிது. இயக்குனர் ஜெகந்நாதன் நம்மை மீண்டும் அறுபதுகளுக்கு அழைத்துச் செல்கிறார்.

'சிறப்பம்சங்கள்?'

பயிற்சிக்காக வரும் நாயின் தாவல்கள் சிறுவர்களையும், பாடல் காட்சியில் வரும் பூங்கா குழந்தைகளையும், சிதாராவின் கல்லூரித் தோழியாக வரும் (ஒரு வீடு இரு வாசல் பாலசந்தர் நாயகிக்கா இந்தக் கதி?) பெண்ணின் மனம் நிறைந்த நடிப்பு இளைஞர்களையும் கவரும். சண்டைக் காட்சிகளும் ரசிக்க வைக்கின்றன.

'படத்தைப் பற்றி ஒற்றை வரியில் நும் கருத்தை எழுதுக?'

வெகு விரைவில் தொலைக் காட்சிப் பெட்டியில் நம்மைச் சந்திக்க இருக்கிற, நம்மைச் சந்திக்க இருக்கிற...

- சுந்தர்ஜி.

சிவகாமியின்

ஐம்பத்து நாலாம் அத்தியாயம்
சபை கலைந்தது

சபா மண்டபத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி ஒருவாறு அடங்கிச் சற்று அமைதி ஏற்பட்டதும் மகேந்திர பல்லவர் மேலும் தொடர்ந்து கூறலானார் :-

''சபையோர்களே! நீங்கள் சொல்கிற படி பல்லவ சாம்ராஜ்யம் என் ஒருவனையே நம்பியிருப்பதாக நான் ஒத்துக் கொள்ள வில்லை. இதோ என் வீர மகன் மாமல்லன் பல்லவர் குலப் பெருமையை நிலை நாட்டுவதற்கு இருக்கிறான். ஆனாலும் வாதாபி மன்னனை நான் அவனுடைய படை வீட்டில் சந்தித்தது வெறும் சாக ஸத்துக்காக அல்ல. புலிகேசியை நான் நேரில் பார்ப்பதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. சற்று முன்னால் உங்களை யெல்லாம் பெருங் கலக்கத்துக்கு ஆளாக்கிய நாகநந்தியடிகள் ஒன்பது மாதத்துக்கு முன்னால் நமது கோட்டைத் தளபதியிடம் ஒரு ஓலை கொடுத்துப் புலிகேசிக்கு அனுப்பியிருந்தார். ஆயனரிடம் சிற்பக் கலை கற்க வந்திருந்த இந்த வீர வாலிபர் அந்த ஓலையில் உள்ள செய்தி இன்ன தென்று அறியாமல் எடுத்துக் கொண்டு போனார். வழியில் இவரிடமிருந்து அந்த ஓலையை நான் வாங்கிக் கொண்டு புலிகேசியின் கூடாரத்துக்குச் சென்றேன். ஆனால், நான் புலிகேசியிடம் கொடுத்தது நாகநந்தியின் ஓலை அல்ல. நான் மாற்றி எழுதிய ஓலையைக் கொடுத்தேன். அதன் பயனாகவும், நமது வீர சேனாதிபதி கலிப்பகையாரின் போர்த் திறமை காரண மாகவுந்தான் வாதாபி சைனியத்தை வட பெண்ணைக் கரையில் எட்டு மாதத்துக்கு மேல் நிறுத்தி வைக்க முடிந்தது.''

''பிரபு! நாகநந்தியின் ஓலையில் என்ன எழுதியிருந்ததோ?'' என்று முதன் மந்திரி சாரங்கதேவர் கேட்டார்.

''காஞ்சி நகரைப் போன்ற பாதுகாப்பு அற்ற நகரம் வேறு இருக்க முடியாதென்றும், வாதாபி சைனியம் வழியில் எங்கும் தங்காமல் நேரே காஞ்சிக்கு வந்து சேர வேண்டுமென்றும், மூன்றே நாளில் காஞ்சி யைப் பிடித்து விடலாம் என்றும் எழுதி யிருந்தது!....''

சபையின் நாலா பக்கங்களிலிருந்தும் அப்போது கோப கர்ஜனை முழக்கங்கள் ஒருமிக்க எழுந்து ஒலி செய்தன.

சக்கரவர்த்தி கையமர்த்திக் கூறினார் : ''நாகநந்தி அச் சமயம் எழுதியிருந்தது முற்றும் உண்மை. அப்போது வாதாபியின் பெருஞ் சைனியம் நேரே காஞ்சிக்கு வந்தி ருந்தால் மூன்று நாளைக்கு மேல் நாம் எதிர்த்து நின்றிருக்க முடியாது. சளுக்கரின் பதினையாயிரம் போர் யானைகளிலே ஒரு பதினைந்து யானைகள் நமது கோட்டைக் கதவுகளையெல்லாம் தகர்த்தெறிந்திருக் கும். அப்போது வைஜயந்தி பட்டணத்துக்கு நேர்ந்த கதி காஞ்சிக்கும் நேர்ந்திருக்கும். சபையோர்களே! கதம்பகுல மன்னர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து அரசு செலுத்திய வைஜயந்தி பட்டணம் இருந்த இடத்திலே இப்போது கரியும் சாம்பலும் மேடிட்டிருப்பது உங்களுக்குத் தெரியு மல்லவா?''

சபையில் மறுபடியும் வியப்பொலி களும் இரக்கக் குரல்களும் எழுந்தன. மகேந்திர பல்லவர் மீண்டும் தொடர்ந்து சொன்னார் : ''இந்தக் காஞ்சி மாநகரம் உலகம் உய்ய அவதரித்த புத்த பகவா னுடைய காலத்திலிருந்து ஆயிரம் வருஷ மாகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகரம்' என்று நமது புலவர் பெருமான் திருநாவுக் கரசரால் பாடப் பெற்ற இந்தத் திருநகரின் புகழானது சீன தேசம், சாவகத் தீவு, யவனர் நாடு, ரோமாபுரி ஆகிய தூர தூர தேசங்களிலெல்லாம் நெடுங் காலமாகப்

சபதம்

பரவியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட நகரம் என்னுடைய காலத்தில் அழிந்தது என்னும் அபகீர்த்தியை நான் அடைய விரும்ப வில்லை. இந்தக் காஞ்சி நகரைப் பாது காப்பதுதான் என்னுடைய முதற் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் என்னுடன் ஒத்துழைப்பீர்களா?''

இவ்வாறு சக்கரவர்த்தி கேட்ட போது, சபையினர் ஒருமுகமாக, ''அப்படியே! அப்படியே!'' என்று கோஷித்தார்கள்.

சக்கரவர்த்தி மறுபடியும் கையமர்த்தி! ''இந்த யுத்தம் நேர்ந்ததற்கு மூலகாரணம் இன்னதென்று உங்களுக்குத் தெரிவித்தேன். இது என்னால் நேர்ந்த யுத்தம், ஆகையால், என்போக்கில் இதை நடத்தி முடிப்பதற்கு உங்களிடம் அனுமதி கோருகிறேன்'' என்றார்.

''அப்படியே!'' என்று மீண்டும் சபை யில் கோஷம் எழுந்தது.

பின்னர் மகேந்திரர், சபையில் பின் வரிசைகளில் இருந்த தென்பல்லவ நாட்டின் கோட்டத் தலைவர்களைக் குறிப்பாகப் பார்த்து, ''கோட்டைக்குள்ளே இருக்கப் போகும் எங்களைக் காட்டிலும் கோட் டைக்கு வெளியில் கிராமங்களில் இருக்க வேண்டிய நீங்கள்தான் அதிகமான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகும்படியிருக்கும். காஞ்சியைக் காப்பாற்றுவதற்காக எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக் கொள்ள நீங்கள் சித்தமாயிருக்கிறீர்களா?'' என்று கேட்க, ''சித்தம், சித்தம்!'' என்று கோட்டத் தலைவர்கள் ஒரே குரலில் முழங்கினார்கள்.

''நாளைச் சூரியோதயத்துக்குள்ளே வாதாபி சைனியம் நமது கோட்டையை நெருங்கி விடும். அதற்கு முன்னால் நீங்கள் எல்லாரும் நகரை விட்டு, வெளியேறி விட வேண்டும். அவரவர்களுடைய ஊருக்கு விரைந்து செல்ல வேண்டும். காஞ்சி நகர் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் போது உங்களுக்கும் கோட்டைக்குள்ளேயிருக்கும் எங்களுக்கும் எவ்விதப் போக்குவரவும் இராது. கோட்டையைக் கைப்பற்ற முயன்ற புலிகேசி தோல்வியடையும் போது அவ னுடைய கோபத்தையெல்லாம் சுற்றிலு முள்ள நாட்டுப் புறங்களின் மீது காட்டு வான். அதற்கெல்லாம் நீங்கள் ஆயத்தமா யிருக்க வேண்டும். கோட்டத் தலைவர் களே! நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். காஞ்சியைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் சகலவிதமான தியாகங்களுக்கும் சித்தமா யிருக்கிறீர்களா? வாதாபி அரக்கர் படையினால் நேரக்கூடிய கொடுமைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்வீர்களா? நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பட்டினி கிடந்து மடிய நேர்ந்தாலும் நீங்கள் மனம் கலங்காமல் இருப்பீர்களா?'' என்று சக்கரவர்த்தி கம்பீரமான குரலில் கேட்க, செஞ்சிக் கோட்டத் தலைவன் சடையப்ப சிங்கன் எழுந்து நின்று கூறினான் :

''பல்லவேந்திரா! யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. பல்லவ இராஜ்யத்தின் மணி மகுடமாக விளங்குவது காஞ்சி மாநகரம். காஞ்சி அழிந்தால் பிறகு யார் உயிரோ டிருந்து என்ன பயன்? காஞ்சி நகரைக் காப்பாற்றுவதற்காக எந்தவிதமான தியாகங் களைச் செய்யவும் நாங்கள் சித்தமாயிருக் கிறோம். தங்களுடைய சித்தம் எதுவோ அதன்படி நடந்து கொள்கிறோம். நான் கூறியதுதான் இங்கேயுள்ள எல்லோருடைய அபிப்பிராயமும்!''

''ஆம்! ஆம்!'' என்று கோட்டத் தலை வர்கள் அனைவரும் ஏகமனதாக ஆமோதித்தார்கள்.

இச் சமயத்தில் சபா மண்டபத்தின் வாசற் புறத்திலிருந்து தூதன் ஒருவன் வந்தான். அவன் சக்கரவர்த்தியை நெருங்கிப் பணிந்து விட்டு, கிழக்குத் திசையில் ஒரு பெரும் புழுதிப் படலம் தெரிகிறதென்றும், கடல் புரண்டு வருவது போன்ற பெரு முழக்கம் கேட்கிறது என்றும் தெரியப் படுத்தினான்.

மகேந்திரர், இடிமுழக்கம் போன்ற குரலில், ''சபையோர்களே! வாதாபிச் சைனியம் வந்து விட்டது! நம்மில் ஒவ்வொருவரும் தம் வீர தீர சாகஸங்களைக் காரியத்தில் காட்ட வேண்டிய சமயமும் வந்து விட்டது. அமைச்சர்களே! மந்திரி களே! இத்துடன் இன்று சபை கலைகிறது.

அமரர் கல்கி

நாளை முதல் முற்றுகை நீடித்திருக்கும் வரையில் ஒவ்வொரு நாள் இரவும் இரண்டாம் ஜாமத்தில் இங்கே மந்திராலோசனை சபை கூடும். இப்போது போய் அவரவர்களுடைய காரியங்களைப் பாருங்கள்!'' என்று கூறியதும் அமைச்சர்களும் மந்திரிமார்களும் துரிதமாக வெளியேறினார்கள்.

''கோட்டத் தலைவர்களே! நீங்கள் சற்றுமுன் கொடுத்த வாக்குறுதியினால் மிக்க சந்தோஷம் அடைந்தேன். அந்த வாக்குறுதியை மட்டும் நீங்கள் நிறைவேற்றி வைத்தால் புலிகேசியைக் கட்டாயம் வென்று ஜயக் கொடி நாட்டுவேன்'' என்று கூறி, தளபதி பரஞ்சோதியைப் பார்த்து, ''தளபதி! இவர்களைத் தெற்குக் கோட்டை வாசலுக்கு அழைத்துக் கொண்டு போங்கள்! இவர்கள் அகழியைத் தாண்டிச் சென்றதும், பாலத்தை உடைத்து எறிந்து விட வேண்டும். மற்றபடி கோட்டைப் பாதுகாப்புச் சம்பந்தமாக நாம் தீர்மானித்தபடி காரியங்கள் செய்கிறீர்கள், அல்லவா?'' என்று கேட்க, ''ஆம், பிரபு! தெற்கு வாசலைத் தவிர மற்ற மூன்று வாசல்களையும் முழுதும் அடைத்தாகி விட்டது. பாலங்களையும் தகர்த்தாகி விட்டது. மதில் சுவரின் மேல் வரிசையாகப் பதினாயிரம் வீரர்கள் வேலும் கையுமாய் ஆயத்தமாயிருக்கிறார்கள்!'' என்றார் தளபதி பரஞ்சோதி.



பரஞ்சோதியும் கோட்டத் தலைவர்களும் சென்ற பிறகு சபா மண்டபத்தில் சக்கரவர்த்தியும் மாமல்லரும் மட்டும் தனித்திருந்தார்கள். மாமல்லரின் முகம் உற்சாகம் இன்றி வாட்டமுற்றிருந்தது. சக்கரவர்த்தி மாமல்லர் அருகிலே சென்று அவருடைய தோளின் மீது கையை வைத்து,''மாமல்லா! இந்த யுத்தத்தை என் போக்கிலேயே நடத்த எனக்கு நீயும் அனுமதி கொடுக்கிறாயல்லவா?'' என்று கேட்டார்.

''அப்பா! என்னை ஏன் கேட்கிறீர்கள்? உங்கள் விருப்பம் எதுவோ அதுவே எனக்கும் சம்மதம்!'' என்றார் மாமல்லர்.

''சந்தோஷம், குமாரா! அரண்மனைக்குப் போய் உன் தாயாரிடம் நான் பத்திரமாய் வந்து சேர்ந்து விட்டதைச் சொல்லு. பொழுது விடிவதற்குள் இன்னும் ஒரு முக்கியமான காரியம் நான் செய்ய வேண்டியிருக்கிறது. அதையும் முடித்து விட்டு அரண்மனைக்கு வந்து சேருகிறேன்'' என்று கூற, மாமல்லர் அந்தப்புரத்தை நோக்கிச் சென்றார். சக்கரவர்த்தியோ அரண்மனை வாசலில் ஆயத்தமாய் நின்ற குதிரை மீதேறி இராஜ விஹாரத்தை நோக்கி விரைந்தார்.

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்)



ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்
முற்றுகை தொடங்கியது

மறுநாள் சூரியோதயம் ஆகும் சமயத்தில் கமலி தன்னுடைய வீட்டுத் திண்ணையில் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். இரவெல்லாம் கண் விழித்தபடியாலும் கண்ணீர் விட்டபடியாலும் அவளுடைய கண்கள் வீங்கியிருந்தன.

கண்ணபிரானின் தகப்பனார் அவள் அருகில் உட்கார்ந்து ஆறுதல் மொழிகள் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதல் நாள் சாயங்காலம் குமார சக்கரவர்த்தி திரும்பி வந்த செய்தி கிடைத்தவுடனேயே கண்ணபிரானும் அவருடனே திரும்பி வந்திருப்பான் என்று கமலி எதிர்பார்த்தாள். புள்ளலூர்ப் போரில் வெற்றி மாலை சூடிய வீரரை வரவேற்க நகர மாந்தரெல்லாம் திரண்டு போன போது கண்ணபிரானின் தந்தை தாம் போய்க் கண்ணனை அழைத்து வருவதாகச் சொல்லி விட்டுப் போனார். இரவு வெகு நேரம் கழித்து அவர் திரும்பி வந்து, மாமல்லருடன் கண்ணன் வரவில்லை என்னும் செய்தியைத் தெரிவித்தார்.

காஞ்சி நகரில் யாருமே அன்றிரவு தூங்கவில்லையாதலால், மூன்றாம் ஜாமத்தில் சக்கரவர்த்தியும் திரும்பி வந்து விட்ட விவரம் கிடைத்தது. நாலாம் ஜாமத்தில் வாதாபிப் படைகள் கோட்டைக்குச் சமீபத்தில் வந்து விட்ட செய்தியும், கோட்டை வாசல்கள் அடைக்கப்பட்டுப் பாலங்கள் தகர்க்கப்படும் செய்தியும் கிடைத்தன.

ஆகவே, இனிமேல் கண்ணபிரான் கோட்டைக்குள்ளே வந்து சேருவதற்கே இடமில்லையென்று ஏற்பட்டது.

அதனாலேதான் கமலி துயரக் கடலில் ஆழ்ந்திருக்க, கண்ணனுடைய தந்தை அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் திடீரென்று சாக்ஷாத் கண்ணனே வீட்டு வாசலில் வந்து நின்றால், அவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்?

கமலி சட்டென்று எழுந்து, "கண்ணா!" என்று அலறிக் கொண்டு ஓடிப் போய் அவனைத் தழுவிக் கொள்ள எண்ணியவள், கண்ணனுக்குப் பின்னால் சக்கரவர்த்திப் பெருமான் குதிரையில் வருவது கண்டு நாணமும் திகைப்பும் அடைந்து நின்றாள்.

"கமலி! கண்ணனைக் கொண்டு வந்து சேர்த்து விட்டேன். இனிமேல் அவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வது உன்னுடைய பொறுப்பு!" என்று சக்கரவர்த்தி புன்னகையுடன் கூறினார். பிறகு, "உன்னுடைய சௌக்கியத்தைப் பற்றிச் சிவகாமி ரொம்ப விசாரித்தாள், அம்மா! உனக்கு ஆண் குழந்தை பிறந்தால், உடனே சொல்லியனுப்பும்படி கூறினாள்" என்று சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தி குதிரையைச் செலுத்திக் கொண்டு போனார்.

சக்கரவர்த்தியின் பேச்சினால் வெட்கமடைந்த கமலி கண்ணபிரானைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே வீட்டிற்குள் சென்றாள். கண்ணபிரான் தந்தைக்கு முகமன் கூறி விட்டுக் கமலியைத் தொடர்ந்து உள்ளே சென்றான்.

"இதென்ன கமலி! நான் வந்ததில் உனக்குச் சந்தோஷம் இல்லையா! என்னைத் திரும்பிக் கூடப் பாராமல் உள்ளே வந்து விட்டாயே! ஒருவேளை கண் தெரியவில்லையா?" என்று கண்ணபிரான் கேட்க, கமலி "ஆமாம்; கண் தெரியவில்லைதான்! இரவெல்லாம் அழுது வீங்கிப் போய் விட்டது" என்றாள்.

"ஐயோ! ஏன் அழுதாய்?" என்று சொல்லிக் கொண்டு, கண்ணபிரான் அவள் அருகே நெருங்க, கமலி அவனுடைய கையை உதறி, "இந்த அருமையெல்லாம் நேற்று எங்கே போய் விட்டது? நேற்றிரவே ஏன் வரவில்லை?" என்று கேட்டாள்.

"நேற்றிரவே ஏன் வரவில்லையா? எனக்கும் உனக்கும் மத்தியில் ஒரு பெரிய அகழியும் முதலைகளும் ஒரு பெரிய மதிற்சுவரும் இருந்தபடியாலேதான்" என்றான் கண்ணன்.

"அப்படியா? நீ இரவெல்லாம் கோட்டைக்கு வெளியிலா இருந்தாய்? அகழிப் பாலங்களை எல்லாம் இரவுக்கிரவே உடைத்து விட்டார்களாமே. நீ எப்படி உள்ளே வந்தாய்? நீ புறப்பட்டது முதல் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்" என்று கமலி பரபரப்புடன் கேட்டாள்.

"கமலி! நான் என்னத்தை என்று சொல்ல! நான் பிறந்த கதையைச் சொல்லவா, வளர்ந்த கதையைச் சொல்லவா? புள்ளலூர்ப் போர்க்களத்துக்குப் போன

கதையைச் சொல்லவா? வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடியதைச் சொல்லவா? மாமல்லர் ஏற வேண்டிய ரதத்தில் புத்த பிக்ஷுவை ஏற்றிக் கொண்டு வந்ததைச் சொல்லவா? கோட்டைக்கு வெளியே ராத்திரி எல்லாம் அலைந்து திரிந்ததைச் சொல்லவா?'' என்றான் கண்ணன். பிறகு தான் காஞ்சியிலிருந்து கிளம்பியது முதல் நடந்த அதிசயமான சம்பவங்களையெல்லாம் விவரமாகக் கூறினான்.

வராக நதிக்கரையில் புத்த பிக்ஷுவை ரதத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட பிறகு நடந்த சம்பவங்களைப் பற்றிக் கண்ண பிரான் கூறிய வரலாறு பின்வருமாறு :

குதிரைகளைக் கண்ணபிரான் எவ்வளவு வேகமாகத் துரத்தியபோதிலும் புத்த பிக்ஷுவுக்குப் போதவில்லை. மேலும் மேலும் அவசரப்படுத்தினார். வழியில் இரண்டு இடத்தில் குதிரைகளை மாற்றிக் கொண்டு, அஸ்தமித்து ஒரு நாழிகைக்குப் பிறகு காஞ்சிக் கோட்டையின் தெற்கு வாசலை அடைந்தார்கள்.

பிறகு, புத்த பிக்ஷு சொன்னபடி அகழி ஓரமான சாலையின் வழியாகக் கண்ண பிரான் ரதத்தைச் செலுத்திக் கொண்டு போனான். கொஞ்ச தூரம் போனதும் பிக்ஷு ரதத்திலிருந்து இறங்கிக் காட்டுக்குள் நுழைந்து போனார். சற்று நேரத்துக்கெல்லாம் அகழியில் படகு செல்லும் சப்தம் கேட்கவே, கண்ணபிரான் அந்தத் திசையில் கூர்ந்து நோக்கினான். அப்போதுதான் கீழ் வானத்தில் சந்திரன் உதயமாகியிருந்தது. நீண்டு பரந்த மர நிழல்களுக்கு மத்தியில் ஆங்காங்கு ஊடுருவி வந்த நிலாக் கிரணங்களின் சஞ்சல ஒளியில், அகழியில் ஒரு படகு போவதும் அதில் இரண்டு பிக்ஷுக்கள் இருப்பதும் கண்ணபிரானுக்குத் தெரிந்தன. படகு அக்கரைக்குச் சென்றதும் இருவரும் இறங்கினார்கள். கோட்டை மதிலின் சுவரோரமாகச் சென்றார்கள். திடீரென்று இருவரும் மாயமாக மறைந்தார்கள்.

கண்ணபிரான் நெடுநேரம் வரை அங்கேயே காத்திருந்தான். என்ன செய்கிறதென்று அவனுக்குப் புரியவில்லை. 'அவர்கள் எப்படி மறைந்திருப்பார்கள்?' என்று மூளையைச் செலுத்தித் தீவிரமாக யோசனை செய்தான். 'ஒருவேளை கோட்டைச் சுவரில் இரகசிய வழி இருக்குமோ' என்ற எண்ணம் தோன்றியதும் அவனுடைய உள்ளம் கலங்கியது. புத்த பிக்ஷு தன்னைஅங்கேயே இருக்கச்சொல்லியிருப்பதால் எப்படியும் திரும்பி



அருள்வாக்கு

தங்களுக்கும் ஸமூஹத்துக்கும் ஒன்று செய்து கொள்வதற்கு முன்னால், பகவானுக்கு எல்லாரும் சேர்ந்து செய்ய வேண்டும். தீபாவளி என்றால் தாங்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்வது, புது வஸ்த்ரம் கட்டிக் கொள்வதோடு ஏழை பாழைகளுக்கும் எண்ணெய், சீயக்காய், துணி கொடுக்க வேண்டும். அது மட்டும் போதாது. எல்லோரும் சேர்ந்து கோயிலில் உள்ள அறுபத்து மூவர் உள்பட எல்லா மூர்த்திகளுக்கும் தைலம் சார்த்தி, புது வஸ்த்ரம் அணிவிப்பதில்தான் கொண்டாட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இப்படியே, பொங்கல் என்றால் அவரவர் வீட்டுக்குச் சுண்ணாம்பு அடித்துச் சுத்தப்படுத்துவதோடு, வசதியில்லாதவர்களுக்கும் இந்த உதவியைப் பண்ணுவதோடு, வசதியுள்ளவர், வசதியில்லாதவர் எல்லாருமே ஒன்றுகூடிப் பக்கத்திலுள்ள ஆலயங்களில் களைபிடுங்கி, தேய்த்து மெழுகி அலம்பி விட்டு, பொக்கை போறைகளை அடைக்க வேண்டும்.

இப்போது நமக்கு உள்ளே இருக்கிற அழுக்கும் முள்ளும்தான் கோயிலில் அழுக்காகவும் முள்ளாகவும் ரூபம் எடுத்திருக்கிறது. கோயிலில் செதுக்கி, மெழுகி, சுத்தப்படுத்துகிற போது நம் மனஸின் முள்ளையும் அழுக்கையும் அகற்றித் துப்புரவாக்கிக் கொண்டு விடுவோம். அப்போது நம் மனஸே தங்கமாகி விடும். அந்தக் கனக ஸபையில் அன்பே உருவான சிவம் வந்து குடிகொண்டு, நாமே ஆலயமாகி விடுவோம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

வருவாரென்றும், அப்போது இரகசியத்தைக் கண்டுபிடிக்கலாமென்றும், எண்ணிக் கோட்டைச் சுவரில் அவர்கள் மறைந்த இடத்தில் வைத்த கண்ணை வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியோ அவனையறியாமல் தூக்கம் வந்து கண்ணயர்ந்து விட்டான். திடீரென்று அவன் கண் விழித்த போது, தூரத்தில் கடல் குமுறிப் புரண்டெழுந்து வருவது போன்ற பயங்கரமான சப்தம் கேட்டது. முன்னொரு சமயம் ஏரி உடைத்துக் கொண்டு வெள்ளம் வந்த சப்தத்தை அவன் கேட்டிருக்கிற படியால், மிக்க பீதியடைந்தவனாய், பரபரப்புடன் ஒரு மரத்தின் மேல் ஏறிச் சப்தம் வந்த திசையை நோக்கினான். வெகு தூரத்தில் வெண்ணிலாவின் ஒளியில் யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிகளும், வேல்களும் வாள்களுமாய்த் திரண்டு வந்த சேனா சமுத்திரத்தைக் கண்டான். வாதாபி சைனியந்தான் அது என்று தெரிந்து கொண்டு, எப்படியாவது கோட்டைக்குள் புகுந்து விட வேண்டும் என்று தீர்மானித்து ரதத்தை அவசரமாகச் செலுத்திக் கொண்டு தெற்குக் கோட்டை வாசலை அணுகினான். கண்ணபிரான் சப்தம் போட்டுக் கோட்டைக் காவலாளிகளை அழைத்ததில் ஒன்றும் பலன் இல்லை. சற்று நேரம் அங்கேயே தயங்கி நின்ற பிறகு ஒரு யோசனை உதித்தது. 'புத்த பிக்ஷுக்கள் புகுந்த இரகசிய வழி ஒருவேளை தேடினால் கிடைக்கும்! அதன் வழியாய்க் கோட்டைக்குள் போய் விடலாம்' என்ற ஆசையுடன் திரும்பவும் அதே இடத்துக்கு வந்து சேர்ந்தான். அகழியை எப்படிக் கடப்பது என்ற கேள்வி ஏற்பட்டது. நீந்திப் போகலாம் என்று நினைத்ததும், அகழியில் நூற்றுக்கணக்கான முதலைகள் இருப்பது நினைவு வந்து கதிகலங்கிற்று. இதற்குள்ளாகப் படைகள் வரும் முழக்கம் இன்னும் நெருங்கிக் கேட்கலாயிற்று.

'முதலைகளுக்கு இரையானாலும் ஆகலாம்; எதிரிகளிடம் சிக்கக் கூடாது' என்று எண்ணிக் கண்ணபிரான் அகழியில் இறங்கத் தீர்மானித்த போது திடீரென்று கோட்டை மதிலின் எதிரே ஒரு கதவு திறந்து துவாரம் காணப்பட்டது. அதற்குள்ளிருந்து இளம் புத்த பிக்ஷு ஓடி வருவது தெரிந்தது. கண்ணபிரான் சட்டென்று மரத்தின் பின்னால் மறைந்து கொண்டான். இளம் பிக்ஷு படகில் ஏறுவதையும், இக் கரைக்கு அதைச் செலுத்தி வருவதையும் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது கண்ணபிரானுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. இளம் பிக்ஷு கரையில் இறங்கியவுடனே படகைத் தண்ணீரில் கவிழ்க்கப் போவதைப் பார்த்ததும் கண்ணன் பாய்ந்து வந்து அதைத் தடுத்து, இளம் பிக்ஷுவையும் தூக்கிப் படகில் போட்டுக் கொண்டு, தானும் ஏறினான். மெதுவாகப் படகை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

சுவரில் திறக்கப்பட்ட துவாரம் அப்படியே இருந்தது. இளம் பிக்ஷுவை அந்தத் துவாரத்திற்குள் தள்ளி விட்டு, தானும் உள்ளே புகுந்தான். அகழிக்கு அப்பால் அவன் நிறுத்தி விட்டு வந்த ரதத்தின் ஞாபகம் வந்தது. அந்த நினைவினால் அவன் திரும்பி வெளியே வரப் பார்த்த போது மிகவும் உறுதி வாய்ந்த வஜ்ரக் கையொன்று தன்னைப் பிடித்து உள்ளே தள்ளுவதை உணர்ந்தான். அந்தக் கை மகேந்திர பல்லவருடைய வைரம் பாய்ந்த கைதான் என்பதை உணர்ந்ததும் கண்ணனுடைய ஆச்சரியம் அளவு கடந்ததாயிற்று. அப்போது சக்கரவர்த்தி, ''கண்ணா! இந்தக் கள்ள பிக்ஷு பல்லவ இராஜ்யத்தில் இருந்த வாதாபியின் கடைசி ஒற்றன். இவன் தப்பிப் போகாதபடி தடுத்ததால், பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஒரு மகத்தான சேவை செய்திருக்கிறாய். வா, போகலாம். கமலி உனக்காகக் கவலையுடன் 'காத்திருக்கிறாள்'' என்று சொல்லிக் கொண்டே அந்த இரகசிய வாசலுக்குள்ளே தாமும் நுழைந்து இரகசியக் கதவை உள்ளிருந்தபடியே சாத்தினார்.

அவர்கள் புகுந்த இடம் காஞ்சிமாநகரின் பிரசித்தமான இராஜ விஹாரம் என்று விரைவில் கண்ணனுக்குத் தெரிந்தது.

மேற்கண்ட வரலாற்றை எல்லாம் கூறி விட்டு, கண்ணபிரான் ''கமலி! ஏதோ உன்னுடைய மாங்கல்ய பலத்தினாலேதான் நேற்றிரவு நான் பகைவர்களிடம் சிக்காமலும், முதலைகளுக்கு இரையாகாமலும் பிழைத்து வந்தேன். நான் பிழைத்து வந்தது உண்மைதானா என்று இன்னமும் எனக்குச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது. உன்னுடைய இரண்டு தளிர் போன்ற கைகளினாலும் என்னைக் கட்டிக் கொண்டு பார்த்து, நான் உண்மையில் உயிரோடுதானிருக்கிறேனா என்று சொல்லு'' என்றான்.

''முடியாது, கண்ணா முடியாது! உன்னை நான் கட்டிக் கொண்டால் சின்னக் கண்ணனுக்குத் தொந்தரவாயிருக்கும்!'' என்று கூறி விட்டுப் பொருள் பொதிந்த புன்னகை புரிந்தாள் கமலி.

(தொடரும்)

மொட்டை மாடியில் வளரும் 'குழந்தைகள்'

ராஜீவ் காந்தியின் மரணத்தையொட்டி நடந்த கலவரங்களின் விளைவாகப் போக்குவரத்து ஸ்தம்பிக்க, தமிழ்நாடே சில நாட்களுக்குக் காய்கறிகள் கிடைக்காமல் அவஸ்தைப்பட்டது. அந்த நான்கு நாட்களுக்கும் திருமதி அல்லாடி ரோஹிணி, தம் வீட்டினருக்கும் அக்கம் பக்கத்தவருக்குமாகச் சுமார் முப்பது பேருக்குப் பச்சைக் காய்கறிகள் கொடுத்து உதவினார்.

இது எப்படி சாத்தியமாயிற்று? அவர் வீட்டுத் தோட்டத்திலேயே காய்கறிகள் விளைந்ததால்தான். இத்தனைக்கும் வீட்டைச் சுற்றிலும் பெரிய தோட்டம் என்று சொல்லி விட முடியாது. முன் பகுதித் தோட்டத்தை ஆக்கிரமிக்கும் மாமரத்தின் நிழலில் காய்கறிச் செடிகள் பயிரிட முடியாது. ரோஹிணியின் வீட்டுக் காய்களெல்லாம் விளைவது அவர் வீட்டு



மொட்டை மாடியில்!

''ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் பத்து மணி நேரமாவது வேலை செய்ய வேண்டும் என்பது என் குறிக்கோள். வீட்டு வேலைகள், தையல், கை வேலைகளையே செய்து கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் உடலுக்குப் போதுமான அளவு 'எக்சர்சைஸ்' கிடைக்கவில்லை என்று தோன்றியது. எனது இளம் வயதுப் பொழுது போக்கான தோட்டம் வளர்ப்பதில் ஈடுபடலாம் என்றால், வீட்டிலுள்ள பிரும்மாண்டமான மாமரத்தின் நிழல் அதற்குக் குந்தகமாக இருந்தது.

''இந்தச் சமயத்தில்தான் நான்

உறுப்பினராக உள்ள டீ நகர் எக்ஸ்னோரா அமைப்பின் பெண்கள் பிரிவு, மொட்டை மாடியில் எப்படித் தோட்டம் போடுவது என்பதை விளக்கும் வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தது. அவ் வகுப்புகளில் பாடம் நடத்தியவர் டாக்டர். எம். எஸ். சுவாமிநாதன் ஆய்வு மையத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ள திரு. ராஜாராம். அந்த வகுப்புகளில் கற்றதை நடைமுறைப்படுத்தியதில் நல்ல பலன்'' என்று கூறினார் ரோஹிணி.

அவரது மொட்டை மாடி தோட்டத்தைக் காணச் சென்றோம். தளதளவென்று கத்திரிச் செடிகள் - ஊதாப் பூக்கள் கண் சிமிட்ட நின்றன. ஆங்காங்கே கத்திரிப் பிஞ்சுகள் எட்டிப் பார்க்க ஆரம்பித்திருந்தன.

''முதல் முயற்சியாகக் கீரையும் வெண்டைக்காயும் பயிரிட்டேன். பிறகு கொத்தவரை, வெண்டை, கீரை, பீர்க்கங்காய், வெள்ளரி, கத்திரி என்று மாற்றி மாற்றிப் போட்டேன். எல்லாமே நன்றாக விளைந்தன. ராஜாராம் சொன்னது போல் மொட்டை மாடி சுற்றுச் சுவரிலிருந்து இரண்டரை பாத்தி அளவு இடைவெளி விட்டு ஒன்றரை அடி உயரத்துக்கு ஒற்றைக் கல் சுவர் எழுப்பச் செய்தேன். இந்த அகலமான பாத்தியை மணல், செம்மண், எரு கலவை கொண்டு நிரப்பி விட்டு விதைத்தேன். கீழேயுள்ள கிணற்றிலிருந்து பம்ப் வைத்துத் தண்ணீர் பாய்ச்சினேன். செடிகள் ஓரளவு வளர்ந்த பிறகு, பூச்சி மருந்து தெளித்தேன். ரசாயன உரம் எதுவும் பயன்படுத்தவேயில்லை. பன்னிரண்டு சதுரடி இடத்தில் ஐம்பது கிலோ பீர்க்கங்காய், பதினாறு சதுரடி இடத்தில் ஐம்பது கிலோ கொத்தவரங்காய், நூறு கிலோ வெண்டைக்காய் காய்த்தன....''

ரோகிணி அடுக்கிக் கொண்டே போக, ஆச்சரியத்துடன் கேட்டோம் :

''மொட்டை மாடியிலேயே நாள் பூராவும் இருப்பீர்களா?''

''ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம்தான் செலவிடுகிறேன்! ஆனால் அந்த இரண்டு மணி நேரமும் என் குழந்தைகளுக்குச் செய்வதைப் போல் என் செடிகளுக்குப் பணிகள் செய்வேன்...'' என்றார் ரோகிணி.

''மொட்டை மாடியில் செடி வளர்ப்பதால் ஆடு மாடுகள் மேயும் கவலை இல்லை...''

''ஆனால் வேறு விஷயங்கள் குறித்து எச்சரிக்கை வேண்டும் - மொட்டை மாடி எவ்வளவு கனம் தாங்கும் என்று அனுபவமுள்ள சிவில் இஞ்சினியரிடம் கேட்டு அறிவுரை பெற வேண்டும். Water proofing சரியாகச் செய்யப்படா விட்டால் தண்ணீர் வீட்டுக்குள் கசியும்! ஆடு மாடுகள் தொல்லை இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால் சில சமயம் என் தோட்டத்துக்குக் குரங்குகள் வருவதுண்டு! அவற்றை விரட்ட பட்டாசு வெடிப்பேன். அப்புறம் சில மாதங்களுக்குத் தலைகாட்டாது!''

- நிருபர்.

வண்ணப்படம் : உதரா.



பம்பாய் சமாச்சார்

இந்தியப் பத்திரிகைகளில் நூறு வயதுக்கு மேற்பட்டவை மொத்தம் 37. இவற்றுள் மிகப் பழமையான பத்திரிகை பம்பாயிலிருந்து வெளிவரும் 'பம்பாய் சமாச்சார்'தான். ஆசியாவிலேயே மிகப் பழைய பத்திரிகையான இது ஃபர்தன்ஜி மர்ஸபான் என்னும் பார்ஸி வியாபாரியால் 170 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டது.

- பி. அம்ருதா



ஜோடி நாயனம்

எதிர் வீட்டிலே ஏதோ இரைச்சல்!

தெருவை எட்டிப் பார்த்து வந்த கமலம், ''உங்க தம்பி வீட்டிலே ஒரே கூட்டமா இருக்கு. என்னன்னே புரியல்லே!'' என்றாள். ''பெரிய 'புள்ளிங்க' காரெல்லாம் வந்து வந்து போகுது! நமக்குத் தெரிஞ்சவங்க யாராலும் தென்பட்டா விசாரிக்கலாமேன்னு பார்த்தேன். யாருமில்லே.''

அவள் பேச்சிலிருந்த ஈடுபாட்டை உணர்ந்தேன்.

அங்கு போய் விசாரிக்க வேண்டும் என்ற ஆதங்கம் விஞ்சினாலும், இருபது வருஷத்திய அன்னியம் அவளைத் தடுத்திருக்க வேண்டும்!

அந்த நெருடலில் உள்ளே வந்தவள், ஊஞ்சலில் கண் அயரப் போன என்னை எப்படியோ உசுப்பி விட்டாள்!

இனியும் தூங்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை.

எழுந்து அமர்ந்து முகத்தைத் துடைத்துக் கொண்டேன்.

''என்னன்னு விசாரியேன். அநேகமா உன் ஓரகத்தி பிள்ளையுண்டாகி இருப்பாள்!'' என்று கமலத்தைச் சீண்டினேன்.

''இதுக்கொண்ணும் குறைச்சல் இல்லே!'' எரிச்சல் அவள் கண்களில் தீப் பிடித்தது!''

அவளுக்கிருந்த ஆதங்கம் ஏனோ எனக்கில்லை.

ஊர் மெச்ச வாழும் கலைஞர்கள் வாழ்க்கையில், இந்த மாதிரியான பரபரப்பெல்லாம் சர்வ சாதாரணமில்லையோ?

''அட. என்னவா இருக்கும்? போன வருஷம் இந்த நாளையிலே உன் கொழுந்தன் 'பத்மஸ்ரீ' வாங்கினானில்லே? அது மாதிரி இந்த வருஷமும் ஏதாலும் விசேஷமா கிடைச்சிருக்கும்!'' என்று அவளை அசுவாரஸ்யமாய் ஓரங்கட்டினேன். ''இது போல சமாசாரமெல்லாம் தந்தியிலேதான் வரும். அது வந்த ஜோருக்கு உண்டாகிற பரபரப்பு. இப்படித்தான் காரும் ஆட்டோவுமா தூள் கிளப்பும்!''

''அது சரஸ்வதி வாசம் பண்ற வீடாச்சே! இப்படித்தான் நாளுக்கு நாள் தேஜஸ் கூடிக்கிட்டே போகும்!'' - என்று பெருமூச்சு விட்டாள்.

''ஏண்டி வயறெரியிறே? எல்லாத்துக்கும் 'கொடுப்பினை' வேணும். சுயமாவே அவன் நல்ல உழைப்பாளி. பகீரதனுக்கு அப்பன்! எல்லாத்துலயும் சாதனை பண்ணணுங்கற பிடிவாதக்காரன். அவனாலே முடியுது.''

''எனக்கென்னங்க வயத்தெரிச்சல்? நீங்க இரண்டு பேருமே ஒரே வயத்து ஜன்யம்! ஒங்க அப்பாருகிட்டேதான் ரண்டு பேருமே ஒண்ணா பாலபாடம் படிச்சிருப்பீங்க! ஆனா நீங்க மடுவுன்னா, அவர் மலை! எங்க அப்பாரு உங்களை எனக்காகப் பார்க்க வந்தாரில்லே? அன்னைக்கி நீங்க எங்கேயோ வயக் காட்டுலே மாட்டைத் துரத்திக்கிட்டு ஓடினீங்களாமில்லே? ஆனா உங்க வூட்டுக்கு வந்து பார்த்தப்போ, உங்க தம்பி பாரி நாயனத்தெ வெச்சுக்கிட்டு அசுர சாதகம் பண்ணிக்கிட்டிருந்தாராமில்லே? சொல்லிச் சொல்லி ஆத்துப் போவாரு!''

எனக்குச் சிரிப்பு வந்தது.

''ஆமாடி! என்னிக்கு அவன் நாயனத்தைக் கையிலெடுத்தானோ, அன்னிலேர்ந்து மத்த வேலையை அவன் பார்த்ததே இல்லை! எல்லாமே என் தலை மேலே விடிஞ்சுது! ஒஞ்ச போது நிலத்தைப் பார்க்க ஆரம்பிச்சேன். அதன் தொடர்பா காடு கழனி, மாடு கன்னு, வீடு வாசல்னு எல்லாத்தையுமே என் தலையிலே கட்டினாரு, எங்க அப்பாரு! ஆனா, அவனோ? வாசிப்பு, வாசிப்பு, ஓயாத வாசிப்பு... அவனும் நானும் மூணு வருஷம் நீடாமங்கலத்தார்கிட்டே சின்ன வயசிலே 'சேவகஞ்' செஞ்சோம்! அந்த நாளையிலே கூட அவன் நாயனத்தையும் தவிலையும் மட்டுமே

திலீபன்

தொடுவானே தவிர, வீட்டுக் காரியங்கள் எல்லாத்தையும் என் தலையிலேதான் கட்டு வான்!

''ஆரம்ப நாளையிலே ரொம்ப சுவா ரஸ்யமா வாசிச்சுக்கிட்டிருந்த நான் கூட, அவனோட இந்த வாசிப்பு வெறியைப் பார்த்தப்புறம்தான், என்னையே மாத்திக் கிட்டேன்!''

''ஆமா! நொண்டிக் குதிரைக்குச் சறுக் கினது சாக்கு! ஜதாதே ஜதாதேன்னு சின்னவரு உங்க வாயைப் பொத்தினா ராக்கும்?''

''சேச்சே! அதில்லேடி. அவனோட நான் ஒத்துப் போக முடியாதோன்னு பிடி வாதமா ஒதுங்கினேன்! நாங்க ரண்டு பேருமே ஜோடி நாயனம் வாசிக்க ணுங்கிறதுதான் எங்க அப்பாரு கனவு!'' அவளிடம் சொன்னபடி நான் பழைய நினைவுகளில் கரைந்து போனேன்.

பரம்பரை சம்பிரதாயப்படி வைத்தீஸ்வரன் கோயில்லேதான் நானும் அவனும் முதல் ஜோடி நாயனம் வாசிச் சோம்! அப்ப எனக்குப் பதினேழு வயசு. அவன் ரெண்டு வருஷம் சின்னவன். அந்த வயசிலேயே அவனுக்கு மேளகர்த்தா, ஜன்யமெல்லாம் அத்துப்படி! வாசிப்பில் சுநாதம் ரம்யமாய்க் கை தூக்கும்! ஏதோ எங்க அப்பாரு பிடிவாதத்திலே, அவனுக்கு ஒத்தா சையா ஜதப் பழகி இருந்தேன். அந்த மட்டிலேதான் அன்றைக்கும் அவனோடு ஜோடி சேர்ந்தேன்! எப்பவுமே கூட வாசிக் கிறவன் 'தடுக்கி விழுந்தா', அவனுக்குக் கோபம் கோபமா வரும்! மூத்தவனான என்னையே அடிக்க வருவான். அதீதமான அவனோட வித்வாம்சம், எனக்கு அகம்பாவ மாப் பட்டது! என்னை விட்டு அவன் மனத்தால் விலகிப் போனான்!

எனக்கு இருபது வயசாகும் போது, எங்க அப்பாரு பக்கவாதத்திலே படுத்தார். நான் அவர் பக்கத்திலே இருக்க வேண்டிய கட்டாயம். வீட்டுக் காரியம், ஏழு காணி வெள்ளாமை - எல்லாமே எனக்கு விடிஞ்



கது!

அவன், தனிக் கச்சேரியாப் போய் வந்தான்.

எனக்குத் தோதான வேளையிலே மட்டும், கூட ஊதலானேன்!

இந்தச் சமயத்திலேதான் எனது கல்யாணப் பேச்சு வெகு முக்கியத்துவமடைந்தது!

கொறநாடு ருத்ராபதி பிள்ளை வீட்டிலே பெண் பார்த்துக் கொண்டிருந்தனர்!

அதைச் சாக்கிட்டு, மாயவரத்தில் ஒரு கச்சேரிக்கு இரண்டு பேரும் ஒத்துக் கொண்டோம்.

கிளம்பும் போது எங்க அப்பாரு சொன்னார்: 'எலேய்! கொறநாடு முத்து வீருசாமி ஊட்டுலே நீங்க இரண்டு பேரும் தங்கிக்குங்க. மாயவரம் கச்சேரிக்குப் பக்கமா இருக்கும். வீருசாமி ஊட்டுக்கு எதிர்லதான் ருத்ராபதி பிள்ளை வீடு! அவர் பேத்தியைத்தான் நம்ம ஊட்டு மருமகளாக்க நினைச்சிருக்கேன். அதுக்குத் தோதா அங்க நடந்துக்குங்க! இரண்டு பேரும் ஒத்துமையா இருந்து கச்சேரியை முடிச்சுக் கொடுத்துட்டு வாங்க!'' - என்றார்.

முத்து வீருசாமி எங்க அம்மா உறவுக்காரர். தொழில் முறையிலே எங்க அப்பாருக்குத் தோழர். நாங்க மாமாம்போம்!

மாயவரம் ரயிலடிக்குப் பக்கமாதான் அவர் வீடு.

நடையாவே நம்ம செட்டோட, நானும் அவனும் அவர் வீட்டை நெருங்கினோம்.

எப்பவுமே என்னை விஞ்சி நடக்கிறவன்!

அன்னிக்கும் எனக்கு முன்னே போய்க்கிட்டிருந்தான்.

வீட்டுப் படி ஏறும் போது, உள்ளிருந்து வந்த ஒரு 'பெண்', அவன் மேலே மோதி, அவனை என் மேலே தள்ளியபடி எதிர் வீட்டுக்கு ஓடினாள்!

எனக்கு எரிச்சலான எரிச்சல்! ஆனால் அவனோ?

''யாருண்ணே இது?'' என்றான்.

வீருசாமி மாமாவுக்கு எல்லாமே பயல்கள்! அதாலே, ''எதிர் வீட்டுப் பொண்ணா இருக்குமோ; மாடு மாதிரி மோதறாளே?'' என்றேன்.

படியில் நின்றபடியே, ''ஒரு 'நிகா' விலே மரகதம் தங்கை போல இல்லே?'' என்று வியந்தான்!

என் மண்டையில் 'சுருக்'கென்றது!

அந் நாளையில் கும்மாணம் சதிர்கார மரகதம் தங்கையின் அழகு, பிரசித்தம்! 'ரவி வர்மா பெயிண்டிங்' என்பார்கள்!

அதனால் 'இந்தப் பயலுக்கு இந்த நேரத்தில் இதென்ன லயிப்பு?' என்று



துணுக்குற்றேன்.

அதற்குள் வீருசாமி மாமாவே உள்ளிருந்து வந்து விட்டார். ''வாங்க. வாங்க. தெருவிலே ஏதோ பேச்சுக் குரல் கேட்ட மாதிரி இருந்தது. எட்டிப் பார்த்தேன். நல்ல வேளை'' - என்றார்.

உள்ளே போனோம்.

அன்று மாலை. துளியும் எதிர்பாராத வகையில் கச்சேரி களைகட்டியது!

சபையே மெய்மறந்து போனது!

இத்தனை நேரமும் என் கண்ணில் படாத எதிர் வீட்டுப் பெண், முதல் வரிசையில் இருந்தது!

என் மண்டைக்கு 'நறுக்'கென்று உறைத்தது!

மாயவரம் கச்சேரிக்குப் பிறகு அவன் ரொம்பவும் மாறி இருந்தான்!

யாரோடும் ஒட்டாமல் ஒதுங்கி ஒதுங்கிப் போவான்!

ருத்ராபதி பிள்ளை வீட்டிலிருந்து வாரம் ஒரு கடிதம் வரும். எங்கள் வீட்டுச் சம்பந்தத்தில், அவர் பேரன் அழகநம்பிப் பிள்ளைக்குப் பரமதிருப்தி! அவர் மாமா வெங்குப் பிள்ளை கும்மாணத்துக்குப் பக்கத்திலேதான் இருந்தார். வாரம் ஒருமுறை வந்து, எங்க அப்பாரைப் பார்த்துப் பேசி விட்டுப் போவார்!

ஆனால் கல்யாண விஷயம் மட்டும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் நீண்டு கொண்டே போனது!

அதுவரை இந்த விஷயத்தில் அவ்வளவாக ஈடுபடாமல் இருந்த நான், மெல்லத் தலையை நுழைத்தேன்!

'பெண் வீட்டாருக்குப் பொதுப் படையாய் எங்கள் சம்பந்தம் பிடித்திருந்தது. ஆனால் பெண்ணுக்கோ குறிப்பாகச் சின்னவனைத்தான் பிடித்திருந்தது!'

இந்தக் குழப்பத்திலே, ஒருநாள் என் பேருக்கு ஒரு கடுதாசி வந்தது!

தபாலைப் பிரிச்சுத் தோப்பிலே கொண்டு வச்சுப் படிச்சேன்!

அதிலே என்னென்னவோ எழுதி இருந்தான்.

இருந்தாலும் நாலைந்து வரிகள் என் வயிற்றைக் கலக்கின.

'எம் பேரிலே அவளுக்கிருக்கிற அபிமானம் தெரிஞ்சும், நீயும் அப்பாரும் பண்ற மௌடீகம், என்னை இந்த முடிவுக்கெல்லாமோ தள்ளுது! அவ இல்லேன்னா நான் இல்லேங்கிற நியாயத்தை நீ கூடவா உணரல்லே? இதுக்கு மேலேயும் உங்க பிடிவாதம் நீடிக்குமானா ஒண்ணுநான் இந்த ஊரை விட்டே ஓடணும். இல்லே, இந்த உலகத்தை விட்டே ஒழியணும்!'

சுக்கு நூறாய் அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டு, பல மணி நேரம் சிந்தித்தேன்.

அந்த க்ஷணத்தில் என்னுள்ளே எத்தகைய வெறியுணர்வு மேலோங்கி இருந்தது என்பதை என்னால் யூகிக்க இயலவில்லை!

'சட்'டென எழுந்து, அருகில் கிடந்த வெட்டறிவாளால் என் வலக்கையைத் துண்டித்துக் கொள்ள முனைந்தேன்!

கண் விழித்துப் பார்த்த போது, என்னைச் சுற்றி ஒரு படையே திரண்டிருந்தது!

ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடந்த எனது வலக்கையில் பெரிய கட்டுப் போட்டிருந்தனர்!

எனது தாயார் 'கோ'வென அழுது, ''ஒனக்கு ஏண்டா பாவி இந்த வேலையெல்லாம்? வேலிப் புதரைக் கழிக்கணும்னா வேலைக்காரன்ங்க கிட்டெ சொல்லப்படாதா? நீயா செய்யணுமா?'' - என்றெல்லாம் ஒப்பாரியிடலானாள்.

குற்ற உணர்வின் காரணமாகவோ, அன்றி என் மேல் கொண்ட குரோதத்தாலோ என்னைச் சின்னவன் சந்திக்கவே இல்லை!

இரண்டொரு மாதங்களில் எனது கைக்கட்டு அவிழ்க்கப்பட்டது.

நான் எதிர்பார்த்ததற்கும் மாறாக, எனது வலக்கையில் கட்டை விரல் மட்டுமே சேதமுற்றிருந்தது!

எனினும் 'என்னால் இனி நாயனத்தைத் தொட முடியாது' என்கிற நிம்மதியில் மன ஆறுதலுற்றேன்! ஒரு வழியாக அந்த வருஷத்தின் முடிவுக்குள், எங்கள் கல்யாணம் குதிர்ந்தது! நான் எதிர்பார்த்தது போலவே சம்பூர்ணம் வீட்டார் என் கையைக் காரணம் காட்டி என்னை நிராகரித்து அவனை மாப்பிள்ளையாக்கிக் கொண்டனர்.

படுத்த கிடையாய்க் கிடந்த அப்பாரைக் காண, அவனும் அவளும் வந்தனர்.



தியோடர் என்ற ஒரு எழுத்தாளர் ஒரு நூலை எழுதினார். அந்த நூலைப் படித்த டென்மார்க் நாட்டின் ஆறாம் கிரிஸ்டின் என்ற

அவருக்கு அருகில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை!

தம்பதிகளை ஆசீர்வதித்து அனுப்பிய எங்க அப்பாரு, அவனை மட்டும் தம் அருகில் அழைத்தார்.

''எலே! நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன்டா! ஆசைப்பட்ட மாதிரியே ரொம்ப வசதியான எடத்துக்குப் போறே. லட்ச லட்சமா சம்பாதிக்கக்கூடிய தொழில் திறமையும் இருக்கு. ஆனா, உன் அண்ணன் தலையெழுத்து? - பாவம்டா அவன்!... அதனால எனக்குப் பின்னாலெ, நம்ம சொத்து சுகத்தைப் பராமரிக்கிற பொறுப்பில அவனுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருக்கேன். அவனெ உன் எதிராளியா பார்க்காமெ, கொஞ்சம் அனுசரிச்சுப் போ!...

அவர் பேச்சை அவன் துளியும் சட்டை செய்யவில்லை! மாறாக,

''...சுபாவத்திலே அவன் சோம்பேறிப் பய! தொழில்லெ வெளங்கணுங்கிற அக்கறை இல்லெ! போதாக்குறைக்கு விரல் போனதும் ஒரு சாக்காய்ப் போச்சு! - இன்னம் எவ்வளோ நாளைக்குத்தான் அவனெ மடீலெயே தூக்கி வச்சுக்கப் போறீங்களோ? பார்க்கிறேன்!'' என்று பொரிந்து தள்ளி விட்டு என்னைக் கண்களால் சுட்டெரித்தபடி விருட்டென வெளியேறினான்!

எனக்குத் தர்மசங்கடமானது! ''என்னப்பா இது? மறு வழிக்குப் போறவங் கிட்டெ பேசற பேச்சா இது?'' - என்று கடிந்தேன்.

''பேசணுங்கிற கட்டாயம் வந்தப்புறம், அதை எப்பப் பேசினா என்ன; எப்படிப் பேசினா என்ன? - பாவிப் பய! எப்படித் தணலள்ளிக் கொட்டிட்டுப் போறான் பார்த்தியா...? எலே பெரிய தம்பி! இப்பவாவும் மறைக்காமெ சொல்லுடா. உன் கட்டை விரல் போனதுக்கு, அவங்கூடப் போறவதானே காரணம்?''

மன்னனுக்கு எழுத்தாளர் மீது கோபம் வந்து விட்டது. உடனே மரண தண்டனை என்று அறிவித்தான். மரண தண்டனைக்கு மாற்றாக மற்றொரு தண்டனையும் வழங்கப்பட்டது. அதாவது எழுத்தாளர் எழுதிய புத்தகத்தின் ஒரு பிரதி முழுவதையும் அவரே சாப்பிட வேண்டும். அப்படி சாப்பிட்டு விட்டால் மரண தண்டனையிலிருந்து தப்பலாம் என்று அறிவித்தான் மன்னன்! வேறு வழியின்றி, தன் புத்தகத்தின் ஒரு பிரதி முழுவதையும் தின்று, உயிர் பிழைத்தார், அந்த எழுத்தாளர்!

- ஆதாரம் : அறிஞர்கள் வாழ்வில் சுவையான நிகழ்ச்சி

தகவல் : ஆ. வளையாபதி

சொத்துப் பிரிவினையில், அவரும் நானும் சேர்ந்து சூதாடி செய்து விட்டதாக, அவனும் அவளும் ஊர் பூராவும் பரப்பினர்!

வீடு இரண்டுபட்டது! பேச்சு வார்த்தை முறிந்தது.

அவன், மாமனார் பேருக்கிருந்த எதிர் வீட்டில் குடியேறினான்! அந்த வீட்டில்தான் இன்று கூட்டம். கூட்டத்துக்குக் காரணம் மறுநாள்தான் தெரிந்தது. பத்திரிகையில் அவனைப் பற்றிய விரிவான செய்திகள் வந்திருந்தன!

கும்மாணத்தில் முடியாமல், அவனை மெட்ராசுக்குக் கொண்டு போயிருப்பதாக பேப்பரில் இருந்தது!

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

பகல் வண்டியிலேயே நானும் கமலமும் கிளம்பினோம்.

எக்மோரில் இறங்கி, ஆட்டோவில் ஏறிய போது, என் உடம்பெல்லாம் ஆடியது!

ஆஸ்பத்திரியில் அவனிருந்த அறையை அடைவதற்குள் என் உணர்வுகளே இற்றுப் போய் விட்டன!

வாசலில் சம்பூர்ணத்தைப் பார்த்தேன்.

என்னைப் பார்த்த க்ஷணமே 'ஓ'வென ஒப்பாரி வைக்கத் தலைப்பட்டாள்!

அவள் அருகிலிருந்த பிள்ளைகள் அழுத படியே கமலத்தைக் கட்டிக் கொண்டன!

சம்பூர்ணத்தின் கடைசித் தம்பி ஓடி வந்து, என்னை எதிர்கொண்டு அழைத்துச் சென்றான்.

அறையினுள்ளே நுழைந்து, அவன் படுத்திருந்த கட்டிலைப் பார்த்த போது... சுடு நெருப்பால், யாரோ என் நாபியைச் சுட்டார்கள்!

மூளி நாயனம் போல் கிடந்த கிடையில், அவன் மூக்கிலும் வாயிலும் குழல்கள் செருகியிருந்தன!

சீவாளியில் வைத்த இதழ் பிரியாமல், மூச்சு முட்ட வாசிக்கும் நாயனக்காரன், இரவல் மூச்சை இழுத்துக் கொண்டிருந் தான்!

அவன் உடம்பைச் சுற்றி இருந்த வித விதமான குழாய்களைப் பார்த்த போது? எனது குடல் சுருண்டு மேலேறியது!

என் தலையில் 'மடேர்' என அடித்துக் கொண்டு, அவன் மேல் விழ இருந்தேன்.

சின்ன மைத்துனன் என்னைத் தாங்கிப் பிடித்து வெளியே கொண்டு வந்தான்.

''பொறுமையா இருங்க அத்தான்! எப்படியும் காப்பாத்திடுவாங்க. ஒரு ஆப ரேஷன் பண்ணா எல்லாம் சரியாப் போகும்னு பெரிய டாக்டர் சொன்னார்.''

''அவனே நாராய்ட்டான்! இன்னும் என்னத்தை அறுத்துப் பார்க்கப் போறாங்க? - அப்படி அவனுக்கு என்னன்னு சொல் றாங்க?''

சின்ன அத்தானோட கிட்னி ரெண்டும் கெட்டுப் போச்சாம்! அதனால வேறே ஒருத் தருதை எடுத்து வெச்சுத் தச்சா, நல்லாயிடு வார்னு சொல்றாங்க!''

''ரெண்டு நாளா சொல்லிக்கிட்டே இருந்தா எப்படி? - செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டியதுதானே!'' - என்று பரபரத் தேன்.

அப்போது அங்கே வந்த டாக்டர், ''அதுக்குத்தான் முயற்சி செய்துக்கிட்டிருக் கோம். அவருக்குப் பொருத்தற மாதிரி கிடைச்சுட்டா, இப்பவே செய்துடலாம்!'' என்றார்.

''என்னுது பொருந்துங்களா, டாக்டர்? - அப்படி ஒண்ணு நடந்தா அதில அவனை விட நான்தான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணி யிருக்கணும்!''

''பேஷா முயற்சி பண்ணலாம்! நீங்க ரெடின்னா?''

''ரெடி என்ன, ரெடி? - எங்க குடும் பத்திலே பரம்பரை பரம்பரையா சாகாத அந்த வித்வாம்சத்தை, சாகாமெ காப்பாத்த நான் சாகவும் தயார்!''

''யாரும் சாக வேண்டியதில்லே! உங்க ளது அவருக்குப் பொருந்தினா போதும்!''

''என்னுது எல்லாமே அவனுக்குப் பொருந்தும்! இதுவரை அப்படித்தான் பொருந்தி இருக்கு. அவன் எப்பவுமே யோக்கியக்காரன்!''

அந்த ஆஸ்பத்திரிப் படுக்கையில் நானும் அவனும் அருகருகே கிடந்தோம்!

எங்க அப்பாரின் ஆசைப்படி நாங்க ஜோடி நாயனம் வாசிக்கவில்லை என்றால் என்ன? அவன் இனி வாசிக்கும் வாசிப் பில் என் அங்கம் பங்கு கொள்ளுமல் லவோ!

அப்பாடா! இப்பவாவது ஜோடி சேர்ந் தோமே!

என் காதுகளில் தேனாய், அவன் ஊதும் மத்திமாவதி புல்லரிக்க வைத்தது!



விடியற்காலை ஆவின் விற்பனை நிலையங்களுக்கு விஸிட் செய்து தில்லுமுல்லு செய்பவர்களைப் பிடித்து சஸ்பெண்ட் பண்ணுவது, ஜவ்வாது மலைக்கு முன்னறிவிப்பு இல்லாமல் சென்று சந்தனக் கட்டை கடத்தலுக்கு உதவியாக இருக்கும் வனத்துறை அதிகாரிகளைக் கையும், களவுமாகப் பிடிப்பது என்று படு சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் அமைச்சர் ஜெயகுமார்.

சென்னை ராயபுரம் தொகுதியில் நின்று ஜெயித்த, இந்த இளைஞரை நம்பி, மீன்வளத் துறை, கால்நடைத் துறை,

அமைச்சர் ஜெயகுமார்:–

"முடிவெடுக்கும் உரிமையை முதல்வர் கொடுத்திருக்கிறார்"

பால்வளத் துறை, வனத்துறை என்று முக்கியமான பொறுப்புகளைக் கொடுத்து அமைச்சராக்கி இருக்கிறார் ஜெயலலிதா.

கிரீன்வேஸ் சாலையில் சற்று உள்ளடக்கமான பங்களா ஒதுக்கப்பட்டிருக்கிறது இவருக்கு. காலை ஏழு மணி முதலே, கட்சித் தொண்டர்கள், பொது மக்கள் என்று அமைச்சர் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரையும் தனித்தனியே சந்திக்காமல், பொதுவாகவே நின்று மனுக்களை வாங்கிக் கொள்கிறார். வேலை வாய்ப்பு, பால் கார்டு என்று பலதரப்பட்ட மனுக்கள்.

''ஏம்பா, நான் ராயபுரத்துக்கு மட்டும் அமைச்சரல்ல; தமிழ்நாடு முழுவதும் கவனிக்க வேண்டும்'' என்று ஒரு தொண்டரிடம் சிரித்தவாறு சொல்கிறார்.

அதற்குள் உதவியாளர் ஒருவர் அமைச்சரின் காதைக் கடிக்கிறார்.

அமைச்சரின் முகம் மாறுகிறது.

''இந்த போலீஸ் ஸ்டேஷன் விவகாரத்தில் எல்லாம் நான் தலையிட மாட்டேன். இனிமேல் இதுபோன்ற விஷயங்களை என்னிடம் சொல்லாதீர்கள்'' - என்று கடுகடுப்பாகப் பேசுகிறார்.

அமைச்சருக்குச் சொந்த ஊர் ராயபுரம்தான். மீனவக் குடும்பம். அப்பா துரைராஜ் (தி.மு.க.) கவுன்ஸிலராக இருந்தவர். அப்படி இருந்து கொண்டே, தியேட்டரில் டிக்கெட் கொடுக்கும் வேலையும் செய்து வந்தாராம். அமைச்சரின் குடும்பத்தினர் பலர் இன்னமும் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டுக் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

''நான் மிக எளிய குடும்பத்தில் பிறந்தவன்; அதனால் எனக்கு ஏழை மக்களின் பிரச்னைகள் நன்கு தெரியும் என்பதால்தான் என்னை, முதல்வர் அமைச்சராக்கி இருக்கிறார் போலிருக்கிறது'' என்று சொல்கிறார் ஜெயகுமார்.

அமைச்சர் குடும்பத்தில் ஜெ. கோஷம் ஓங்கி ஒலிக்கிறது! அம்மா பெயர் ஜெயலட்சுமி, மனைவி பெயர் ஜெயக்குமாரி. குழந்தைகள் மூன்று பேரின் பெயர்களும் ஜெ.வில்தான் ஆரம்பிக்கின்றன.

''என்னுடைய நெருங்கிய உறவினர்களில் ஒன்பது பேர் பெயர்கள் ஜெ. என்ற எழுத்தில்தான் ஆரம்பிக்கின்றன. இது திட்டமிட்ட விஷயமல்ல, இயல்பாக நேர்ந்தது'' என்று சொல்லிப்

பெருமைப்படுகிறார் அமைச்சர்.

''1972-ல் தலைவர் கட்சி ஆரம்பித்த போது நான் ஏழாம் வகுப்புதான் படித்துக் கொண்டிருந்தேன். சட்டக் கல்லூரியில் படிக்கும் போதுதான் தீவிரமான அரசியலுக்கு வந்தேன்'' என்று சொல்லும் ஜெயகுமார், ஜெ. வெளியூர் சுற்றுப் பயணம் செய்தால், நண்பர்களுடன் அவர் பின்னால் பாதுகாப்புக்காகச் செல்வாராம். கட்சியின் எல்லா போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். ஜெ பிறந்த நாளின் போது ரத்ததானம், கண்தானம் முகாம் நடத்தியிருக்கிறார்.

''மக்களிடம் இறைச்சி உண்ணும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும்; அதனால் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று சமீபத்தில் நீங்கள் பேசியதாகக் கேள்விப்பட்டோமே!''

''அதை ஒரு யோசனையாகத்தான் சொன்னேன். நிர்ப்பந்தப்படுத்தும் நோக்கில் அல்ல. அசைவ உணவில் பல சத்துக்கள் இருக்கின்றன. உதாரணமாக மீன் அதிகமாகச் சாப்பிட்டால் கண்ணுக்கு நல்லது. எங்கள் குலத்தில் கண்ணாடி போட்டிருப்பவர்கள் மிகவும் குறைவு. இறைச்சியில் புரதச் சத்து அதிகம். இவற்றைச் சாப்பிடும் பழக்கம் அதிகமானால், தேவை அதிகரிக்கும். அதனால் கிராமப்புறங்களில் மக்கள் இவற்றை நிறைய வளர்ப்பார்கள். கிராமப் பொருளாதாரம் உயரும். இந்த அடிப்படையில்தான், இறைச்சி சாப்பிடுவதைப் பற்றிப் பேசினேன்.''

''உங்களுக்கு முடிவுகள் எடுக்கும் சுதந்திரத்தை முதல்வர் வழங்கியிருக்கிறாரா?''

''கொள்கை சம்பந்தப்பட்ட முடிவுகள் பிரச்னையான விஷயங்கள் தவிர, வேறு விவகாரங்களில் எங்களுக்கு முடிவெடுக்கும் உரிமையை முதல்வர் கொடுத்திருக்கிறார். அவர் எங்களுக்குச் சொன்ன ஆலோசனை, ''பொது மக்களின் நன்மையைக் கருதித்தான் முடிவெடுக்க வேண்டும்; கட்சி நலன், சொந்த ஆதாயம் இவற்றைப் பார்க்கக் கூடாது என்பதுதான்.''

அமைச்சர், மூன்று முக்கிய விஷயங்களில் இப்போது மிகவும் மும்முரமாகி இருக்கிறார். 1. சந்தனக் கட்டை திருட்டைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் காட்டிலாகா அதிகாரிகளுக்கு நவீன ஆயுதங்கள் வழங்குவது, 2. சோளிங்கநல்லூரில் மூன்றாவது பால் பண்ணையை விரைவில் செயல்பட வைப்பது, 3. ராயபுரத்தையும் வடசென்னையையும் இணைக்கும் பாலத்தை அகலப்படுத்திக் கட்டுவது.

''காட்டு வளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் முதல்வர் மிகவும் உறுதியாக இருக்கிறார். 'அதற்காக குண்டர்கள் சட்டத்தையும் பயன்படுத்தலாம் என்பது அவரது அபிப்ராயம். அவருடைய வழிகாட்டுதலில் எடுத்த காரியம் அனைத்தையும் நன்கு முடிப்பேன்'' என்று நம்பிக்கையுடன், விடைகொடுத்தனுப்புகிறார் அமைச்சர் ஜெயகுமார்.

சந்திப்பு : ப்ரியன்

படம் : ஆர். கே. ஸ்டுடியோ



கேள்விக்குறியாய்

தந்தியை ஸ்கூலுக்கே அனுப்பியிருந்தார்கள். அனுப்பியவர் பெயர் தெரியவில்லை. தியாகராஜனும் பார்க்கவில்லை.

நேராய் ஹெச். எம். ரூமுக்கு சென்றான். விஷயம் சொன்னான். ஹெச்.எம்.,

''அடாடா!'' என்றார். ''போங்க... போங்க! முதல்ல போய் அதப் பாருங்க. இருந்து எல்லாம் முடிஞ்சப்புறம் மொள்ள வாங்க. ஒண்ணும் அவசரமில்லை.....''

கிளாஸை அமுதா டீச்சரிடம் விட்டு விட்டு அவசரமாய் வீடுவர. வத்சலா கிரைண்டரில் மாவுக் கையுடன்...

''என்ன அதுக்குள்ள்...? ஸ்ட்ரைக்கா?''

''உள்ளே வா சொல்றேன்...''

விஷயத்தின் விபரீதம் ஓரளவு புரிந்து கொண்டாள்.

''என்ன?''

''அப்பா....''

''அப்பா?''

''செத்துட்டாராம். தந்தி வந்துச்சு.''

''ஐயோ...'' என்று போட்டது போட்ட படி உட்கார்ந்துவிட்டாள்.

''நாலு நாள் முன்ன கூட லெட்டர் வந்துச்சே...!''

''சரி... பேசிப் பிரயோஜனமில்லை.... கிளம்பு...''

''பசங்க?''

''என்ன செய்யலாம்?''

''நீங்க முன்னாடி போங்க. சாயங்காலம் பசங்க வந்ததும் வீட்டைப்பூட்டி, சாவியைப் பக்கத்தில குடுத்திட்டுக் காலைல பத்துக்குள்ள வந்துர்றோம். இப்ப ஸ்கூலுக்கு ஆள் விட்டு கலாட்டா வேணாம்... கிரிஜா காலையில கேட்டா... 'தாத்தாவப் பாக்கணும்... போலாமா'ன்னு....''

உடைமாற்றாமல், ஒன்றும் செய்யாமல் வியர்வை முகத்துடன் அப்படியே போய் பஸ்ஸில் உட்கார்ந்தவுடன் காற்று குளிர்ச்சியாய் அலையடித்தது.

பஸ் புறப்பட்டு வேகம் பிடித்தது.

மனசின் ஓர் ஓரத்தில் மெல்ல அந்த வலி ஆரம்பித்தது. மெல்ல நெஞ்சுக் கூட்டுக்குள் பரவுவது போல் இருந்தது. கிராமத்துக்குப் போய் நாலு வருஷமோ என்னவோ, கணக்கு சரியாக நினைவில்லை. அம்மா செத்து தந்தி வந்த போது போனது. அதற்குப் பின் இப்போதுதான் போகிறான். கிராமம் என்றாலே துக்கத்துக்குத்தான் செல்வது என்று ஆகிவிட்ட மாதிரி ஒரு தவிப்பு. போன முறை வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்பா கத்தியது நினைவுக்கு வந்தது.

'இத மட்டும் நீ செய்யலேன்னா என் கட்டை ஒழுங்கா வேகாதுடா....''

அன்று எவ்வாறெல்லாம் அலட்சியப் படுத்தினோம் அப்பாவை என்று நினைவுக்கு வந்து வேதனைப்படுத்தியது.

அப்பா ஒரு எக்ஸ்-சர்வீஸ் மேன். 'காஷ்மீர், அஸ்ஸாம் என்று மலையிலும், காட்டிலும் கஷ்டப்பட்டோம், உருண்டோம் புரண்டோம்' என்று மிலிட்டரிக் கதை பேசி 'போர'டிக்காதவர். ராணுவத்திலிருந்து வந்ததுமே வேறு வேலை தேடாமல் 'நிலம் நீச்சு' என்று பார்த்துக் கொண்டு நிம்மதியாய்க் கழிக்க நினைத்தார். அப்படியே செயல் படுத்தினார்.

பல ஆண்களுக்கும் உள்ள பலவீனம். இளமைக் காலத்தில் டாங்கி, துப்பாக்கி



ஓர் உறவு...

திருவையாறு பாலுசாமி

என்று அங்கே விட்டதை இங்கே பிடிக்க நினைத்து....

ராணுவத்தில் சேரும்முன் காதலர்களாய் இருந்தவர்களாம். வீட்டில் திருமண ஏற்பாடு நடக்க, காதலைப் பற்றி மூச்சு விட தைரியமில்லாமல் 'கட்றா தாலிய' பாணியில் கல்யாணம். சர்வீஸ் முடிந்து திரும்ப, 'இன்னும் காத்துக்கிட்டிருக்கேன்' என்று முப்பத்தெட்டு வயதுப் பெண்' உட்கார்ந்திருக்க... வேறு வழியில்லாமல் போயிற்றோ....?

இதெல்லாம் தியாகராஜனுக்குப் பத்தாவது படிக்கும் போதுதான் தெரியும். பள்ளி விட்டு வந்து கொண்டிருக்க....

''அங்க பார்ரா உன் தங்கச்சி!'' என்றான் ஒருவன்.





''அரசே! பக்கத்து நாட்டு அரசன் நம் நாட்டின் மீது போர் தொடுக்க வருகிறானாம். புதுமையான முறையில் ஓலை அனுப்பியிருக்கிறான்!''

''எப்படி?''

''பலம். பலமறிய ஆவல்!''

- கே.எல். கணேசன்

கையில் சிலேட்டுடன் முழங்கால் வரை பாவாடை... ரெட்டை ஜடை போட்டுக் கொண்டு 'விசுக் விசுக்'கென்று திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தது ஒரு சிறு பெண்.

''எனக்குத் தெரியாம ஏதுடா தங்கச்சி! எங்க வீட்டுக்கு நான் ஒரே பிள்ளை....'' என்று அப்பாவியாய்ச் சொல்ல,

''வீட்ல போய் உங்கப்பாவக் கேளு. விலாவாரியாச் சொல்வாரு'' என்றான் அவன்.

அப்பாவை அணுக தைரியமில்லை. அம்மாவைக் கேட்க, அவர் மூக்கைச் சிந்தி, கண்ணீர்ப் பெருக்கி ஒப்பாரி வைத்து 'அந்தக் கேடு கெட்ட மனுஷன்' என்று சொல்லவில்லை. அமைதியாய் விவரம் சொன்னாள். 'எல்லாம் உனக்குப் புரியட்டும்' என்று ரகசியமில்லாமல் பேசினாள்.

'ஊர்ல இல்லாதத ஒண்ணும் அவர் பண்ணிடலை. ஒவ்வொருத்தன் மாதிரி கொல்லைப்பக்கமா போயி வாசப் பக்கமா வர்லையே....''

தியாகராஜனுக்கு அதிர்ச்சி.

''அவ பாவம். கல்யாணத்துக்கு முன்னாடி உயிருக்குயிராப் பழகியிருக்கா. என்ன பண்ணுவா?'' என்று சர்வசாதாரணமாய்ச் சொன்னாள் அம்மா.

ஆனால் தியாகராஜனுக்கு அருவருப்புதான் வந்தது. கடைசி வரை இவ்விஷயத்தை ஜீரணம் பண்ணவே முடியவில்லை. செயலைச் சாக்கடையாய்ச் செய்துவிட்டு அதற்கு நியாயம் கற்பிக்க அவன் அம்மாவே பேசுவது ஒரு மாதிரியாய் இருந்தது.

'அந்தப் பொண்ணு பெரிய மனுஷியாயிட்டாளாம்' என்று அம்மா பட்டும், பழமும், பூவும் தூக்கிக் கொண்டு ஓட, தியாகராஜன் அன்று முழுவதும் ஊரில் இருப்பதையே தவிர்த்தான்.

அதன் பின் 'ஆசிரியப்பணி அறப்பணி' - என்று அதன் மேல் விருப்பப்பட்டுப் படித்து முடித்து, வேலை வாங்கி, 'இன்னா செய்தாரை ஒறுத்தல்...' என்று திருக்குறளும், சாக்பீசும் கையுமாய் அழகாய்க் குடும்பம் அமைத்தான். சொந்த ஊரின் வாசனையே வேண்டாமென்று தாமரை இலைத் தண்ணீராய் இருந்தான். அம்மா இறந்ததாக ஒரு நாள் செய்தி வந்தது. குடும்பத்துடன் போனான்.

சுத்தமாய்த் தளர்ந்திருந்த அப்பா அன்று தான் அந்தப் பிரச்னையைக் கிளப்பினார்.

அம்மாவுக்கு எரியூட்டிவிட்டு வந்து இரவு பத்துமணிக்குத் திண்ணையோரம் தூணில் சாய்ந்து உட்கார்ந்தான். அப்பாவை யாரோ இலேசாய்த் தாங்கி வந்து பக்கத்தில் உட்காரவைத்தார்கள். நேராய் விஷயத்திற்கு வந்தார். நடுங்கும் குரலில் சொன்னார்.

''மைதிலியோட அம்மா செத்து மூணு வருஷமாயிடுச்சு....''

''யாரு மைதிலி?''

வேதனையாய்ச் சிரித்தார்.

''உன் தங்கச்சி!''

புரிந்து விட்டது.

''சரி..... அதுக்கென்ன?''

''உங்கம்மாவையும் இன்னிக்குக் கொண்டு போய் வச்சிட்டோம். எனக்கும் வயசாய்டுச்சு... நாலு நாளோ, நாலு மாசமோ.....என் ஆயுசு....''

''..........''

''நான் சாகறதுக்குள்ளே அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வச்சிடுப்பா...... அதப் பாத்துட்டேன்னா நிம்மதியாப் போய்ச் சேர்ந்துடுவேன்....''

''எல்லாம் பின்னாடி பாத்துக்கலாம்....''

''அப்படின்னா?''

''தமிழ்லதானே சொன்னேன். பின்னாடி பாத்துக்கலாம்....''

- அழுத்திச் சொன்னான்.

''அப்படிச் சொல்லாதடா தியாகு.... எப்படியாவது நான் இருக்கறப்பவே....''

''எவன் இருக்கான் மாப்பிள்ளை?... வந்தான்னா, 'பொண்ணுயாரு அம்மா யாரு பரம்பரை பாரம்பரியம்' கேக்க மாட்டான்? நீங்க வந்து சொல்வீங்களா?''

''என் பொண்ணுடா.... அவ என் பொண்ணுடா... எவன்டா சொல்லணும்?''

கையைப் பிடித்தவரை உதறினான். தள்ளாடித் தள்ளாடி விழ இருந்தவரை வந்து தாங்கியது பச்சை தாவணி போட்டுக் கொண்டு ஒரு பெண். அப்பா மாதிரியே மூக்கு நீளமாய் இருந்தது.

''டேய்!'' அப்பா கத்தினார். வீடு எதிரொலித்தது.

''இந்தக் கல்யாணம் மட்டும் நீ செய்ய வேண்ணா என் கட்டை ஒழுங்கா வேகாதுடா... சொல்லிட்டேன்....''

கண்ணீர் விட்டவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு 'உள்ள வாப்பா' என்று

அழைத்துக் கொண்டு போனது அந்தப் பெண்.

வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்பா மீண்டும் கத்தினார்.

''செத்தாலும் சும்மா விட மாட்டேன்டா.... உன்ன....''

அன்று புறப்பட்டு வந்தவன்தான். அதன்பின் எப்போதாவது கிராமத்தை நினைத்தால் மனசோரம் துளி ஈரம் கசியும்.

கடிதம் மாதத்துக்கொன்று வரும்.... 'புறப்பட்டு வா....' போக மாட்டான். போனால் என்ன நடக்குமென்று தெரியாதா?

இடையில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எப்போதாவது வத்சலா போய் வருவாள். வந்து 'அந்தப் பொண்ணு....' என்று ஏதாவது முனகுவாள். அதட்டி அடக்கி விடுவான்.

பஸ் ஏதோ பேர் தெரியாத ஊரில் புழுதி மண்ணில் இறங்கி நின்றது. தியாகராஜன் இறங்கவில்லை. பசித்தாலும் மனசு மட்டும் என்னவோ போல் சுற்றிக் கொண்டே இருந்தது.

'அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைத்திருந்தால் நிம்மதியாய்ச் செத்திருப்பார். சாகும்போது என்ன நினைத்துக் கொண்டாரோ? 'பாவி' என்று சபித்திருப்பாரோ? 'மகாபாவி... இப்படி என்னைத் தவிக்க விட்டுச் சாகடிச்சியே.... கட்டை வேகாதுடா....'

தலையை உலுக்கிக் கொண்டான்.

'இப்போது என்ன ஆகும்? அந்தப் பெண் அனாதையா? 'அண்ணன் நீங்க இருக்கையிலே எப்படி அனாதையாகும்?' என்று எவனாவது சொல்லிக் கொண்டிருப்பான். யாருக்கு யார் அண்ணன்? என்ன உறவு முறை இது?'

'ச்சீ! என்ன நினைவு இது? அப்பா செத்துக்கிடக்கும்போது யாரைப்பற்றி நினைப்பது?' - என்னதான் முயன்றாலும் கடைசி கடைசியாய்க் கத்திய கத்தல்தான் ஞாபகம் வந்தது.

'இனியாவது அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். .... யார் மாப்பிள்ளை பார்ப்பது?... பார்க்க வேண்டும்.... எப்படியாவது... இதைச் செய்ய வேண்டும். பாவம்... யாரோ செய்த பாவத்துக்கு அந்தப் பெண் படாதபாடு படுகிறது...'

உறுதியாய் நினைத்துக் கொண்டான்.

பஸ் விடியற்காலை ஊரை அடைந்தபோது கிராமத்தில் எந்த மாற்றமுமில்லை.

வீட்டுக்கு முன் பந்தலில்லை. நாலு பேர் இல்லை. துக்க வீடாகத் தெரியவில்லை... மரணம் நேற்றா இல்லை முன்பேவா? தந்தி லேட்டோ?

கதவு சாத்தியிருந்தது. தட்ட, வந்து திறந்தது அந்தப் பெண். ''அப்பா! அண்ணன்....'' என்று உள்ளே ஓடியது.

தியாகராஜனுக்கு உடம்பு ஜில்லிட்டது.

'அப்பா சாகவில்லையா? உயிருடன் இருக்கிறாரா? எனில் யார் வேலை இது? பொய் தந்தியா....?'

''வாடா தியாகு!'' என்று நான்கைந்து வருடத்திற்கு முந்தைய மூப்பு மாறாமல் அதே தளர்ச்சியுடன் அப்பா படுத்திருந்தார்.

ஒருபுறம் சந்தோஷம் புரண்டது. 'அப்பா சாகவில்லை'.

''யார் வேலை இது?'' தந்தியைக் காட்டினான்.

''பொறுமையா இரு! நான்தான் குடுத்தேன்....''

துக்கமும், சோகமும் பறந்தோட, கோபம் மேலோங்கியது.

''என்ன வேலை இது? மடத்தனமா...!''

''மடத்தனந்தான்... நாலு வருஷமா மாசம் தவறாம லெட்டர் போட்டேன்... வருவ வருவன்னு பார்த்தேன். வரல்லை. எனக்கு வேற வழி தெரியலைடா....''

இவன் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க, அந்தப்பெண்ணைக் காட்டினார்.

''பார்றா! இந்தப் பொண்ணு என்ன பாவம் பண்ணிச்சு? இனியும் அது இப்படியே இருக்கணுமா? சொல்லு.... இப்பவாவது செய்.... அதுக்குத்தான் தந்தி குடுத்தேன்... செய்றியா?''

அந்தப் பெண் நிலைப்படியோரம் ஒண்டிக் கொண்டது.

தியாகராஜன் திரும்பி வாசல்படிக்கு நடந்தான். வாசல் கதவு மேல் கை வைத்துக் கொண்டான். சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டு சொன்னான்.

''எல்லாம் பின்னாடி பாத்துக்கலாம்...''



- பொருசி



வரலக்ஷ்மி வருவாள்

கைலாசத்தில், பரமசிவனிடம் அன்னை பார்வதி கேட்டாள் : ''நாதா! பூலோகத்தில் மக்கள் வறுமையில் வாடுகிறார்களே... அவர்களுடைய நலனுக்காக, தன, தான்ய, ஐஸ்வர்யங்களைத் தரக்கூடிய விரதமாக எதைச் செய்யலாம்...?''

பரமசிவன் கூறினார் : ''தேவி! அத்தகைய விரதம் வரலக்ஷ்மி நோன்புதான். இந்த நோன்பு செய்த ஒரு பெண்ணின் கதையைக் கேள் :- 'குண்டினம்' என்ற பட்டிணத்தில் சாருமதி என்ற பெண்மணி இருந்தாள். சாஸ்திரங்கள் படித்தவள்; இனிமையாகப் பேசும் இயல்பினள்; நிர்மலமான மனத்தை உடையவள். ஒரு நாள் இவள் கனவில் மஹாலக்ஷ்மி தோன்றி,

'உன்னை நானே நாடி வந்தேன். சிராவண மாசம், பௌர்ணமிக்கு முன் வெள்ளிக் கிழமை என்னை நினைத்துப் பூஜை செய்தால் கேட்ட வரம் அனைத்தும் தருவேன்' என்றாள்.

சாருமதி சிலிர்த்துப் போய்க் கண் விழித்தாள். தூங்கிக் கொண்டிருந்த உற்றார் உறவினரையெல்லாம் எழுப்பித் தன் கனவை விவரித்தாள். அவளைப் போலவே அனைவரும் மகிழ்ந்து நோன்பு தினத்தை எதிர்நோக்கலாயினர்.

நோன்பு தினமும் வந்தது. அரிசியைப் பரப்பி அதன் மேல் பூரண கும்பம் வைத்து, வரலக்ஷ்மி அம்மனின் பிம்பத்தை அதில் பொருத்தி, சாருமதி பூஜை செய்தாள். நெய்யில் செய்த பலகாரங்களை நைவேத்தியம் செய்தாள். அவள் மிகவும் சிரத்தையாகச் செய்த இவ் விரதத்தின் பயனாக எல்லா நலங்களும் அவளுக்கு உண்டாயின. அவள் பரம்பரையில் எல்லோருமே இந்த நோன்பைச் செய்யலாயினர்.

''வரலக்ஷ்மி நோன்பின் வரலாற்றை இவ்வாறு பரமசிவனே பார்வதிக்கு எடுத்

◆ உஷா : ஆசைப்பட்டு...





◆ விஜயலக்ஷ்மி : தெலுங்கு தேசத்தில்...



◆ சங்கரி : சுவரில் வரைந்து...

துச் சொன்னதாகக் கதை'' - என்று விவரித்தவர் விஜயலக்ஷ்மி பாலசுப்ரமணியம். "தெலுங்கு தேசத்திலும் இந் நோன்பு மிகவும் விசேஷம்'' என்றார்.

வரலக்ஷ்மி நோன்பின் தனிச் சிறப்பு அது முற்றிலும் பெண்களாலேயே செய்யப் படும் பூஜை என்பதுதான். ஏனைய பூஜைகளில் ஆண்கள் செய்வது போல் இதில் பெண்களே மணையில் அமர்ந்து மஞ்சள் பொடியில் பிள்ளையார் பிடிப்பதில் ஆரம்பித்து நைவேத்தியம், தூப தீப ஆராதனை வரை அனைத்தையும் மந்திரம் ஓதிக் கொண்டு செய்ய வேண்டும்.

எல்லாப் பண்டிகைகளையும் போல் வரலக்ஷ்மி நோன்பும் பக்தியோடு கலைநயமும் அழகுணர்ச்சியும் வெளிப்படச் செய்கின்றது. சுமார் ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே நோன்புக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகி விடும். கலசத்தில் (பூர்ண கும்பம்) நிறைக்கவும் வாழை இலையில் பரப்பவும் அரிசியைக் கல்லின்றிச் சுத்தமாக்குவது முதல் கொழுக்கட்டைக்கு மாவும் விதவிதமான பூரணங்களும் தயாரிப்பது வரை சிறிதும் பெரிதுமான பல வேலைகள். இவை தவிர, வீட்டை விசேஷமாகச் சுத்தம் செய்து, தோரணங்களால் அலங்கரித்து, செம்மண் கரை கட்டிய மாக்கோலமிட்டு, அம்மனைப் பிரதிஷ்டை செய்யப் போகும் இடத்தில் வாழைக் கன்றும், மலர்ச் சரமும் கட்டி, மண்டபம் போன்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அம்மன் பிம்பத்துக்குப் பாவாடை சார்த்தி, பொன்னாபரணம் அணிவித்துப் பூக்களால் அழகாக, விதம் விதமாக அலங்காரங்கள் செய்யலாம்.

பார்த்துப் பார்த்து அலங்கரித்த அம்மனை முதலில் வீட்டு வாசலில், கோலமிட்ட இடத்தில் வைத்து, தீபமேற்றி, கற்பூர ஆரத்தி காட்டி வணங்கி விட்டு, வீட்டுப் பெண்கள் எல்லோருமாகத் தூக்கி, 'லக்ஷ்மி ராவே மா இண்டிக்கி' (லக்ஷ்மி! எனது இல்லத்துக்கு வந்தருள்வாய்) என்று பாடியபடி வீட்டின் உள்ளே அழைப்பார்கள். (அட்டைப் படம்).

அம்மனை அழைத்து வந்து, தயாராய் அலங்கரித்துள்ள மண்டபத்தினுள் அரிசியின் மேல் வைத்துப் பூஜை செய்வார்கள். அம்பாளைப் பாதாதி கேசமாக வர்ணித்து, ஒவ்வொரு அங்கத்துக்கும் ஒரு மலரை அர்ச்சிப்பார்கள். புது வஸ்திரம் சார்த்தி, பொன்னாபரணம் அணிவிப்பார்கள். ஆராதனைகளும் நைவேத்தியமும் முடிந்த பின் மையத்தில் மலர் தொடுக்கப்பட்ட மஞ்சள் கயிறுக்குத் தனியே பூஜை செய்து, அக் கயிறை வயதில் மூத்தவர்கள், சிறியவர்களுக்கு வலது கையில் கட்டி விடுவார்கள். நோன்புச் சரடு கட்டப்படும் போது கையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் ஏந்திய தட்டுடன் அமர்ந்திருக்க வேண்டும்.

நோன்பு இத்துடன் முடியும். வழக்கமாக இது காலை வேளையில்தான் நடைபெறும். மாலையில், அக்கம்பக்கத்துப் பெண்களையும் உறவினர்களையும் அழைத்து, பாடச் சொல்லி மகிழ்ந்து தாம்பூலம் கொடுத்து அனுப்ப வேண்டும்.



◆ மாலதி - சித்ரா : காஸெட் போட்டு...

சில குடும்பங்களில் வழி வழியாகவே நோன்பு செய்யும் வழக்கம் இல்லை. புகுந்த வீட்டில் வழக்கம் இல்லாவிட்டாலும் தம் பிறந்த வீட்டில் இதைச் செய்து அனுபவப்பட்டுப் போன உஷா கிருஷ்ணமூர்த்தி திருமணத்துக்குப்பின் தொடர்ந்து வரலக்ஷ்மி விரதம் செய்ய விரும்பினார். பெரியோரின் ஆசிகளும் சம்மதமும் பெற்று நோன்பை எடுத்துக் கொண்டு செய்து வருகிறார்.

வரமெல்லாம் தருவாள்

புகுந்த வீட்டில் நோன்பு செய்யும் வழக்கம் இருந்தால் மணமான பெண்கள் அந்த நோன்பை 'எடுத்துக்' கொள்ள வேண்டும். இதைத் தலை நோன்பு என்று குறிப்பிடுவார்கள். எடுத்துக் கொண்ட நோன்பைத் தவறாமல் ஆண்டுதோறும் செய்து வர வேண்டும். அநேகம் பெண்கள் வேலைக்குப் போகிற இந்த அவசர யுகத்தில் முன்பு போல் விஸ்தாரமாக வரலக்ஷ்மி விரதத்தைச் செய்ய முடிகிறதா...?

''அலுவலகத்துக்கு 'லீவ்' போடா விட்டாலும், இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே தேவையான பொருட்களைச் சேகரித்து, நைவேத்யத்துக்கான மாவு போன்றவற்றைத் தயாரித்து ஃப்ரிஜ்ஜில் வைத்து எப்படியோ சமாளித்து விடுகிறோம்'' என்று நாம் சந்தித்த பல பெண்கள் கூறினார்கள்.

''என் பிறந்த வீட்டில், கலசத்தில் அம்மன் முகம் வைப்பதோடு சுவரில் பெரிதாக அம்மன் முகத்தை எழுதி, பூஜை செய்வது வழக்கம்'' என்று கூறிய திருமதி சங்கரி இன்னொரு அரிய தகவலும் கொடுத்தார் :

''இப்போதெல்லாம் வெள்ளியில் செய்த அம்மன் முகத்தைப் பயன்படுத்துகிறோம். பண்டைய காலத்தில், தேங்காயில் மஞ்சளால் மூக்கு வைத்து, மையால் கண் வரைந்து, தேங்காயின் இருபுறமும் கருகமணியுடன் கூடிய காதோலையைக் கட்டி அலங்கரித்துதான் அம்மனாக வழிபடுவார்களாம்.''

இன்றைய நாகரிகத்துக்கு ஏற்ப அம்மன் வடிவம் சிறிது மாற்றம் அடைந்துள்ளதோடு, பூஜை செய்யும் முறையிலும் தவிர்க்க முடியாத மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. நோன்பு செய்யப்படும் வெள்ளிக்கிழமையன்று காலை 10.30 - 12.00 ராகு காலம் ஆதலால் எல்லோருமே 10.30-க்கு முன் நோன்பை முடித்து விட முயற்சி செய்வார்கள். இதன் காரணமாக நோன்பு மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்துச் செய்விக்க வேண்டிய வைதிகர்களுக்கு ஏக 'டிமாண்ட்'. விளைவு : அனேகர் வீட்டில் காஸட்டில் பதிவு செய்த மந்திரங்களின் உதவியுடன் நோன்பு நடந்தேறுகிறது!

இருபது வருடங்களாக வரலக்ஷ்மி நோன்பு செய்து வரும் திருமதி மாலதிக்கு இந்த காஸெட்டை அறிமுகப்படுத்தியது, சிங்கப்பூரிலிருந்து அதை வாங்கி வந்த சிநேகிதி! மாலதியும் அவரது ஓர்ப்படி சித்ராவும் முதன் முதலில், வைதிகர் நேரத்துக்கு வராத காரணத்தால், தயங்கியபடி தான் காஸெட்டை உபயோகித்தார்கள். ''ஆனால் அதுவே பழகிப் போய் விட்டது. இம் முறையில் இன்னும் நிறுத்தி, நிதானமாகப் பூஜை செய்ய முடிகிறது'' என்கிறார் மாலதி.

காஸெட், ஃப்ரிஜ், மிக்ஸி போன்ற நவீன வசதிகளின் துணையுடன் ஒரு பழைமையான, அழகிய பாரம்பரியம் காப்பாற்றப்பட்டு வருகிறது. எவ்வளவுதான் பொன்னும் பட்டும் கொண்டு அலங்கரித்தாலும் புதுப் பருத்தியைத் திரித்து, நடு நடுவே மஞ்சள் குங்குமம் தடவிச் செய்யப்படும் பருத்தி மாலையும், அதே பருத்தியை வட்டமாக வடிவமைத்து அதன் மையத்தில் குங்குமம் இட்டுச் செய்யும் தாடங்கமும் (காதுத் தோடு) இன்றி வரலக்ஷ்மி விரதம் பூர்த்தி ஆகாது. கேட்கும் வரங்களையெல்லாம் தரும் லக்ஷ்மி, எளிய அலங்காரங்களில் திருப்தி அடைந்து விடுவாள் என்பதை உணர்த்தத்தான் இந்தப் பருத்தி மாலையும் தோடும் அணிவிக்கும் பழக்கம் உருவாகியிருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் குடும்பத்தின் ஆரோக்கியத்தையும் வளத்தையும் வேண்டிச் செய்யப்படும் இந் நோன்பினை இவ்வாண்டு ஒரு விசேஷ வேண்டுதலுடன் செய்க் கடமைப்பட்டிருக்கிறோம். சுபிட்சமும் சௌக்கியமும் நம் இல்லத்தில் மட்டுமின்றி நம் இந்திய தேசமாகிய மிகப் பெரிய குடும்பத்தையும் வந்தடைய வேண்டும் என்ற வேண்டுதல்தான் அது.

– பானுமதி ராமச்சந்திரன்.

அட்டையில் : சுசீலா சுப்ரமண்யம், உமா முரளிகிருஷ்ணா, ஸ்வேதா மோஹன்

வண்ணப்படம், படங்கள் : உத்ரா

கல்கி பொன் விழா நாவல் போட்டி

எழுத்தாளர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்க, கல்கி பொன் விழா நாவல் போட்டியின் முடிவு தேதி, அக்டோபர் 31, 1991 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

O பி. நடராஜன், அன்னூர்.

? கஸ்தான் அஸ்லாம் ஷா கோப்பையை இந்திய ஹாக்கி அணி வென்றது குறித்து?

! ஆகா! இழந்திருந்த நம்பிக்கையை மீண்டும் பெற உதவிய, ஆறு வருடங்களுக்குப் பிறகு கிடைத்த வெற்றி அல்லவா, அது! காப்டன் பர்கத் சிங்குக்கு ஆயிரம் ஆயிரம் பாராட்டுக்கள். முகேஷ் குமாருக்கு ஆயிரம் ஆயிரம் வாழ்த்துக்கள்!

O பத்ம சிவாஜி, நீடாமங்கலம்.

? அண்மையில் தங்கள் மனத்தை நெருடிய சம்பவம்?

! பத்து வயதுச் சிறுமியைத் தன் மனைவி என்று கூறிக் கடத்திச் செல்ல முயன்ற பணக்காரக் கிழட்டு அராபிய ஷேக்கிடமிருந்து விடுபட, ஆகாய விமானத்தில் அமர்ந்தபடி அழுத அமீனாவின் கண்ணீர் இதயத்தை நெருடியது என்றால், அந்தப் பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வந்த மாதர் அமைப்புக்கள் அதில் போட்டி மனப்பான்மை காட்டி அசிங்கப்படுத்தியது வேதனை அளித்தது. அதற்கும் மேல் அந்தப் பெண்ணின் தாயார், 'இந்த அமீனா ஏன் இப்படி என்னைப் படுத்தி எடுக்கிறாள்? என் துரதிர்ஷ்டத்தை என்னென்பது? பேசாமல் கணவனுடன் போக வேண்டியது தானே!' என்று பேட்டி அளித்திருப்பது மனசை ரணப்படுத்தி விட்டது. நாற்பது வருஷ சுதந்திரத்துக்குப் பிறகு இதுதானா நம் மக்கள் நிலை? சிறந்த கல்விக்கு நமது அரசு முன்னுரிமை தந்திருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?

O பேர்ணாம்பட் எம். ரஃபீ.

? ஸ்ரீப்ரியா - ராஜ்குமார் திருமண ஏற்பாடு ஆகி விட்டதே?

! அப்பாடா, தமிழ் நாட்டின் மிக முக்கியமான பிரச்னை ஒன்று தீர்ந்ததுடாப்பா!

O பா. சிவகுமார், குஞ்சரம்.

? ஏ. பி. வி. சர்வீஸ்கள் மாற்றப்பட்டு, மீண்டும் ஜே - வி சர்வீஸ்கள் வருவது குறித்து?



✦ திருமண ஏற்பாடு



✦ கணக்கில் ஃபெயில்



✦ பாரத ரத்னா....

! அவை ஜே - வி சர்வீஸ்கள் இல்லையாம். ஜே - ஆர் சர்வீஸ்களாம்! இப்படி எழுத்தை மாற்ற அவசியம் என்ன என்று நிருபர் கேட்க, 'ஒரு காரணமும் இல்லை - சும்மாதான்' என்கிறார் அமைச்சர். போகட்டும், சர்வீஸின் எழுத்துக்களை மாற்றுவதோடு, தரத்தையும் உயர்த்தினால் தேவலாம். மழைக் காலம் வருகிறது - முதலில் ஒழுகிற பஸ்களை மாற்றலாமே!

O எல். மாறன், மேல்பட்டி.

? ஜெ. கணக்கில் ஃபெயில் ஆகியுள்ளாரே?

! முப்பத்தாறு கோடி விவகாரம்தானே? கணக்கில் ஃபெயில் ஆனால் பரவாயில்லை; சாணக்கியத்தில் தேறி விடுவார்.

O எஸ். ஜெயா ஸ்ரீனிவாசன், சீழப் பனையூர்.

? நேதாஜிக்கு பாரத ரத்னா விருது மத்திய அரசு வழங்கப் போகிறதாமே?

! பட்டேலுக்குக் கொடுக்கப் போக இப்போது இப்படி ஒரு கோரிக்கை எழுந்திருக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால் விசுவாமித்ரர், பீஷ்மர், துரோணர் என்று பலருக்கும் கொடுக்க வேண்டி வரும் போலிருக்கிறது!

O ஆர். எஸ். இராஜ், காரைக்கால்.

? திண்டுக்கல்லில் பன்னிரண்டு வயதுச் சிறுவர் ஐந்து பேர் சேர்ந்து ஒரு கொலை செய்திருப்பது பற்றி?

! நாலு பேர் சேர்ந்து கொண்டால் எதிராளியை மடக்குவது வெகு எளிது என்று சினிமாவிலிருந்துதான் தெரிந்து கொண்டதாக அவர்கள் கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

O சி. காந்திராஜ், செம்போடை.

? ராஜீவ் காந்தியை வல்லரசு

'ஜெ' கணக்கில் ஃபெயில் ஆகியுள்ளாரே?

நாடுகளின் தூண்டுதலின்பேரில் புலிகள் கொலை செய்ததாக அமைச்சர் சவான் கூறியுள்ளாரே?

! வாழப்பாடியார் தேர்தலுக்கு முன் கிளப்பிய புரளியையும் அது அவருக்குப் பெற்றுத் தந்த பிராபல்யத்தையும் வெற்றியையும் பார்த்துப் பொறாமைப்பட்டு நாமும் புருடா விட்டுப் பார்க்கலாம் என்று பேசுகிறாரோ என்னவோ!



◆ வல்லரசு தூண்டுதல்...

O எஸ். நாராயணன், திருப்பாதிரிப்புலியூர்.

? ஹெக்டே பதவி நீக்கம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! நியாயம் ஹெக்டே பக்கமும்; அநீதி கர்நாடகா ஆளுனர் பக்கமும்; விஷமம் சேஷன் பக்கமும் இருப்பதாக எண்ணுகிறேன்.



◆ பதவி நீக்கம்

O டி. சீனிவாசன், சென்னை - 79.

? பாரதீய ஜனதா கட்சியினரை தேசத் துரோகிகள் என்று மாதவராவ் சிந்தியா கூறியதற்கு எதிர்ப்பாக அவரது ராஜினாமாவை அக் கட்சியினர் கோருவது நியாயமானதுதானா?

! ரொம்ப நாளைக்குப் பிறகு சிந்தியா நான் அப்படிச் சொன்னது யாரையும் குறிப்பிட்டு அல்ல என்பது போல் ஏதோ பேசி பூசி மெழுகி இருக்கிறார். இதுவே அவரைக் காட்டிக் கொடுக்கிறது என்றாலும் தவறுக்குத் தக்க பரி காரம்தான் கோர வேண்டும். ராஜினாமா கோரிக்கை அதீதமானது. நாடாளுமன்றத்துக்குள் பிரச்னை எழுப்பலாம்; ஆனால் மூன்று நாள் நடவடிக்கைகள் ஸ்தம்பிக்கும்படி 'செய்தது அநாவசியம். தலைவர் அத்வானியே மன்னிப்புக் கேட்க நேரும் அளவுக்கா சிந்தியா வீட்டெதிரே கலாட்டா செய்வது?



◆ ராஜினாமா கோரிக்கை

O ப. விஜயபாலன், சென்னை.

? பங்காரப்பா?

! எதிர்த்துப் போராடும் அவர், நடுங்காரப்பா! என்றாலும் எதிர்காலம் கேள்விக்குறிதான். கர்நாடகம், ஆந்திரம், தமிழகம் ஆகியவற்றில் உட்கட்சிப் பூசல்கள் புயலாக உருவெடுத்திருக்கும் போது பிரதமர், மாநிலங்களில் தலைமையை எதிர்ப்பவர்களை எச்சரித்துள்ளாரே, பரவாயில்லையே என்று எண்ணும் போது பார்த்தால், மக்களவையிலேயே துணை சபாநாயகர் தேர்வில் கொறடா கொடுத்தும் காங்கிரஸ் எம்.பிக்கள் கட்சியின் ஆணையை எதிர்த்துச் செயல்பட்டிருக்கிறார்கள்! பிரதமரின் செல்வாக்கு தம் கட்சியினரிடம் அப்படி செயல்படுகிறது!



◆ முன்னுதாரணங்கள்

O இரா. பார்த்திபன், வயலூர்.

? சென்ற தலைமுறையினர் இந்தத் தலைமுறையினருக்காக விட்டுச் சென்றவை யாவை?

! பின்பற்றக்கூடிய முன்னுதாரணங்கள். உதாரணமாக, தென்காசியைச் சேர்ந்த ஆதிலட்சுமணன் பள்ளி இறுதிப் படிப்போடு பம்பாய் வந்து, ஒரு சிறிய அறையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த காட்பரி நிறுவனத்தில் டைப்பிஸ்டாகச் சேர்ந்தார். நாற்பது ஆண்டுகளில் அந்த நிறுவனத்தின் விசுவரூப வளர்ச்சியோடு தாமும் வளர்ந்து, அதன் தலைவராகவே விளங்கினார். ''சாக்லேட் மாமா'' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட அவர் பழகுவதற்கு இனியவர். அடக்கமே உருவானவர். தமிழ் அவர் உயிர். பம்பாய் தமிழ்ச் சங்கம் திறம்பட நடக்க, வளர உதவினார். எம்.ஜி.ஆர். பம்பாய் வந்த போது ''தம்பி லட்சுமணன் பம்பாயில் இருப்பதைக் கண்டு கொண்டேன்!'' என்று கூறும் அளவில் அனைவருக்கும் அன்பராக இருந்தார். இன்னும் இரு மாதங்களில் பம்பாய் தமிழ்ச் சங்கத்தின் நாடக அரங்கு திறக்கப்படும் என்ற நிலையில் காலமாகி விட்ட அவர் பெயரை அரங்குக்குச் சூட்டலாமே?



◆ நேருவிஸத்துக்கு குட்பை

O வி . கே. சீனிவாசன், வைப்பூர் ★

? முடிவடைந்த லைசென்ஸ் முறை பற்றித் தங்கள் கருத்து?

! ''நேருவிஸத்தை நாங்கள் கைவிடவில்லை'' என்று பிரதமர் கூறிய போதிலும் யதார்த்தத்தில் 'குட்பை' சொல்லியாகி விட்டது. ராஜாஜியின் சுதந்திரா கட்சி கொள்கைகளுக்கு வெற்றி.

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
வி. கே. சீனிவாசன்,
வைப்பூர் - 606 754
வேட்டவலம் (வழி),
சம்புவராயர் மா. வ.



நேற்றுவரை நந்தவனம்

20

தன்னை வெகு சுலபமாய் ஒரு பெண் ஏமாற்றியதை நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை ரவியால்.

மீரா வந்ததும், தன்னிடம் நிர்மலாவின் சிநேகிதி என்று சொன்னதும் குமரனின் தூண்டுதலினால்தான் என்று அவன் நினைத் தான்.

''உனக்குத் தெரியாது நிம்மி. இளவரசு வுக்கு நான் கார்டியனா இருக்கறதுதான் நல்லது. குமரன், குழந்தையோட அப்பாவா இருக்கலாம். ஆனாலும் பிள்ளையை வளர்க்கற உரிமை எங்களுக்குத்தான்னு நான் கோர்ட்லே கேஸ் போட்டிருக்கேன். இதுக்குப் பக்கபலமா நான் குறிப்பிட்டிருக் கறதே பஸ் விபத்தைத்தான். பெண்டாட்டி ஒழிஞ்சா சரின்னு குமரன்தான் பஸ்ஸில குண்டு வச்சிருக்கான்; இதனால தன் அப்பாவைக் கொலை செய்யக் கூட அவன் தயங்கலைன்னு வக்கீல் விரிஞ்சு விரிஞ்சு எழுதியிருக்கார். இவன் என்னடான்னா - ஒரு பொண்ணை அனுப்பி என்னைப் பத்தி உளவறியறான்.''

''குமரன்தான் இந்த விபத்துக்குக் கார ணம்னு எப்படி நிரூபிக்க முடியும்?''

''அதுதான் என் வேலை. இவனை உள்ளே வைக்கிறதுதான் என் லட்சியமே!''

ரவியின் இத்தனைக் கோபத்துக்கும் குமரன் ஆளானதெல்லாம் மாஜி எம். எல்.ஏ. தருமராஜனின் அடாவடித்தனமான

அனுராதா ரமணன்

நடவடிக்கையினால்தான்.

ஆயிரம்தான் தந்தைக்கும் மகனுக்குமிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும் - குமரன், வெளிப்படையாகத் தன் தந்தையை விட்டுக் கொடுத்ததே இல்லை.

நிர்மலாவின் விஷயத்தில் ரவி எத்தனையோ முறை தன் அக்கா தெய்வாவின் மூலமாகக் குமரனை எச்சரித்தும் அவன் கண்டுகொள்ளவே இல்லை.

''இதப் பாரு... எங்க அப்பாவோட அந்தரங்கங்களைப் பத்தி, நான் இது வரைக்கும் கவலைப்பட்டதே இல்லே. அவர் எப்படி வேணுமானாலும் இருக்கலாம். ஆனாலும் எனக்கு அப்பாவாயிட்ட ஒரே காரணத்துனாலேயே நான் அவரை மதிக்கிறேன். என் காது வரைக்கும் எந்த விஷயத்தையும் கொண்டு வராதே!''

''இப்படிப்பட்ட மானங்கெட்ட குடும்பம்னு தெரிஞ்சிருந்தா கழுத்தை நீட்டியிருக்கவே மாட்டேன்!''

''நாக்கை அடக்கு. என் குடும்பத்தைப் பத்தி மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசினாலும், இந்த வீட்டுல கொலை விழும்...''

''தெரிஞ்சும், தெரியாமலுமா - உங்க அப்பா எத்தனையோ கொலைகளைச் செஞ்சிருக்காரு. நீங்க அவர் பெத்த பிள்ளை தானே.. உங்க பங்குக்குச் செய்யுங்க... முடிஞ்சா - என் கழுத்தை நெரிச்சு, உங்க கொலைகார வாழ்க்கைக்குப் பிள்ளையார் சுழி போடுங்க!''

தெய்வாவின் மூலமாகக் குமரனை எச்சரிப்பதில் தோல்வியுற்ற ரவி ராஜேஸ்வரி அம்மாளிடம் பாய்ந்தான்.

''ஏம்மா, உங்க வீட்டுக்காரருக்கு நீங்களாவது புத்தி சொல்லக் கூடாதா? அந்தப் பொண்ணுவயசென்ன - இவர் வயசென்ன? ஊரே சிரிக்கிறது...''

''நீ ஏன் அந்தத் தெரு பக்கம் போனே.. அதைச் சொல்லு முதல்லே!''

மதில் மேல் போன பூனை - இடமும் போகாமல், வலமும் போகாமல், மேலே விழுந்து பிறாண்டினாற் போல ராஜேஸ்வரி பேச, ரவி மறுபடி ஏமாற்றமடைந்தான்.

அப்பொழுதுதான் பால் நழுவி, பழத்தில் விழுந்தது போல ரவிக்கு, தருமராஜனைப் பழிவாங்க நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது.

நிர்மலா, ரவியுடன் சேர்ந்து வாழத் துடித்துக் கொண்டிருந்தாள். அவளைப் பெற்ற தாய்க்கோ, தருமராஜனின் பணத்தின் மீது கண்...

தருமராஜன் அந்த வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் தடபுடலாக உபசாரங்கள் நடக்கும். நிர்மலா பூ வைத்துச் சிங்காரித்து, பலகாரமும், காப்பியும் ஏந்தி, சோகமாய், உணர்வற்ற ஜடம் போல வருவாள். எந்தவொரு சமயத்திலும் அவர், தன்னைத் தொட அவள் அனுமதித்ததே இல்லை.

''ஏய்... என்னா பொண்ணு நீ... எத்தனை நகை வாங்கிப் போட்டாலும், தொட்டுப் பார்க்கக் கூடாதுங்கறே?''

''உங்களுக்கு நகையத் தொட்டுப் பார்க்கணும்னா கழட்டித் தர்றேன். வாங்கிப் பாருங்க. என்னைத் தொடணும்னா என் கழுத்துல மஞ்சக் கயிறு கட்டியாகணும்...''

''சர்தான் போடீ... என்னமோ சினிமா டயலாக் பேசறே.இந்த வீடு என்னோடது.. நீ கட்டியிருக்கற புடவையிலேயிருந்து - இப்ப கொண்டாந்து கொடுத்தியே காப்பி, பலகாரம்... முச்சூடும் என்னோடதுதான்.. எல்லாத்துலேயும் ரப்பர் ஸ்டாம்ப் குத்தியிருக்கேன்டீ... உன்னால இல்லைன்னு நிரூபிக்க முடியுமா?''

நிர்மலா, இதை ரவியிடம் சொன்ன போது - அவன் கொதித்துப் போய் விட்டான்.

''நிம்மி, நீ எனக்குச் சொந்தமானவ. நான் என்ன சொன்னாலும் கேட்பே இல்லே?''

''இதுலே என்ன சந்தேகம்?''

''அப்ப சரி. இந்த நிமிஷமே நாம ரெண்டு பேரும் மானசீகமா கல்யாணம் கட்டிட்டோம். என் குழந்தைய நீ சீக்கிரமே சுமக்கப் போறே.''

''சுமந்து?''

''அந்தக் கிழவனைச் சந்தியில இழுத்து நிறுத்தி, நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி கேட்கப் போறே.. ஏன்யா, நீதான் பத்திர மெழுதி, ரப்பர் ஸ்டாம்ப் குத்தி, கையெழுத்து கூட போட்டிருக்கியே... புடைவையும், செருப்பும் கூட உன்னுதுதான்கறே.. இப்ப வயித்துல வளர்றதும் உன்னுதுதான்., அதும் பேருல சொத்து வேண்டாம். ஆனா, ஊரறிய அது உன் குழந்தைன்னு ஒத்துக்கன்னு சொல்லு. என்ன சொல்றான்னு பார்ப்போம்!''

முதலில் நிர்மலா தயங்கினாள். தன் வயிற்றில் வளரப் போகும் சிசுவை - பிரச்னைக்குள்ளாக்க அவள் விரும்பவே இல்லை. ஆனால், ரவியை விடவும், தருமராஜனைப் பழிவாங்க அவளுள் ஏகப்பட்ட ரணங்கள் இருந்தன.

மேலும் அவன், கையடித்துச் சத்தியம் செய்து தந்தான். ''கண்டிப்பா உன்னைக் கைவிட மாட்டேன். தருமராஜனை பீஸ்

பிஸ்ஸாக் கிழிக்கப் போடறதுதான் என் நோக்கமே தவிர - உன்னை அவமானப் படுத்தறதில்லே. அந்தாளு அவமானம் தாள மாட்டாம தூக்குப் போட்டுச் சாவட்டும்.''

நிர்மலா துணிந்து விட்டாள். கட்சியில் வலுவான தலைவராக இருந்த தரும ராஜனை எதிர்க் கட்சியினர் அசிங்கமாய் ஏசிப் பேசி, சுவரொட்டிகள் ஒட்ட வேண்டும். நாலு பேர் - அதைப் பார்த்துக் காறி உமிழ வேண்டும்.

அவளுள் எரிந்த நெருப்பின் பிரதிபலிப்புத்தான் தொலைபேசியில் ராஜேஸ்வரி அம்மாளுடன் பேசியது...

ராஜேஸ்வரி அம்மாள் 'ஓ'வென அழுது அரற்றினாள். தர்மராஜன் இதை எதிர்பார்க்கவே இல்லை.

நிர்மலாவைப் பின்னலைப் பிடித்து இழுத்து, நடுக்கூடத்தில் போட்டு மிரட்டினார்.

நிர்மலாவின் தாய், மகள் அடிபடுவது தாங்க மாட்டாதவளாய்க் குறுக்கே விழுந்து தடுத்தாள்.

''என் சாமீ... தர்மதொரை... உங்களைத் தவிர நான் ஒரு ஈ காக்காயக் கூட என் வீட்டு வாசப்படிய மிதிக்க விட்டதில்லையே. டபரா தம்ளர்லேயிருந்து பல்லு குத்தற குச்சி வரைக்கும் என்னுது என்னுதும்பீங்களே... ராசா.. இப்ப இப்பிடி எம் மவளைத் துணி துவைக்கற மாதிரி துவைக்கிறீங்களே. அடுக்குமா... ஆ...ஆ...''

''சனியனே, சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதே. உம் மக எனக்கு வேணும்னே துரோகம் செஞ்சிட்டா.. எதிர்க்கட்சிக்காரன் இவளை விலை கொடுத்து வாங்கிட்டான்.

நீயும் அதுக்கு உடந்தையா இருந்திட்டு, இப்ப ஒப்பாரி வைக்கிறியா... எத்தனை லட்சம் கொடுத்தான்?''

''லட்சமா... ஐயோ, ஐயோ... புகை யிலைக்குப் பணம் வேணுமின்னா கூட என் ராசா, நான் உங்களைத்தானே கேட்பேன்...''

தர்மராஜன் மூளையைக் கசக்கிக் கொண்டு யோசித்தார்.

நிர்மலாவைத் துரத்தி விட்டால் - அந்தக் கணமே எதிரிகள் - இவளைத் தலைவிரி கோலமாய் நிற்க வைத்து போட்டோ எடுத்து, தெருத் தெருவாய் ஒட்டி விடு வார்கள்.'

பிள்ளையைப் பெற்றுக் கொள்ளும் வரையில் பேசாமல் பார்த்துக் கொண்டி ருக்க முடியாது..

எவனுடைய குழந்தைக்கோ எம். எல். ஏ. தர்மராஜன் தகப்பனாவதாவது... அசிங்கம்!

அவர், நிர்மலாவிடம் உறுமினார்.

''பேசாம இதைக் கலைச்சிடு... அப்பத் தான் நீ உசிரோட இருக்க முடியும்..''

''முடியாது!''

அவள் ஒரு பக்கம் பிடிவாதம் பிடிக்க - தர்மராஜன் நேரே வீட்டுக்கு வந்து மருமகள் தெய்வநாயகியிடம் கொஞ்சம் அதட்ட லாகவே சொன்னார்.

''அந்தப் பொண்ணுக்கும் உன் தம்பிக் கும் சினேகமிருக்குதுன்னு ஊருல பேசிக் கிறாங்க. அது எந்த அளவுக்கு உண்மைன்னு எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரைக்கும், என் பாதுகாப்புல இருக்கற பொண்ணு பேரு கெட்டுடக் கூடாது. பேசாம, எங்கூடக் கிளம்பு. அவ வீட்டுக்குப் போய், அங்கேயே வேலையைக் கச்சிதமா முடிச்சிட்டு வந்துடலாம்!''

''மன்னிக்கணும். இது மாதிரி சிசுவைக் கொலை செய்யறதுக்காக நான் டாக்ட ருக்குப் படிக்கலே. மேலும் அவ வயித்துல இருக்கறது என் மைத்துனனோ, இல்லே மருமகனோ.. எதுவா இருந்தாலும் அதை என் கையாலே கொல்ல மாட்டேன்!''

''என்னடீ சொன்னே... யார்கிட்டப் பேசறேன்னு ஞாபகமிருக்கா?''

''சரிதான் போடா... மாமனாரா இருந் தாலும் மரியாதை கொடுத்தாத்தான் மரி யாதை கிடைக்கும்..''

தர்மராஜன், ஒரே தாவலில் முன்னேறி, மருமகளின் கன்னத்தில் ஓங்கி அறைய, ராஜேஸ்வரி பிரமை பிடித்தவளாய் அவ ரையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

அந்தக் கணமே தெய்வா, கணவனிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள்.

குழந்தை இளவரசு, பாட்டியின் இடுப் பில் வீற்றிருந்தது. அதையும் போகிற போக்கில், ஒரு ரோஜாப் பூவைப் பறிப்பது போலப் பறித்துக் கொண்டு போய் விட் டாள்.

தர்மராஜன் மனைவியைப் பார்த்து உறுமினார் :

''என்னடீ... பார்த்துட்டு நிக்கறே?''

''த்தூ... நீயெல்லாம் ஒரு மனுஷன். ஒனக்கு ஒரு பெண்டாட்டி பத்தாம - தெரு வுக்கு ஒருத்தி...''

இதற்குப் பின், ரவி - குமரனுக்கும், தர்மராஜனுக்கும் நினைத்த போதெல்லாம் போன் செய்து மிரட்டுவது சகஜமாகிப் போனது. போதாக்குறைக்கு இப்பொழுது குமரனுக்கும் மீராவுக்கும் தொடர்பு இருப்ப தாகக் கையும் மெய்யுமாய்த் துப்புக் கிடைத்து விட்டது அவனுக்கு..

தன் சொந்தச் செலவில், கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் பெரிசு பெரிசாய்ச் சுவரொட்டிகளைத் தயாரித்து விட்டான் அவன்..

விடிகாலை ஆறு மணிக்கே, போஸ்ட ரில் ஒன்றிரண்டைக் கையில் தூக்கிக் கொண்டு ஆட்டோ டிரைவர் ஞானம் - குமரனின் வீட்டுக் காலிங் பெல்லை அழுத்தி னான்.

ராஜேஸ்வரி அம்மாள் - முதல் நாள் மீராவுடன் பேசிய நிறைவில் - சற்று தெளி வான முகத்துடன் கதவைத் திறந்தாள்.

'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமலா?'

'பெண்டாட்டிக்குக் குண்டு... புதுச் சிட்டு மீராவுக்குத் திண்டு!'

'கள்ளக் காதலியை வீட்டில் வைத்திருப் பவனுக்கா உங்கள் வாக்கு?'

ராஜேஸ்வரியின் முகத்தில் முத்து முத்தாய் வியர்வை...

''என்னடா இது... ஒவ்வொண்ணா கிளம்பறது...?''

''அந்த ரவி செய்யற வேலைம்மா இது.. இந்தப் போஸ்டர்லே ரெண்டை எடுத்து, மீராம்மாவோட அப்பா, அம்மாவுக்கும் தபால்ல அனுப்பியிருக்காங்களாம். சாயந் திரம் பத்திரிகையில வேற கூடக் கூடச் செய்தி வருதுன்னு ரவியோட ஆளுங்க சொன் னாங்க!''

ராஜேஸ்வரியின் பின்னாலேயே வந்த மீரா, இதைக் கேட்டு விக்கித்து நின்றாள்.

(தொடரும்)



பலருக்கு இவர் யாரோ ஒரு வயதான கிழவர். ஆனால் சிட்டி யூனியன் பாங்கிற்கோ ஒரு வி. ஐ. பி. தள்ளாடும் வயதிலும் தவறாமல் வங்கிக்கு விஜயம். சிட்டி யூனியன் வங்கியில் அனைவர்க்கும் இவர் ''அன்புத் தாத்தா.''

வாடிக்கையாளருக்கு நாங்கள் அளிப்பது வெறும் அக்கௌண்ட் நம்பர் மட்டும் அல்ல. இனிமையான வரவேற்பும், கனிவான சேவையும் கூடத்தான்.

உங்கள் ஆசைகள் மற்றும் லட்சியங்கள் யாவும் நிறைவேற உதவுகிறோம்.

"ரொம்பப் பேருக்கு நான் யாரோ ஒரு வயதான கிழவன் ஆனால் சிட்டி யூனியன் பாங்கில் நான் ஒரு வி. ஐ. பி.!"

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

(அன்னியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)

பதிவு அலுவலகம் : கும்பகோணம்-612 001.

சிட்டி யூனியன் பாங்க் :
வளர்ச்சிக்கு - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி.

உங்கள் தேவைக்கு ஏற்ற சிறந்த சேமிப்புத் திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கப் பத்திரங்கள்
- வாமன விஸ்வரூப வைப்புத் தொகை
- காலவரை வைப்புத் தொகை
- அயல்நாட்டில் வாழும் இந்தியருக்கான சேமிப்புத் திட்டங்கள்

MCS/CUB/639



✱ விஸ்வநாதன்.

மாநிலம் மாநிலமாக சைக்கிளை மிதித்தவர்!

ஓ. என். ஜி. சி. யில் பணிபுரியும் விஸ்வநாதனுக்குள் ஓர் உறுத்தல். 'எரி பொருள் சிக்கன வாரம்' என்று நகரங்களில் கொண்டாடி விடுகிறோம். கிராம மக்களுக்கு எரிபொருள் சிக்கனம் பற்றி உணர்த்த வேண்டாமா...?' இந்த எண்ணத்துக்கு வடிகாலாகத் தமது சைக்கிளை எடுத்துக் கொண்டு பயணம் தொடங்கினார் விஸ்வநாதன். முதுகில் ஒரு பை மட்டும் சுமந்து சைக்கிளைத் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, கோவா, மஹாராஷ்டிரம், குஜராத் என்று மாநிலம் மாநிலமாக மிதித்தார். வழியில் கிராமங்களில் நிறுத்தி மக்களுக்கு எரிபொருள் சிக்கனம் பற்றி உணர்த்த, உதாரணங்களுடன் பேசினார்.

விஸ்வநாதன் உணர்த்தியதை விட அவர் உணர்ந்து கொண்டதுதான் அதிகமோ? என்று வியக்க வைக்கின்றன, வழிநெடுகிலும் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள். தமது அனுபவங்களை விவரித்தார் விஸ்வநாதன் :

OO மேற்குத் தொடர்ச்சி மலையின் பல கடினமான பாதைகளில் எதிர்ப்பட்ட குக்கிராமங்களில் வசித்த மக்கள் சைக்கிளையே பார்த்தறியாதவர்கள். (பாதை சைக்கிளுக்கு ஏற்றதல்ல) இவர்கள் என் சைக்கிளைத் தொட்டுப் பார்த்து, அதிசயித்தார்கள். ஓர் ஊரில் பல பேர் ஆர்வத்துடன் தொட்டும் இயக்கியும் பார்த்ததில் சைக்கிளின் 'கியரே' உடைந்து போய் விட்டது. அடுத்த டவுனிலிருந்து ஆளை உதவிக்கு அழைத்து வரச் சொல்லி ரிப்பேர் செய்ய வேண்டியதாகி விட்டது.

OO கர்னாடகாவில் சிக்மளூர் தாண்டி ஒரு காட்டுப் பகுதியில் இரவு தங்க நேர்ந்தது. காரிருளில் வன விலங்குகளின் கர்ஜனை, பூச்சி, வண்டுகளின் ரீங்காரத்தினூடே படுத்து, விடியலில் கானகத்துப் பறவைகளின் இனிய கீதத்தால் எழுப்பப்பட்டது மறக்க முடியாத அனுபவம். எழுந்து புறப்பட்டு, வெகுதூரம் கடந்த பிறகு, கால் பெரிதாக வீங்கி விட்டது. காரணம் புரியாமல் மருத்துவரை நாடிச் சென்றேன். அவர் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் காலில் 'அட்டை' துளைத்து உள்ளே புகுந்திருப்பது தெரிந்தது. ஆபரேஷன் செய்து அதை நீக்கினார்! சிறிது ஓய்வுக்குப் பிறகு பயணம் தொடர்ந்தது.

OO வழியில் தென்பட்ட தொழிற்சாலைகளுள் நுழைந்து அங்கும் எரிபொருள் சிக்கனம் பற்றிப் பேசினேன். கரும்பாலைகளில் தேவாமிர்தம் போன்ற கரும்புச் சாறு கொடுப்பார்கள்.

OO ஒரு நாள் பட்ஜெட் இருபது ரூபாய். நகரங்களில் இந்த பட்ஜெட் மீறாமல், சாப்பிடுவது ரொம்பக் கஷ்டம். கிராமங்களில் மிகச் சுலபம். மக்கள் அன்போடு அளவின்றிச் சாப்பாடு கொடுப்பார்கள். எந்த ஊரிலும் காவல் நிலையத்துக்கு முதலில் போய் நான் வந்திருப்பதன் நோக்கத்தை விவரித்து விடுவேன், புதுமுகம் என்பதால் எழக்கூடிய பிரச்னைகளைத் தவிர்க்க. பையை வைக்கவும் சைக்கிளை

நிறுத்தவும் பாதுகாப்பான இடமும் கிடைக்கும். பல சமயங்களில் போலீசாரே தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போய் உணவு அளித்து உபசரிப்பார்கள்.

OO போலீசிடம் அனாவசியமாக அடி வாங்கிய அனுபவமும் உண்டு. ராஜீவ் காந்தி படுகொலையன்று பம்பாயில் நள்ளிரவுக்கு மேல் கண்ணில் தென்பட்ட தமிழர்களை யெல்லாம் காவல் நிலையத்துக்கு 'ரவுண்ட் அப்' செய்து அழைத்துப் போனார்கள். அவர்களுள் நானும் ஒருவன். வழியில் யதேச்சையாகத் தெரிந்தவர் ஒருவர் வந்ததால் சிறைவாசத்திலிருந்து தப்பினேன்.

OO இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, காவல் நிலையத்தில் வைத்திருந்த மூட்டை முடிச்சை எடுத்துக் கொண்டு தாராவியில் உள்ள ஒரு தமிழ்ப் பள்ளி (காமராஜ் மெமோரியல் ஸ்கூல்)க்குப் போனேன். அங்கு தங்கிய போது ஒரு நாள் மழை பிடித்துக் கொண்டது. இரவெல்லாம் கழுத்தளவு தண்ணீரில் நிற்க வேண்டியிருந்தது. அந்த வெள்ளத்தில் ஆடு, மாடு, கோழிகளின் சடலங்கள் மிதந்து கடப்பதைப் பார்த்த போது பயங்கரமாக இருந்தது!

OO தாராவியில் ஒரு நண்பர் வீட்டில் சில தினங்கள் இருந்தேன். என் ஆயுளில் அது போன்ற அவலத்தை நான் பார்த்ததில்லை. ஒரு வீட்டில் (அதை எப்படித்தான் வீடு என்று ஒப்புக் கொள்கிறார்களோ!) நாற்பது - ஐம்பது பேர் குடியிருக்கிறார்கள். ஓர் இரவுக்கு 5 - 10 ரூபாய் வாடகை ஒருவருக்கு! அசந்தால் எலிகள் கடித்துக் குதறி விடும் என்பதால் இரவெல்லாம் விளக்கை அணைக்கவே முடியாது. அப் பகுதி சிறுவர்கள் பலர் பொறி பொறிக்கும் கடைகளில் கொத்தடிமைகளாகப் பணிபுரியும் சோகம் நெஞ்சைப் பிழிந்தது. இத்தனைக்கும் நடுவில் வீடியோ தியேட்டர்கள் மட்டும் சக்கை போடு போடுகின்றன! ஒரு படம் பார்க்க 1.50 ரூபாய்!

OO கேரளத்தில் சைக்கிள் பயணத்துக்கு நிறைய ஊக்கம் கிடைத்தது. வழி நெடுகிலும் பழத் தோட்டங்கள். இஷ்டத்துக்குப் பழங்களைப் பறித்துச் சாப்பிட அனுமதித்தார்கள்.

OO கொப்பா என்ற இடத்திலிருந்து ஷிமோகாவுக்குச் செல்லும் வரை 75 கி.மீ. தூரத்துக்கு - மருந்துக்குக் கூட மரமே இல்லை. சுட்டெரிக்கும் வெயில்!

OO சிருங்கேரியில் காணக்கிடைக்காத இயற்கை எழிலை ரசித்தேன். மழை பின்னாலேயே துரத்தி வர, அதை விஞ்சிக் கொண்டு வேகமாக சைக்கிளில் செல்ல முயன்றது அரிய அனுபவம்.

இவ்வாறு தமது அனுபவங்களை விவரித்த விஸ்வநாதன் தமது அருமை சைக்கிளை '85 இல் வாங்கினார். மடிப்பாக்கத்திலுள்ள தமது வீட்டிலிருந்து எக்மோரிலுள்ள தமது அலுவலகத்துக்கு, சுமார் 18 கி.மீ. தினமும் இந்தச் சைக்கிளிலேதான் போய் வருகிறார். எரிபொருள் சிக்கலத்தின் நடமாடும் உதாரணம் இந்த 29 வயது இளைஞர்!

– அம்புலு

படம் : உத்ரா

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 19

'' 'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில் இப்படி ஒரு தவறு செய்து விட்டீர்களே?'' என்று சிலர் கடிதம் எழுதுகிறார்கள். இந்தக் கூப்பனில் அல்லவா எழுதி பத்திரப்படுத்த வேண்டும்? வாரா வாரம் அந்தத் தொடரில் நாங்கள் வேண்டுமென்றே செய்து வரும் ஒரு தவறைக் கண்டு பிடித்துக் கூப்பனில் எழுதி, சேகரித்துக் கதை முடியும் வாரம் 5-10 வரி விமர்சனத்துடன் அனுப்பி வைத்தால், மிக அதிகமான தவறுகளைச் சரியாகக் கண்டு பிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஒருவருக்கு மேல் மிக அதிகமான தவறுகளைச் சரியாகச் சுட்டிக் காட்டி இருந்தால் குலுக்கல் முறையில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு. இந்த வாரம் வேண்டுமென்றே செய்யப்பட்ட......

தவறு : ______________ திருத்தம் : ______________

அம்மாவுக்கு எம். ஓ.

ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த தியாகுவுக்கு, அம்மா பணம் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. மேஜையின் முன் அமர்ந்து மணியார்டர் ஃபாரம் ஒன்றை எடுத்து எழுத ஆரம்பித்தபோது, சமையல் கட்டிலிருந்து அவன் மனைவி சுசீலா வந்தாள்.

''என்னங்க, டிபன் ரெடி. சாப்பிட வரவில்லையா?'' என்றவளின் பார்வையில் மணியார்டர் ஃபாரம் பட்டுவிட்டது. ''என்ன இது?'' அருகில் வந்து பார்த்ததும் அவள் முகம் சுருங்கியது.

''நல்லாயிருக்கே. உங்க அம்மாவுக்கு மறுபடியும் இருநூறு ரூபாயா? போன மாசம்தானே சுளையாய் இருநூறு ரூபாய் அனுப்புனீங்க?''

தியாகு சங்கடத்துடன் நிமிர்ந்தான். ''என்ன சொல்றாய் சுசீலா. நான் பணம் அனுப்பாவிட்டால் அம்மா சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவாள்?''

''தாம்பரத்திலே இருக்காரே உங்க தம்பி, அவர் அனுப்பட்டுமே?''

''அவன் என்ன, என்னைப் போல் கவர்மெண்ட் எம்ப்ளாயியா? பாவம், ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் கணக்கு எழுதிக் காலத்தை ஓட்டுகிறான்.''

''நீங்கள் மட்டும் கலெக்டர் உத்யோகம் பார்ப்பதாய் நினைப்போ? பி.டபிள்யூ.டியில் கிளார்க் வேலை. மாசக் கடைசியிலே உன்னைப் பிடி என்னைப் பிடி என்று இருக்கிறோம். இந்த லட்சணத்தில் உங்கம்மாவுக்கு எம். ஓ. பண்ணுவது ஒன்றுதான் குறைச்சல். முதலில் அதைக் கிழித்துப் போடுங்க!''

மனைவியின் கட்டளைக்கு மறுபேச்சில்லாமல் பணிந்தான் தியாகு.

டிபன் முடிந்ததும், முன்



பசு தனபாலன்



"இது 'லோ' பட்ஜெட் படமா...?"

"ஆமா... எப்படிக் கண்டுபிடிச்சீங்க...?"

"கிளிசரினுக்குப் பதிலா வெங்காயத்தை உரிக்கச் சொல்றாங்களே!"

- மயிலாடுதுறை ஸ்வாமி.

னறையில் உட்கார்ந்து சிகரெட் பற்ற வைத்தான் தியாகு. சுசிலா சாப்பாட்டுப் பொட்டலத்தைக் கொண்டு வந்து வைத்தாள்.

''மத்தியானம் சாப்பாட்டுக்குத் தயிர்சாதமும், ஊறுகாயும் வைத்திருக்கிறேன்.''

''சரி.''

''முதல்லே இந்த சிகரெட் பிடிக்கிற பழக்கத்தை நிறுத்தித் தொலையுங்க. நாற்றம் சகிக்கலை. உடம்புக்குக் கேடு. காசும் கரியாகப் போகிறது.''

''சாப்பிட்டதும் சிகரெட் பற்ற வைக்கவில்லையென்றால் எனக்கு மண்டையே வெடித்து விடும். நீ சும்மா வளவளத்துக் கொண்டே இருக்காதே.''

தியாகு ஆபீஸ் புறப்பட்டு விட்டான்.

லஞ்ச் அவரில் தியாகு தயிர்சாதத்தைப் பிரித்துக் கொண்டிருந்தபோது அவன் ஆபீஸ் சகாக்கள் மகேஷும் துரையும் வந்தார்கள்.

''தியாகு, வருகிற சண்டே மகாபலிபுரம் பிக்னிக் போகலாமென்று ஐடியா. நீ என்ன சொல்கிறாய்?''

பிக்னிக் என்றால் இவர்கள் பிரியாணி, விஸ்கி என்று அமர்க்களப்படுத்தி விடுவார்கள். ரொம்ப உற்சாகமாய்ப் பொழுது போகும். செலவுதான் ஒரு நூறைத் தாண்டும்.

போனதடவை பிக்னிக் போய் வந்ததற்காக சுசிலா கோபித்துக் கொண்டு ஒரு நாள் பூராவும் பேசாமல் இருந்தது நினைவுக்கு வந்தது. ஆனால் வருஷம் ஒருமுறையேனும் இந்த மாதிரி கேளிக்கைகளில் ஈடுபடாவிட்டால் வாழ்க்கையே இயந்திர கதியாகி விடாதோ?

''என்னப்பா யோசிக்கிறாய்?'' மகேஷ் விலாவில் இடித்தான்.

தியாகு ''ஜமாய்த்து விடுவோம்'' என்றான் புன்னகைத்தபடி.

மாலையில் தியாகு வீட்டுக்குத் திரும்பியபோது சுசிலா, கோவிலுக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

''சீக்கிரம் குளித்து விட்டு வாங்க. வடபழனி கோவிலுக்குப் போய்விட்டு வருவோம்.''

தியாகு பேண்ட் சர்ட்டிலிருந்து லுங்கிக்கு மாறியபடி அலுப்புடன் சொன்னான். ''கோவிலில் நச நசவென்று ஒரே கூட்டமாக இருக்கும். நீயே போய்விட்டு வா.''

''என்னுடன் கோவிலுக்கு வருவதென்றாலே உங்களுக்கு வேப்பங்காயாச்சே,'' என்ற சுசிலா காப்பி தம்ளரைக் கொண்டு வந்து 'ணங்'கென்று வைத்து விட்டுக் கிளம்பினாள்.

தியாகு நாற்காலியில் அமர்ந்து காப்பியைப் பருக ஆரம்பித்தான். இடையில், அவன் பார்வை அறை மூலையில் பெருக்கித் தள்ளப்பட்டிருந்த காகிதத்துண்டுகள் மீது படிந்தது. என்ன அது?

எழுந்து அருகே சென்று எடுத்துப் பார்த்தான். காலையில் அவன் கிழித்துப் போட்ட மணியார்டர் ஃபாரம் தான் அது.

காலையிலிருந்து நடந்த நிகழ்ச்சிகள் அவன் மனத்திரையில் ஓடின.

'மனைவியின் விருப்பத்திற்கு மாறாக சிகரெட் பிடிக்கிறேன். அவள் எதிர்ப்புக்கு பயப்படாமல் பிக்னிக் போகத் தயாராகிறேன். மனைவி கோவிலுக்கு அழைத்தால் போக மறுக்கிறேன். இப்படி மனைவியின் நியாயமான வற்புறுத்தல்களைக்கூட எதேச்சாதிகாரமாகக் கருதி மறுத்துவிடும் நான், பெற்ற தாய்க்குப் பணம் அனுப்பக்கூடாது என்று அவள் குறுகிய மனத்துடன் கூறியதற்கு மட்டும் உடனே பணிந்து விட்டேனே? இது சுயநலமில்லையா?'

தியாகுவின் மனத்தைக் குற்ற உணர்வு உறுத்த, மேஜை டிராயரிலிருந்து இன்னொரு மணியார்டர் ஃபாரத்தைத் தேடி எடுத்தான். நாளை காலை அம்மாவுக்குப் பணம் அனுப்பி விடுவது என்ற தீர்க்கமான முடிவுடன், எம். ஓ. ஃபாரத்தைப் பூர்த்தி செய்ய ஆரம்பித்தான்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு இல்லையேல், உங்கள் குழந்தை சுறுசுறுப்பாக விளங்கத்தேவையான 'சரி'யான கலோரிகளைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

'சரி'யான கலோரிகள் என்றால் என்ன?
நாம் உண்ணும் உணவில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள் மற்றும் கொழுப்புச் சத்துகள் சரியான சமநிலையில் இருந்து, அவற்றிலிருந்து கிடைக்கும் கலோரிகளுக்குத்தான் 'சரி'யான கலோரிகள் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். இளம் குழந்தைகள் நன்கு வளரவும் சுறுசுறுப்பாக விளங்கவும் இந்த மூன்று முக்கியமான உணவுச்சத்துகள் அவசியம்.
எனவே, உங்கள் செல்லக் குழந்தை 'சரி'யான கலோரிகளைப் பெறுவதற்கு, நீங்கள் ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவை அதற்கு அளிக்கவேண்டும்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளை உணவிலும் இவை தேவை.
ஆனால், குழந்தைகளுக்கு வழக்கமான உணவுகளைக் கொடுத்து, கலோரிகளை சமனிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.
இதற்குப் பரிகாரம் உண்டா?
உண்டு. செரிலாக்–ஊட்டச்சத்துமிக்க சமநிலை திட உணவு. உங்கள் குழந்தைக்கு பால் மட்டுமே போதாதபோது, அதன் நான்காவது மாதம் முதலே செரிலாக் தாருங்கள். செரிலாக்கில் புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துகள், வைட்டமின்கள், இரும்புச் சத்து, மற்றும் கால்ஷியம் அடங்கியுள்ளன. ஆகையால், உங்கள் குழந்தை 'சரி'யான கலோரிகளைப் பெற்று, சுறுசுறுப்புடன் வளரும்; சுவையான செரிலாக்கை ருசித்துச் சாப்பிடும்.
எனவே, செரிலாக்கில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவின் நற்பலன்களை உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும், செரிலாக்கைத் தவிர விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு மற்றும் விட்-வெஜிடெபிளின் நற்பலன்களையும் அளிக்கவும்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21, புது தில்லி–110 029

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்.

Mudra:D:NIL:0018:TAM

REGISTERED NO. M. 4392

Registered as Newspaper in Srilanka

11:2012:TM